03

எல்லாப் பாதைகளும் ரோமாபுரிக்குத்தான்!

04

சர்வதேச அரங்கில் முஸ்லிம் சமுதாயத்தின்
அவல நிலை!

05

இழப்பீடுகள் வழங்குவதில் காட்டப்படும் பாரபட்சமும் புறக்கணிப்புகளும்!

07

தாக்கரேயின் ஆசிபெற்ற
மணிரத்தினத்தின் பம்பாய்

بسم الله الرحمن الرحيم

முஸ்லிம் குரல்

Muslim Kural

මුස්ලිම් කුරල්

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வாரஇதழாக மக்கள் கருத்துக்களுடன்!

07 மார்ச் 2003 - வெள்ளிக்கிழமை
03 - முஹர்ரம் - 1424
சுவடு - 03.
Registered as a Newspaper in Srilanka
தருகை - 10 ரூபா

அண்ணா தி.மு.க வழியில் அஷ்ரஃப் காங்கிரஸா?

(நமது அரசியல் செய்தியாளர்)

முஸ்லிம் அரசியலுக்குள் புதியதோர் அரசியல் கட்சி உதயமாவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து விட்டது போல் தெரிகிறது. முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழு அணியினர் மீதான தடை உத்தரவு காலவரையறையின்றி நீடிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பின் பின், புதிய அரசியற் கட்சி ஒன்றுக்கான ஆரம்ப முஸ்தீபுகள் முடுக்கி விடப்பட்டு விட்டன என்பதை மெய்ப்படுத்தக் கூடிய தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழக்குகளுக்குள் சிக்குப்பட்டு நீதிமன்றமே கதியாகிக் கிடக்கிறது. இரு தரப்பினராலும் தொடரப்பட்டிருக்கும் ஒன்றுக்கு மேல் ஒன்றான வழக்குகளிலிருந்து அது தன்னை விடுவித்துக் கொள்ள பல மாதங்கள் எடுக்கும் போல் உள்ளது. இவ்வழக்குகளில் பிரதானமானவற்றின் தீர்ப்புகள் வரும் வரை, முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் - நீதிமன்ற அரசியலாகவே இருக்கப் போகிறது. இவ்வழக்குகளுக்கான தீர்ப்பின் பின்னும், மேல் முறையீட்டு நீதிமன்றம் வரை பல வழக்குகள் தொடர்கதையாகி நீண்டு செல்லக் கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

யார் M.G.R?

வழக்கு - நீதிமன்றம், நீதிமன்றம் - வழக்கு என நீடிக்கப்படும் சூழலில் இரு அணிகளுக்குள்ளிருந்தும் பலர் மாறிமாறி அணி மாறக் கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.பிரிந்து நிற்பவர்கள் ஒன்றுபட வேண்டும் என்பது முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களது பெரும் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஒற்றுமைக்கான சாத்தியப்பாடுகள் நாளுக்கு நாள் குறைந்து வருவதையே முஸ்லிம் காங்கிரஸ் அரசியலில் நாம் காண்கிறோம்.

கடந்த 25ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி முஸ்லிம் காங்கிரஸின் பெயரால் "முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவினர், நீதிமன்றத் தடை நீக்கப்படும் வரை செயற்பட முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டு விட்டது. அதுவும கால வரையறையின்றி.

நீதிமன்றத் தீர்ப்பு தமக்கு சாதகமாகக் கிடைக்கும் என்ற அதீத எதிர்பார்ப்பில் இருந்த முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவினர். தமக்குப் பாதகமான தீர்ப்பினை அடுத்து அடுத்தகட்ட அரசியல் காய் நகர்தல்களுக்கு தயாராகி விட்டனர் என்பதை அவர்களின் "அஷ்ரஃப் காங்கிரஸ்" முன் மொழிவுகள் உறுதிப்படுத்துகின்றன. தொடர்பு சாதனங்களுக்கு மாற்றுக் குழுத் தரப்பால் தெரிவிக்கப்படும் "அஷ்ரஃப் காங்கிரஸ்" தொடர்பான கருத்துக்கள் - நீதிமன்றத்திலுள்ள வழக்குகளை பாதிக்காத வகையில் முன் எச்சரிக்கையுடன் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. அதாவது "அஷ்ரஃப் காங்கிரஸ்" என்பதை அவர்கள் ஒரு அரசியல் கட்சியாக இதுவரை அடையாளப்படுத்தத் துணியவில்லை.

இந்த முன்னெச்சரிக்கையானது. நீதிமன்றத்திலுள்ள வழக்குகளை பாதிக்காத வகையிலான பாதுகாப்பு ஏற்பாடுகளாக முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுத் தரப்பினரால் கைக்கொள்ளப்பட்டிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது. மறைந்த தலைவரின் இலட்சியத்தினை அரசியற் கட்சிகளுக்கு வெளியில் சாத்தியப்படுத்துவதற்கான கட்சி சாரா நிறுவனமாகவே இப்போது "அஷ்ரஃப் காங்கிரஸை" இவர்கள் அடையாளப்படுத்துகின்றனர்.

தற்காப்புமிக்க இவர்களின் இச்செயற்பாட்டை "முஸ்லிம்களின்" அரசியலுக்குள் புதியதொரு அரசியல் கட்சியாக "அஷ்ரஃப் காங்கிரஸை" உருவாக்குவதற்கான ஆரம்ப அடித்தளமாகவே கருத வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் நீதிமன்றத் தீர்ப்புகள் ரவூஃப் ஹக்கீம் அணிக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்படுமிடத்து, வெளிப்படையாக "அஷ்ரஃப் காங்கிரஸ்" என்பது ஒரு அரசியல கட்சியாக புது வடிவமெடுக்கும் என்பதே நமது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

அஷ்ரஃப் காங்கிரஸ் என்பது தமிழ் நாட்டு அரசியலைப் பின்பற்றிய-திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் வழிவந்த ஒரு பெயர்தான். கருணாநிதியின் அரசியல் போக்கில் அதிருப்தி கொண்டவர்களுக்கு தலைமையேற்று தி.மு.கவிலிருந்து வெளியேறிய எம்.ஜீ.ஆர். அண்ணா தி.மு.காவை ஸ்தாபித்தார் என்பது நமக்குத் தெரிந்த தமிழ் நாட்டு அரசியல் வரலாறு.

இன்று முஸ்லிம் காங்கிரஸ் அரசியலில், ரவூஃப் ஹக்கீமின் அரசியற் செயற்பாட்டின் மீதும் தலைமையின் மீதும் அதிருப்தி கொண்டவர்கள். "அஷ்ரஃப் காங்கிரஸான" வெளிப்படையான அடித்தளத்தை இட்டிருக்கின்றனர். அஷ்ரஃப் என்ற மறைந்த தலைவரின் பெயர் நாமத்தைச் சூடி.

தி.மு.க.விலிருந்து வெளியேறி தமிழ் நாட்டு மக்களின் அதிக ஆதரவைப் பெற்று தமிழக அரசியல் அதிகாரத்தை எம்.ஜீ.ஆர் கைப்பற்றியது வெறும் அண்ணாவின் பெயர் நாமத்தினால் மட்டுமல்ல, எம்.ஜீ.ஆருக்கு அன்று இருந்த சினிமா உலகின் புகழ் காரணமாகப் பெற்ற மக்களின் ஆதரவுடன்தான் அவர் தமிழகத்தி ன் அரசியல் அதிகாரத்தையே கைப்பற்றினார். இப்போது இந்த அஷ்ரஃப் காங்கிரஸில் யார் எம்.ஜீ.ஆர்? அமைச்சர் அதாவுல்லாவா? சுபைர்தீன் ஹாஜியாரா? ஹாபிஸ் நசீர் அஹமட்டா? அல்லது நூர்தீன் மசூரா? என்பதே அஷ்ரஃப் காங்கிரஸ் தொடர்பான கேள்வியாகும்.

உதயனின் உபதேசத்தை நீங்களும் படியுங்கள்!

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் "உதயன்" பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கமிது!

"ஆயுதப் போராட்டமும், அதன் வெளிப்படையாக தொடர்ந்த கொடூரங்களும் சிங்களவர்களையும் தமிழர்களையும் இரண்டு அந்தங்களில் கொண்டுபோய் நிறுத்தின. இந்த இரண்டு இனங்களுக்கும் இடையிலான முரண்பாடு, மூன்றாவது இனமென தம்மைச் சொல்லிக் கொண்ட முஸ்லிம்களுக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்ததுதான் கடந்த கால அனுபவம்.

இரண்டு தசாப்த இனப்போருக்கு மத்தியில் - தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் யுத்தம் பூதாகரமாக வடிவெடுத்த வேளையில் - இரண்டுக்கும் நடுவில் நின்றவாறு தமது இன நலனை வளர்ப்பதில் முஸ்லிம்கள் பெருவெற்றி கண்டனர்.

தங்களுடைய தனிப்பட்டதும், தங்களது இனத்தினதும் நலனைப் பேணுவதற்காக ஆட்சியில் இருந்த சிங்கள பேரினவாத அரசுகளுக்கு முஸ்லிம்களின் தலைமைகள் முண்டுகொடுத்து வந்தன. ஆட்சிகள் மாறமாற தாங்கள் சார்ந்திருக்கும் கூட்டணிகளையும் மாற்றிக் கொண்டு ஆளும் தரப்பைத் தாங்கிப் பிடிக்கும் கைங்கரியத்தை முஸ்லிம் தலைமைகளே செய்து வந்தன.

கொத்துப் பொறியில் ஆட்சிக் கட்டில் ஏறி ஈழத் தமிழர்களுக்கு எதிராக பெரும் இராணுவக் கொடூரங்களைப் புரிந்த சந்திரிகா அரசைக் கூட, சரிந்து விடாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான், அந்தக் கட்சி, சந்திரிகா அரசுக்குத் தான் வழங்கி வந்த ஆதரவை என்று வாபஸ் பெற்றதோ அன்றுடன் சந்திரிகா அரசு ஆட்டம் கண்டு அடியோடு சரிந்தது.

இப்படி தமிழருக்கு எதிரான அரசுகளுக்கு முட்டுக் கொடுத்து வந்த முஸ்லிம் தலைமைக்கு - தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையிலான பூசல் பிரச்சினைகளுக்கு நடுவில் - மத்தியில் - புகுந்து லாபம் ஈட்டிக் கொடுக்கப்படும் முஸ்லிம் தலைமைக்கு, இப்போது தமிழர்களும், சிங்களவர்களும் பூசல்களை மறந்து பிரச்சினைகளுக்கு அமைதி வழியில், சுமுகத் தீர்வுகாண இணங்கிப் போவதைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இரு தரப்பும் தொடர்ந்தும் சண்டையிட்டால் இடையில் வாய்ப்பாகப் பிடுங்கிக் கொள்ளலாம் என்ற தங்கள் எதிர்பார்ப்பு அடிபட்டுப் போனதாக அவர்களுக்கும் கவலை. அதனால்தான் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும் நகர்வுகளை அவர்கள் மேற்கொள்கின்றார்கள்.

தமிழர் தாங்கள் உரிமைகளுக்காக இரத்தம் சிந்தி, பல்லாயிரக்கணக்கில் உயிர்களைத் தியாகம் செய்து, உடைமைகள், சொத்துக்களை இழந்து, உயிர்ப் போராட்டம் நடத்திய போது அவர்களுடன் சேர்ந்து தங்கள் உரிமைக்குக் குரல் கொடுக்க மறந்தவர்கள், தமிழரின் போராட்டத்தை நசுக்கும் சக்திகளுடன் கூடிக்குலாவி, அற்ப சொற்ப சலுகைகளுக்காக அணி மாறி நின்றவர்கள். இப்போது தியாகப் போராட்டத்தின் பயனாக அமைதி வழியில் தீர்வு கிடைக்க வாய்ப்பு ஏற்படுகின்ற போது, தங்கள் உரிமை என்று பேசி அதனைக் குழப்ப முனைகிறார்கள்.

போராட்டம் செய்ய வராதவர்கள், போராட்டத்துக்கு எதிரான சக்திகளுடன் கைகோர்த்து நின்றவர்கள், போராட்டத்தை அழிக்கத் துணைபோனவர்கள் இன்று போராட்டத்தின் விளைவாகக் கிடைக்கப் போகும் தீர்வில் மட்டும் உரிமைப் பங்கு கேட்டு வந்து நிற்கின்றார்கள்.

சரி, நடந்தவை நடந்தவையாகட்டும். அவர்களும் தமிழ் பேசும் மக்களே என்ற அடிப்படையில் முஸ்லிம்களையும் அரவணைத்துக் கொண்டு, அவர்களின் அடிப்படை உரிமை மற்றும் அபிலாஷைகளையும் மதித்து நிறைவு செய்யும் ஒரு தீர்வுக்காகச் செயற்பட தமிழர்கள் தயாராகி நிற்கின்றனர்.

ஆனால், தமிழரின் இந்தத் தாராள மனப்பாங்கையும் புறம் ஒதுக்கிவிட்டு துள்ளிக் குதிப்பதில் முஸ்லிம்களின் தலைமை ஒரேடியாய் இருப்பதாகத் தெரிகின்றது.

இது நல்லதற்கல்ல. முஸ்லிம் தலைமை பொறுப்புடன், யதார்த்தப் புறச் சூழ்நிலைகளின் ஆழ, அகலத்தை உணர்ந்து நிதானத்துடன் செயற்படுவது நல்லது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கட்டத்தில் ஏற்படக்கூடிய சிறு சறுக்கலும் சரித்திரத்தையே மீள முடியாத ஒரு திசைக்கு மாற்றிவிடும். அத்தகைய ஆபத்து நிலைமையை முஸ்லிம்களின் தலைமை உயிர்த்துணர வேண்டிய இக்கட்டான காலகட்டம் இதுவாகும்."

என அப்பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் முஸ்லிம்களுக்கு உபதேசித்துள்ளது.


சேர்!
பேச்சுவார்த்தையில்
தனித்தரப்பாக போவது எங்கள்
கோரிக்கையல்ல சேர்! உங்களுக்குத் தெரியும்
தானே எங்களைப் பற்றி... மக்கள் விடுகிறார்
களில்லை-எங்கள் நிலமையை கொஞ்சமாவது
புரிந்துகொள்ளுங்கள்.
கோபப்பட வேண்டாம் சேர். பிளீஸ் சேர்.....

மாளிகாவத்தை சம்பவம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ந்தும் நீதி மறுப்பு

மாளிகாவத்தையில் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட வன்முறை மேற்கொள்ளப்பட்டு நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. இத்திட்டமிட்ட வன்முறையினால் ஒரு உயிர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் 240க்கு மேற்பட்ட வீடுகள், கடைகள், சொத்திழப்புகள் ஏற்பட்டதும் நாமறிந்ததே. அரபு மத்ரஸா ஒன்றும் முற்றாக தாக்கி சேதப்படுத்தப்பட்டது.

இச்சம்பவத்தின் பின்னால் சிங்கள இனவாதிகளின் கரம் இருந்ததையும் இதுவொரு திட்டமிட்டப்பட்ட கலவரம் என்பதையும் அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், இக்கலவரத்தின் பின்னால் இருந்த சக்திகளை நீதியின் முன் நிறுத்துவதற்கு இதுவரை எதுவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. மாவனெல்லை, கம்பளை, பேருவளை, எலபடகம போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் நடைபெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களுக்கும் இதே நிலைதான் உள்ளன.

மாளிகாவத்தை சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி விசாரணை இதுவரை நடைபெறாததும்; பாதிக்கப்பட்டவர்கள் உரிய நஷ்டஈடுகள் இன்றி தொடர்ந்தும் நடுத்தெருவில் நிற்கும் நிலையும் தொடர்கிறது. அத்துடன் மாளிகாவத்தை மக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும், உரிய முறையில் இதுவரை ஒழுங்கமைக்கப்படவுமில்லை.

பொலிசாரின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட இக்கலவரத்தின் பின்னணி குறித்து நமது மக்களின் நேரடியான வாக்குமூலங்கள் இருந்தும் இக்கலவர சக்திகளுக்கு பின்னணியாய் இருந்தவர்கள், இருந்த அமைப்புக்கள் மீதான சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு அரசாங்கம் ஏன் இன்னும் தயக்கம் காட்டுகிறது என்பது பாதிக்கப்பட்ட மக்களின் கேள்வியாக உள்ளது.

முன்பு இலங்கை முழுவதும் ஆங்காங்கே முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற கலவரங்களைப் போல் மாளிகாவத்தை கலவரத்தையும் மறந்து விடச் சொல்லுகிறார்களா நமது தலைவர்கள்?

அஷ்ரஃப்பின் மரணத்திற்கு அமைச்சரவை நஷ்டஈடு!

தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப்பின் மரணம் தொடர்பாக நீதி விசாரணை நடைபெறாமல் அவருக்கு நஷ்டஈடு வழங்கி விடயத்தை கிடப்பில் போடுவதற்கு முக்கியமான சக்திகள் முயன்று வருகின்றன. இந்நிலையில் தலைவரின் குடும்பத்திற்கு பல லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. தலைவரின் இழப்பினை இந்த இலட்சங்கள் ஈடுசெய்ய முடியாது! ஆனால் அப்பணம் அவரின் குடும்பத்துக்கு உதவியாக இருக்கும்.

பேரியல் அஷ்ரபுக்கு 20 இலட்சம் ரூபாவும் அமான் அஸ்ரபுக்கு 50 இலட்சம் ரூபாவும் தலைவருடைய தாய்க்கு 10 இலட்சம் ரூபாவும் வழங்க அமைச்சரவைக்கு சிபாரசு செய்யப்பட்டது. அமைச்சரவையில் தலைவருடைய தாய் மரணித்ததை சுட்டிக்காட்டியதன் பேரில் அவருக்கு இத்தொகை வழங்கப்படத் தேவையில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதே நேரம், அமைச்சரவையில் இருந்த யாருமே, தலைவரின் மரணத்திற்கான நீதி விசாரணையைக் கோரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்! அதனை ஆதரியுங்கள் ,வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

சமாதான செயலகங்களின் நிலை!

அன்புடன் ஆசிரியருக்கு!

நாட்டின் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டதன் பின்; கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களின் பெரும்பாலான ஊர்களில், சமாதான செயலகம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சமாதான செயலகங்களின் ஊடாக, முஸ்லிம்களின் பாதிக்கப்பட்ட விபரங்கள், அரசியல் தீர்வு தொடர்பான கலந்துரையாடல்கள், தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு போன்ற பல்வேறு முக்கிய விடயங்கள் செயற்படுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டும் இருந்தன.

கிராமங்கள் தோறும் சமாதான செயலகங்கள் திறக்கப்பட்டும் - அதில் பணியாற்றுவதற்கு ஊழியர்கள் நியமிக்கப்பட்டும் இருந்தனர். இச்சமாதான செயலகத்திற்கான அதிக விளம்பரத்தினை பத்திரிகைகளும் செய்தி ஊடகங்களும் முக்கியத்துவமளித்து வழங்கியும் இருந்தன. இச் செயலகங்கள் திறக்கப்பட்டு செயற்படுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முற்று முழுதான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. சமாதான செயலகங்களின் ஊடகவே பேச்சுவார்த்தை, தீர்வு தொடர்பான அனைத்து விடயங்களும் இனி மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்று இச்சமாதான செயலகங்களின் நிலைகளைப் பார்த்தால், மிகவும் மன வேதனையாக உள்ளது.

எனது ஊரான காத்தான்குடியிலுள்ள சமாதான செயலகம் மூடப்பட்டு, அதுவொரு சர்பத் கடையாகும் நிலையில் உள்ளது. சம்பந்தப்பட்ட சமாதான செயலகப் பொறுப்பாளரிடம் கேட்டால் "தலைமையகத்திலிருந்து பணம் வரவில்லை, சம்பளம் கொடுக்க முடியாதுள்ளது. ஏனைய செலவுகளை ஈடுகட்ட முடியாதுள்ளது. ஏற்கனவே இச்சமாதான செயலகத்தால் நான் கடனாளியாகி விட்டேன்." என கையை விரித்து நிற்கிறார். வாழைச் சேனையில் சமாதான செயலகம் இருந்த காரியாலய வீட்டில் ஒரு குடும்பம் மீள வந்து வாழ்ந்து வருவதாக எனது நண்பர் தெரிவிக்கிறார்.

கட்டாயம் செய்யப்பட வேண்டிய பணிகள், நிதி நிலைமைகள் உரிய திட்டமில்லாததன் காரணமாக செய்யப்படாமல் இச்சமாதான செயலகங்கள் திறந்தவுடன் மூடு விழாக் காண்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அனைத்து சமாதான செயலகங்களினதும் நிலை இப்படித்தான் இருக்கும் என்று அவர் முஸ்லிம் குரல் பத்திரிகைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மிக வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

சிங்கள உறுமயின் பூச்சாண்டி!

முஸ்லிம்களை ஆபத்தில் தள்ளிவிடும் அபாயம்!!

கடந்த 26 ஆம் திகதி கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் ஒரு புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவை நடாத்தியவர்கள் சிங்கள உறுமயினர். நூலை எழுதியவர் சிங்கள உறுமயின் தலைவர் சம்பிக்க ரணவாக்க.

புத்தகத்தின் தலைப்பு "சிங்கள இனமும் சிங்களவர்களும்" என்றா நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. "அல்ஜிஹாத் அல் கய்தா" என்பதே வெளியிட்ட நூலின் தலைப்பாகும்.

என்ன? அல்ஜிஹாத்துக்கும் அல் கய்தாவுக்கும் சிங்கள உறுமைக்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா?

நானும் அப்படித்தான் நினைத்துப் போனேன். ஆனால், அவர்களுக்கும் இந்த விசயத்தில் தொடர்பில்லைதான். ஆனாலும் இலங்கை முஸ்லிம்களுக்கும் அல் ஜிஹாத் அல் கய்தாவுக்கு தொடர்புகள் இருப்பதாக கதை விடுவதற்கே இப்படி ஒரு நூல் எழுதப்பட்டுள்ளதை அங்கு போன பின்புதான் அறிய முடிந்தது.

அக்கூட்டத்தில் சம்பிக்க ரணவாக்க இப்படித்தான் சொன்னார். அதனை உங்களின் காதிலும் போட்டு வைக்கிறேன்.

"கிழக்கு மாகாணத்திலுள்ள ஒலுவிலில் முஸ்லிம் அடிப்படைவாதிகள் 30 ஆயிரம் பேர் சேர்ந்து முஸ்லிம் தேசமொன்றை பிரகடனப் படுத்தியுள்ளனர். இப்போது கிழக்கு மாகாணத்தை முஸ்லிம்கள் தங்கள் ராஜ்ஜியமாக மாற்ற திட்டமிடுகின்றனர். வடக்கில் ஈழ ராஜ்ஜியம், கிழக்கில் இஸ்லாமிய ராஜ்ஜியம் இலங்கையை பிரிப்பதே இவர்களின் நோக்கம். உலகில் சிங்களவர்களுக்குள்ள ஒரே நாடு இலங்கை மட்டும்தான் தமிழர்களும், முஸ்லிம்களும் இந்நாட்டுக்கு உரிமை கொண்டாடினால் சிங்களவர்களின் கதி என்னவாவது?"

சம்பிக்க ரணவாக்க இப்படியே பேசிக் கொண்டு போனார். ஓரளவு கூட்டம்தான் வந்திருந்தது. வந்திருந்தவர்கள் சிங்கள உறுமயின் ஆதரவாளர்கள். முன்னாள் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனியாவும் சம்பிக்காவுக்கு பக்கத்தில் இருந்தார். பேச்சில் சூடு பறந்தது. போனவர்களில் நான் மட்டும்தான் முஸ்லிமாக இருந்தேன். சுற்றும் முற்றும் பார்த்தேன் - கூட்டம் நடந்த மண்டபமே முஸ்லிம்களை கொல்ல வேண்டும் என்பது போன்ற உணர்வில் சூடேறி வந்தது. நான் பத்திரிகையாளராக இருந்ததால் ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருந்தது.

சம்பிக்க தொடர்ந்து பேசினார். "திருகோணமலை, பேருவளை, ஜாமியா நளீமிய்யா, மஹரகம கபூரியா அரபுக் கல்லூரிகளில் வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள முஸ்லிம் அடிப்படைவாதிகள் கற்பிக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸை அஷ்ரஃப் உருவாக்கியதும் அது ஹக்கீமின் தலைமையில் இன்று இயங்குகிறது. அஷ்ரஃப் காலத்தில் அந்த கட்சிக்கு ஆயிரம் மில்லியன் டொலர்களை சவூதி அரசாங்கம் வழங்கியது. தொடர்ந்தும் பல மில்லியன் டொலர்களை வழங்கி உள்ளது. அதில் பல மோசடிகள் இடம்பெற்றிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் காங்கிரஸுக்குள் இன்று உட்கட்சிப் பூசல் ஏற்பட்டுள்ளது. எந்த மனக் கசப்புகள் ஏற்பட்டாலும், முஸ்லிம் அடிப்படைவாத சக்திகள்தான் காங்கிரஸுக்குள் இருந்து வருகின்றன. "ஏன் முஸ்லிம்களுக்கு தனிப் பல்கலைக்கழகம், தனிப் பிரதேசசபை? தனி ராஜ்ஜியம்?"

சம்பிக்க ரணவாக்கையின் பேச்சு பேயாட்டம் போட்டது. எழும்பி வருவோமா என்று யோசித்தேன். மனசு இன்னும் என்ன பேசுகிறார் என்பதை கேட்டுப் போ என்றது - கதிரையின் விளிம்பிலிருந்தே பேச்சை தொடர்ந்து கேட்கத் தொடங்கினேன்.

இன்று நாட்டின் வர்த்தக பொருளாதாரம் முஸ்லிம்களின் கரங்களில்தான் இருக்கின்றன. இதை சிங்களவர்களுக்கு மாற்ற வேண்டும். இந்த விடயங்கள் இந்த நாட்டை ஆளும் சிங்கள தலைவர்களுக்கு புரிவதில்லை. பதவிக்கு வரவேண்டும், அதற்காக எந்த அடிப்படைவாதிகளையும் தங்களுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற பதவி மோகம்தான் இவை அனைத்துக்கும் காரணம். நாடு எக்கேடு கெட்டாலும் இவர்களுக்கு என்ன? நாம் இப்படி இருக்க முடியுமா? முஸ்லிம் அடிப்படைவாதிகளிடமிருந்து சிங்களவர்களையும் சிங்கள நாட்டையும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதே எமக்கு முன்னுள்ள சவாலாகவுள்ளது.

வந்திருந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். பின்லேடனுக்கும் அல்காய்தாவுக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கும் உள்ள தொடர்பு பற்றிய விளக்கமான ஆதாரங்கள் இந்த புத்தகத்தில் உள்ளதாகவும் இப்புத்தகத்தை ஒவ்வொரு சிங்களவரும் வாங்கிப் படித்தால் முஸ்லிம்களை இனம் கண்டு கொள்வார்கள் எனவும் அடிக்கடி விளம்பரம் செய்யப்பட்டது.

நம்மைச் சூழும் ஆபத்துகள் பற்றி நாம் சிந்திக்கிறோமா?

பாதுஷா

இந்த மனசு என்னத்துக்குத்தான்?

உச்ச நீதிமன்றங்களே
உங்களால்
மரண தண்டனைத் தீர்ப்பொன்று தரமுடியுமா
என் மனசுக்கு
உலகத்துப் படுபாதகங்களையெல்லாம்
தலையில் சூடிக்கொண்டிருக்கும்
என் சொறி நாய் மனசு
புழுத்துச் சாகவேண்டும்

பலஸ்தீன அப்பாவிகளைக் கொலையுதிர்க்கும்
இஸ்ரேலிய நஞ்சுக்காரர்களே
என் கொடூர மனசைக் கைது செய்து போய்
துப்பாக்கியால் சுட்டுத்தள்ளுங்கள்

என் சொற்கேட்டு நடக்காத
காவாலி மனசு எனக்குத் தேவையில்லை
அணு ஆயுதத்தால் பொசுக்கியேனும்
என் மனசைக் கொல்லுங்கள்

கரிக்காகம் மாதிரி ஒருத்தியைக் கண்டாலும்
அவளின் உள்ளாடைகளின் நிறத்தை
ஆராய்ச்சி செய்யும் தொழில் பார்க்கிற
கழிசறைமனசு எனக்கெதற்கு

பாலூட்டும் அன்னையின்
மார்பிலும்
அங்குல அளவு பார்க்கத்
துடிக்கிற
காம வெறி மனசால்
மானம் மரியாதை எல்லாமே
நாசமாகிறது

கட்டைச் சட்டையில் போகிற
பத்து வயதுச் சிறுமியிலும்
பாலியல் பருகத் தவிக்கிறது
என் பன்றி மனசு

ரோசங்கெட்ட என் மனசின்
கண்களை
தோண்டி எறியுங்கள்
மாவனல்லை முஸ்லிம்களின்
சொத்துக்களைச் சாம்பலாக்கி
மகாவலி கங்கையில் கரைத்த
சிங்களக் காடையர்களே
உங்கள் தீயை
என் மனசில் கொளுத்தி வைக்கலாமே

காத்தான்குடிப் பள்ளிவாயலுக்குள்
சுட்டுக் கொன்றுவிட்டும்
ஏறாவூர் ஏழைக் கிராமங்களில்
வெட்டிக் குதறி கொலை செய்தும்
திரும்பிச் சென்ற விடுதலைப் புலிகளைத்
துரத்திச் சென்றேன்
கொலைகளின் சிறப்புத் தளபதிகளிடம்
என் மனசை காட்டிக் கொடுக்க
தப்பியோடி வந்துவிட்டது.
நரித் தந்திரமான என் மனசு
என்னை ஏமாற்றிவிட்டு.

இந்த வேசித்தனமான மனசால்
என் எண்ணங்கள் பூனைப் பீயாய் நாறுகிறது
அரசியல்வாதிகளின் குண்டர்கள் யாராவது
பச்சைப் பொய்யான என் மனசை
குத்திக் கொலை செய்துவிட்டு
தப்பிச் சென்று விடுங்கள்

எல்லாவற்றிலும் முகப்பாத்தி விளையாடுகிற
என் வழிசல் மனசு என்னத்துக்குத்தான்

-எம்.எல்.எம். அன்ஸார்.

நமது ஆளுமைகள்

மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத்

வரலாற்றுக்கும் தனிமனித வாழ்க்கை சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஏனெனில் சமூக மேம்பாட்டுக்காக உழைத்த சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் சிலரது வாழ்வு நமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. நமது சமூக உருவாக்கத்திற்கு அவர்களது பங்களிப்புக்கள் பக்கத் துணையாக நின்று உரமாகியுள்ளது. நமக்கும் இந்த ஆளுமைகளின் இலட்சியங்களும் இலக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும். அம்மாபெரும் ஆளுமைகளின் பதிவுகளை நமது நிகழ்கால சந்ததியினருக்கும், எதிர்காலத்திற்கும் கையளிப்பதே இத்தொடரின் நோக்கம். நீங்களும் நமது சமூக ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை எமக்கு எழுதலாம்.

(பிரதம ஆசிரியர்)

27 வயது பதியுத்தீன் மஹ்மூத்

இங்கிலாந்துக்கு கல்வி கற்கப் போவதையே அன்றைய பணக்கார, படித்த இளைஞர்கள் விரும்பினர். அவர்களின் கனவும் அதுவாகவே இருந்தது. இங்கிலாந்து சென்று கல்வி கற்றவர்களுக்குத்தான் அந்தக் காலத்தில் அதிக மதிப்பு இருந்தது. இவற்றை பதியுத்தீன் மஹ்மூத் பொருட்படுத்தாது அலிகார் சர்வ கலாசாலைக்கு சென்று கல்வி கற்க வேண்டும் என்பதே பதியுத்தீன் மஹ்மூத்தின் இலட்சியமாகவிருந்தது. இதற்கு பிரதான காரணம் இஸ்லாத்தின் மீதும் இஸ்லாமிய சமூகத்தின் மீதும் கொண்ட காதலாகவே இருந்தது.

27 வயது இளைஞனாக பதியுத்தீன் இருந்தாலும் அவரது நோக்கங்களும், செயல்களும் மிகவும் முதிர்ச்சியுடையதாகவே காணப்பட்டது. எப்போதும் மிகவும் உற்சாகமாகவே காணப்பட்டார். ஆனாலும், அவர் நமது சமூகத்தின் நிலையை சிந்திக்கும் போது திருப்தியடைந்தவராகக் காணப்படவில்லை. முஸ்லிம் மக்களின் எதிர்காலம், சுபீட்சம், கல்வி கலாசாரம், பொருளாதாரத்துறைகளில் காணப்பட்ட பின்னடைவு அவரை மிகவும் பாதித்தது.

தனது மகன் அலிகார் சென்று படிப்பதை அவரது தந்தையும் விரும்பவில்லை. காரணம் பதியுத்தீன் ஒரு புரக்டராக வரவேண்டும் என்பதையே அவரது தந்தையும் விரும்பினார். பதியுத்தீன் தனது தந்தையிடம் கூறினார் "தந்தையே நீங்கள் அடிக்கடி புகழ்ந்து பாராட்டுகின்ற மௌலானா முகம்மத் அலி, மௌலானா சௌகத் அலி போன்றோர் அலிகார் சர்வ கலாசாலையில் தானே உருவாக்கப்பட்டார்கள். அப்படியான ஒரு பல்கலைக்கழகத்திற்கு உங்களின் ஏழு ஆண் மக்களில் கடைசி மகனான என்னை, நமது சமுகத்திற்காக தியாகம் செய்யுங்கள்" என்று கூறினார். தந்தையின் சம்மதம் கிடைத்தவுடன் அலிகாருக்கு பயணமானார் பதியுத்தீன் மஹ்மூத்.

அவர் இந்தியாவுக்குச் சென்ற சமயம்; இலங்கை முஸ்லிம்கள் மிகப் பெரும் அரசியல் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டி வந்தது. அன்று டொனமூர் ஆணைக் குழுவினர் இலங்கையின் சட்டசபையில் முஸ்லிம்களுக்கு இருந்த அங்கத்துவத்தைக் குறைக்க முற்பட்டனர். அக்காலத்தில் இலங்கை சட்டசபைக்கு 3 முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மாக்கான் மாக்கார், என்.எச்.எம்.அப்துல் காதர், ஜனாப் டி.பி.ஜாயா என்பவர்களே அம்மூன்று பேருமாவார். அன்று இருந்த தெரிவுமுறையின் காரணமாக இலங்கை முழுவதும் ஒரு தொகுதியாக கொள்ளப்பட்டு முழு முஸ்லிம்களையும் சட்டசபையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இம்மூன்று பேரும் அனுப்பப்பட்டிருந்தனர்.

சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்ட இம்மூன்று முஸ்லிம் அங்கத்தவர்களுக்கும் பதிலாக ஒரு நியமன அங்கத்தவரை மாத்திரம் நியமிப்பதென்று டொனமூர் கமிஷன் சிபார்சு செய்தது. இந்நிலைமை இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் கவலையையும் ஏற்படுத்தியது. அந்நேரம் இந்திய முஸ்லிம் தலைவர்கள் இங்கிலாந்து சென்று ராணியை சந்திப்பதற்கு புறப்படத் தயாராக இருந்தனர். உடனே இலங்கையில் இருந்த முஸ்லிம் பெரியார்கள் இந்த விடயத்தில் இந்திய முஸ்லிம் தலைவர்களின் உதவியை பெறுவதற்கு பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை நாடினர். அன்றைய நிலையில் இந்திய முஸ்லிம் தலைவர்களின் உதவியை பெறுவது மிக முக்கியமாகவிருந்தது. பதியுதீன் அவர்கள் இந்த விடயத்திற்காக எல்லை காந்தி அப்துல் கபார், முஹம்மது அலி ஜின்னா, மௌலானா சௌகத் அலி போன்ற பலரையும் பம்பாயில் சந்தித்து உரையாடி அவர்களின் ஆதரவைத் திரட்டினார்.

முகம்மதலி ஜின்னாவுடனான உறவு

இந்தியாவிலிருந்த முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து அகில இந்திய முஸ்லிம் லீக்கை ஆரம்பித்திருந்தார்கள். (1906-டாக்கா) இந்தியாவின் இனத்தொகையில் 25 வீதமாக முஸ்லிம்கள் இருந்ததினால் அவர்களது தனித்துவம் பேணப்படுவதற்கான தேவை ஏற்பட்டது. இதன் காரணமாக இந்திய முஸ்லிம்களது அரசியல் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களது உரிமைகளையும், அபிலாசைகளையும் அரசாங்கத்திற்கு எடுத்துரைத்து வந்தது அகில இந்திய முஸ்லிம் லீக். அகில இந்திய முஸ்லிம் லீக்கை ஜின்னா அவர்கள் தவறுதலாக ஒரு பிரிவினைவாத இயக்கமாகவே கருதி வந்தார். எனவே ஆரம்பத்திலிருந்து அதில் சேர்ந்து கொள்வதிலிருந்து பிரிந்தே ஒதுங்கி நின்றார். ஜின்னா அவர்களின் நோக்கு இந்தியத் தேசியமாகவே இருந்தது. இந்தியா காங்கிரஸ் இந்தியாவை அந்நியரிடமிருந்து முற்றாக விடுவிக்கும் கொள்கையை அறிவித்ததுடன் 1931 இல் ஜின்னா அவர்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டார். அப்போது அவருக்கு வயது 55 ஆகும்.

தொடரும்...

மக்களிடமிருந்து மனுக்கள்...

நடவடிக்கைக்காக...



அமைச்சர் அஸ்வர் அவர்கட்கு ஒரு நினைவூட்டல்

நமது நாட்டுக்கும், முஸ்லிம்களுக்கும் சேவை புரிந்திட காத்திருக்கும் தங்களுக்கும் ஒரு விடயத்தை ஞாபகமூட்ட எத்தனிக்கின்றேன். கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1980ம் ஆண்டுக்கு பின்னர் நமது நாட்டின் மக்கள் சனத்தொகையை மதிப்பீடு செய்தது. அவ்வேளை அதன் தரவுகள் இருட்டடிப்புச் செய்யப்படுவதாகவும், இதனால் உண்மையான விகிதாசார புள்ளி விபரங்களை வெளியே கொண்டு வருமாறும் நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்த போது பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தமைக்காக அப்போதே நேரில் பாராட்ட முடியாமைக்கு வருந்தியதோடு, உள்ளத்தால் பாராட்டினேன். உங்கள் முயற்சியால் முஸ்லிம்களின் விகிதாசாரம் கூடியுள்ளது என்ற தகவல் மட்டுமே, அப்போதைய அரசாங்கத்தால் உங்களுக்குரிய பதிலாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே, உங்கள் அன்றைய முயற்சி பூரண வெற்றிபெற இப்போது கூடிய சந்தர்ப்பம் இருப்பதாலும், நீங்கள் அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பதாலும் தங்கள் மூலமாகவே, நமது நாட்டிலே முஸ்லிம்களின் சரியான விகிதாசாரம் வெளிக் கொணரப்படும் என்ற நம்பிக்கையுடன் நாம் உள்ளோம். ஆனால், நீங்கள் பதவிக்கு வந்ததில் இருந்து இதுபற்றி ஒரு மூச்சும் விடவில்லையே?

றாசிக் எம். குவைதீர்கான்,
வடமாகாண முஸ்லிம்கள் அமைப்பு.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் விவசாயக்காணி விடயமாக ஞாபகமூட்டல்

கௌரவ அல் - ஹாஜ் ரவூஃப் ஹக்கீம் அவர்கள்,
கப்பல்துறைகள், துறைமுகங்கள் கிழக்கு அபிவிருத்தி,
முஸ்லிம் விவகார அமைச்சர், கொழும்பு.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்செயல்களினால் இப்பகுதி ஏழை விவசாயிகளான முஸ்லிம்கள் தங்களுக்குரித்தான விவசாயக் காணிகளை பறிகொடுத்த நிலையில் கடந்த இரு தசாப்த காலமாக மிகவும் பரிதாபமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தங்களது சொந்தக் காணிகளில் விவசாயம் செய்து அதன் மூலம் தலைநிமிர்ந்து வாழ்ந்த முஸ்லிம் விவசாயிகள் இன்று தலைகுனிந்தவர்களாக ஊர் ஊராக கூலி வேலை தேடிச் செல்லும் கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வரசின் சமாதான முன்னெடுப்புகள் ஆரம்பித்தவுடன் இப்பகுதி முஸ்லிம்கள் தங்களது காணிகள் மீளக் கிடைக்கும், அதன் மூலம் தமது வாழ்க்கை நிலை உயரும் எனக் கனவு கண்டனர். ஆனால், இந்நாட்டில் சமாதானக் காற்று வீசத் தொடங்கி ஒரு வருடமாகியும் இந்த ஏழை விவசாயிகளின் காணி விடயம் பற்றி எதுவித முடிவும் தெரியாமல் இருப்பது மிகவும் வேதனை தரத்தக்கதாகவுள்ளது. இது விடயமாக தங்களிடம் பல தடவைகள் எமது சம்மேளனத்தினூடாக தெளிவாக விளக்கியுள்ளோம். தாங்களும் உரியவர்களிடம் பேசி விரைவில் தீர்க்கமான பதில் பெற்று தருவதாக வாக்களித்திருந்தீர்கள். கடந்த 24.01.03 எமது சம்மேளனத்தின் தலைவர் தங்களுடன் தொலைபேசியில் இதுவிடயமாக உரையாடிய போது ஒரு வாரத்துக்குள் தகுந்த பதில் தருவதாக கூறியிருந்தீர்கள்.

ஆகவே, இவ்வாண்டுக்கான பெரும்போக அறுவடை ஆரம்பமாகிவிட்டது. இன்னும் சில வாரங்களில் அறுவடை முடிந்ததும் காலபோகத்துக்கான விதைப்பு வேலைகள் ஆரம்பித்து விடும் எனவே தயவு செய்து இதுவிடயமாக தமிழீழ விடுதலை புலிகளுடன் உடனடியாகப் பேசி இப்பகுதி ஏழை முஸ்லிம்களின் விவசாய காணிகளை பெற்றுக் கொள்ள வழிவகுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

யூஎல்.முகைதீன் பாவா ஜே.பி.,
செயலாளர்,
ஏறாவூர் பள்ளி வாசல்,
முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்.

நஷ்டஈடு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு, கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

சென்ற 16.09.2000 இல் இடம் பெற்ற அரநாயக்க ஹெலி அனர்த்தத்தில் கொல்லப்பட்டவர்களுள் எஸ்.எம். றபியூஊன் (ஆசிரியர் தரம் 3-1) என்பவர். இவர் எனது பிள்ளைகளில் ஒருவராவார்.

[illegible] வழங்கப்படும் கொடுப்பனவுகள் என்ற அடிப்படையில் எனக்கு வந்து சேரவேண்டிய கொடுப்பனவு இதுகாலவரை வந்து சேரவில்லை.

இது தொடர்பிலான எனது முறையீட்டினை பலமுறை தங்களுக்குச் சமர்ப்பித்தும் ஞாபக மூட்டியும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தங்களுக்குச் சர்ப்பிக்கப்பட வேண்டிய சகல ஆவணங்களும் முறையாகவும், சரியாகவும் எண்ணாலும், கல்முனை கல்விப் பணிமனையாலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் நடவடிக்கை எடுப்பதில் காலதாமதத்தினை தாங்கள் செய்து கொண்டே இருக்கின்றீர்கள்.

ஐயா! தயவு செய்து இவ்விடயத்தில் உங்களின் உடனடிப் பார்வையையும், நடவடிக்கையையும் எதிர்பார்த்தே இந்தப் பகிரங்க கடிதத்தினை எழுதுகின்றேன். இன்னும் காலங்களை விரையப்படுத்தாது விரைவாக இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து உதவுமாறும் தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

எம்.எஸ்.உம்முல் ஜெஸீமா,
மருதமுனை 04.

ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

பிரதம ஆசிரியர்

எல்லாப் பாதைகளும் ரோமாபுரிக்குத்தான்!!

நடைபெற்று வருகின்ற அரசியல் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களின் அரசியல் நிலைப்பாடுகளை முன்வைத்து, நமது மக்களின் நலனில் நின்று உறுதியாகக் குரல் கொடுக்கக் கூடிய எந்தத் தலைமைகளையும் காணோம்!

இவர்கள் அன்று பேசிய மேடைப் பேச்சுகளும் இவர்கள் நமது மக்களுக்கு அள்ளி வழங்கிய வாக்குறுதிகளும் வெறும் கானல் நீரா என்கிற ஐயப்பாடு இப்போது நமது மக்களிடம் ஏற்பட்டு வருகிறது.

மக்கள் மத்தியில் சந்தேகங்கள் ஏற்பட்டு விட்டால் அதற்கான பதில் வழங்கப்பட்டே ஆகவேண்டும் என்ற ஒரு முக்கியமான அரசியல் சூழலில் "நமக்காகப் போராடுகிறோம்" என்று சொன்ன அரசியல் தலைமைகள் இன்றைய நிலையில் மக்களிடம் வகையாக மாட்டுப்பட்டு நிற்கின்றனர். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தட்டுத் தடுமாறி அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருக்கும் அரசியல் தலைமைகளின் பரிதாப நிலை கண்டு நம்மால் சிரிக்கத்தான் முடியுமா? இல்லையே - அழுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

இப்படியாக.. மன வேதனையின் சுமையுடன் எனது நண்பனொருவன் எனக்கெழுதிய கடிதத்தின் முதல் பகுதிதான் இது. அவனது எழுத்தில் உள்ள நியாயமும் இன்றைய நமது நிலையும், நமது மக்கள் நம்பி மோசம் போய் விட்டார்களே என்கிற ஏமாற்றத்தின் வேதனையையும் பல்லாயிரம் உயிர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற சிங்களப் பெரும்பான்மை கட்சிகளிடம் இருந்து வந்த முஸ்லிம் தலைமைத்துவத்தை மாற்றி நமக்கான ஒரு தலைமைத்துவம் வேண்டும் என்கிற தனித்துவமான அரசியல் உணர்வு நமது மக்களிடம் ஏற்பட்டது. இது மந்திரத்தால் நடந்துவிட்ட அற்புதமா? இல்லையே. நீண்ட காலமாய் அடக்கி ஒடுக்கப்பட்டு பாதுகாப்பற்ற சமுதாயமாக, அரசியல் அநாதைகளாக இருந்து அனுபவித்த துயரங்களின் வடுக்களுடன்தான் "இனியும் இரவல் தலைமையில் நமது சமூக விடிவு சாத்தியமில்லை" என்கிற நமது மக்களின் முடிவின், உறுதியின் வெளிப்பாட்டின் வடிவமல்லவா நமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். இத்தனித்துவமான அரசியல் தலைமையின் உருவாக்கம் நமது அரசியலில் ஒரு நீண்ட கதையுமல்லவா? எனது மூத்தவாப்பா அனுபவித்ததை, எனது வாப்பா அனுபவித்ததை, நான் அனுபவித்ததை, எனது மக்கள் அனுபவிக்கக் கூடாது என்ற நமது மக்களின் அரசியல் உறுதியில் இருந்துதானே நமக்கான அரசியல் தலைமை உதயமாயிற்று.

1987 இல் நடைபெற்ற இலங்கை இந்திய ஒப்பந்தமானது நமது மக்களின் அரசியலில் பெரும் நெருக்குவாரத்தையும் தனித்துவ அரசியல் மறுப்பினையும் வெளிப்படுத்தி நின்றது. முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்ற அரசியல் அந்தஸ்த்தை அவ் ஒப்பந்தம் நிராகரித்தது. தமிழ் பேசும் மக்கள் என்கிற அடையாளத்தின் ஊடாக தமிழ் தேச மேலாதிக்கத்தினுள் முஸ்லிம்களை உட்தள்ளியது. தமிழ் இயக்கங்களின் நெருக்குதல் நமது மக்களின் வாழ்வை சிறைப்படுத்தியது. அவலங்களும் அடக்குமுறைகளும் குவிந்தன நமது மக்கள் மீது....

அன்று ஐக்கிய தேசியக் கட்சியில் முஸ்லிம் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் கைகட்டி, வாய் பொத்தி மௌனம் காத்தனர். அவர்களால் நமது மக்கள் மீது விரிக்கப்பட்ட வஞ்சக வலையை உடைத்தெறிய முடியவில்லை. அவர்கள் வெறும் பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக மட்டுமே இருந்தனர். முஸ்லிம்களின் தனித்துவ அரசியல், கலாசார, பொருளாதார தாயக உரிமைக்கு போராடுபவர்களாக அவர்கள் இருக்கவில்லை. அவர்களால் முடியாது என்ற போது "முஸ்லிம்கள் தங்களுக்கான தனித்துவமான அரசியல் இயக்கத்தை உருவாக்கினர். அது நமது மக்கள் மத்தியில்



முஸ்லிம்களுக்கான ஒரு தேசிய அரசியல் இயக்கமாக வலுப்பெற்று நின்றது. நமது மக்களின் பாதுகாப்பும், நமது அரசியல் உரிமைகளையும் பெற்றுத் தருவதே அதன் இலட்சியம் எனச் சொல்லப்பட்டது. அந்த அரசியலிலும் 15 வருடங்களை நமது மக்கள் கடந்தனர்.

இவர்கள் நமது மக்களுக்கு வழங்கிய உன்னதமான அரசியல் வாக்குறுதிகளை உரசிப் பார்க்கும் தருணம் இதற்கு முன் இந்த 15 வருடங்களில் இப்படியான இக்கட்டான சந்தர்ப்பங்களாக வரவில்லை. ஆகவே, அவர்களும் அவர்களது வாக்குறுதிகளைத் தொடர்ந்தனர். எம்.பியாகினர். பிரதி அமைச்சர்களாகினர். அமைச்சர்களாகினர், தனித்துவமான தலைமைகளுமாக ஆகினர்.

வரலாறு எப்போதும் ஒரே சீரில் ஓடுவதில்லைதானே! 2002 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் போன்ற மிக முக்கியமான ஒரு அரசியல் காலகட்டமும் வந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் போல் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதிலும் அதே அரசியல் வெளிப்பாடுகள்தான் இருந்தது. "முஸ்லிம்களை இனப்பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்படாதவர்கள் என்றது" அப்புரிந்துணர்வு ஒப்பந்தம், முஸ்லிம்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதில் இருந்து முற்று முழுதாகத் தவறியது அப்புரிந்துணர்வு ஒப்பந்தம்; எமது தாயக உரித்து; எமது பொருளாதாரம், எமது மக்களின் பாதுகாப்பு எதுவுமே அதில் உறுதிப்படுத்தப்படவில்லை.

அப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை முஸ்லிம்களின் மீதான அரசியல் அடிமைச் சாசனமாக இருந்தது. எமது தனித்துவமான தலைமைகள் அதுபற்றி வாய் திறக்கவில்லை. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காரணம் காட்டி எமது மக்கள் அழிக்கப்படும் போதும், எமது பொருளாதார உரித்து, எமது அடிப்படை அரசியல் நிலைப்பாடுகள் மறுக்கப்படும் போதும் அதனைக் கருத்திற் கொள்ளாது, அப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வாயாரப் புகழ்ந்தது, நமது மக்களின் அரசியல் தனித்துவத்தை காட்டிக் கொடுத்தது.

முஸ்லிம் அரசியல் தலைமைகளிடம் நாம் கேட்கிறோம்! இலங்கை - இந்திய ஒப்பந்தம் முஸ்லிம்களை நசுக்கி ஒடுக்கிவிட்டது என்று அரசியல் ரீதியாக தலைமையேற்ற நீங்கள், 'இப்புரிந்துணர்வு ஒப்பந்தம், ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம், இவைகளிடம் ஏன் நாம் நமது மக்களுக்கான உரித்தினை உறுதிப்படுத்த முடியாமல் போய்விட்டீர்கள்? ஏன் நீங்கள் அன்று ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் தலைமைகள் நடந்து கொண்டது போல் நடந்து கொண்டிருக்கிறீர்கள்? இக்கேள்விகள் மலைபோல் நமது மக்களுக்குள் எழுந்து வருகிறது விடை தருவா யார்?

எம்மைப் பொறுத்தவரையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை விட இப்புரிந்துணர்வு ஒப்பந்தமே சமகால அரசியலில் மிகவும் வலுவானது. தேசிய இனப்பிரச்சினையை தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையாக, சிங்கள, தமிழ் தேசங்களுக்கிடையிலான பிரச்சினையாக இரு தேசங்களினதும் சமபல நிலையை உறுதிப்படுத்தி ஏற்றுக் கொண்ட வலுவை இவ் ஒப்பந்தம் கொண்டுள்ளது. இதனை நமது அரசியல் தலைமைகள் அறிவார்களா?

அரசியல் அரங்கில் பேச்சுவார்த்தை சர்வதேச ஆதரவுடன் நடைபெற்று வருகிறது. இப்பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்களின் நிலை என்ன? நடைபெறும் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஒரு துளியாவது நமது மக்களுக்கு இருக்கிறதா? அன்று இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்படும் போது அரசதரப்பின் சார்பில் ஏ.சீ.எஸ். ஹமீத் இருந்ததைப் போன்றுதான் இன்று அரசதரப்பில் ரவூஃப் ஹக்கீம இருக்கிறார். அன்று ஏ.ஸீஎஸ்.ஹமீத்துக்கு வழங்கப்பட்ட தனித்த முக்கியத்துவம் கூட, இன்றைய பேச்சுவார்த்தையில் நமது முஸ்லிம் அரசியல் தலைமைக்கு வழங்கப்படவில்லையே. நாலில் கடைசி என்ற தோற்றப்பாடு அழுத்தமாக வெளிப்படுத்தப்பட்டு வருகிறதே. அன்றைய இலங்கை இந்திய ஒப்பந்தம், இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் ஒப்பீடு செய்து 1987 ஒப்பந்தத்தைவிட இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் முஸ்லிம்களுக்கு சாதகமானது என நமது அரசியல் தலைமைகளால் சொல்ல முடியுமா? அவர்களால் சொல்லவே முடியாது! ஏனெனில் அந்நிலைமையை விட இன்றைய நிலைமையானது அரசியல் நிலைமையில் நமது மக்களை மிக மோசமாக புறக்கணித்து, பாதித்து வருகிறது என்பதே உண்மையாகும்.

1987 இல் முஸ்லிம்கள் காட்டிக் கொடுக்கப்பட்டார்கள் என முஸ்லிம்களின் தனித்துவ அரசியல் காக்கப் புறப்பட்டவர்கள் ஏன் இன்று நமது மக்களின் தனித்துவம் காக்க போராட முன்வரவில்லை?

நமது முஸ்லிம் தலைமைகளிடம் நாம் கேட்கிறோம்! ரவூஃப் ஹக்கீமிடம் நாம் கேட்கிறோம் சுபைர்தீன் அதாவுல்லா அணிகளிடம் கேட்கிறோம், ஹரீஸ், அன்வர் இஸ்மாயிடம் கேட்கிறோம் - நீங்கள் இன்னும் தூக்கமா என்று?

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் விடயத்தில் ரவூஃப் ஹக்கீமின் தலைமை மிக மோசமான தவறுகளை விட்டது என்பது முஸ்லிம்களின் அரசியல் நலனில் நின்ற அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். அத்தலைமை தவறு என சுட்டிக் காட்டி, முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமென குற்றச்சாட்டுச் சுமத்திய சுபைர்தீன் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவினர், ஏன் இதுவரை நமது முஸ்லிம்களுக்காக போராட முன்வரவில்லை. நமது மக்களை அணிதிரட்டவில்லை. நமது மக்களின் அரசியல் நிலைப்பாடு தொடர்பாக ஏன் ரணில் விக்கிரமசிங்காவை கேள்வி கேட்க முன்வரவில்லை?.

தலையணையை மாற்றுவதால் தலைவலியைத் தீர்க்கலாம் என நம்பி காலத்தைக் கடத்துவது ஏன்? மக்களுக்காகப் போராடுகிறோம் என மார்தட்டி பெரும் பரபரப்போடு பாராளுமன்றப் பகிஷ்கரிப்பைச் செய்த ஹரீஸ், அன்வர் இஸ்மாயிலும் இன்று என்ன செய்து கொண்டிருக்கின்றனர்?. ஏன் மௌனம் ஆனீர்கள்?. நமது மக்களின் அரசியல் போராட்டத்திற்கு ஏன் நீங்கள் தலைமையேற்கவில்லை?. பட்டம், பதவிகளை சமூகத்திற்காக தூக்கி எறியத் தயார் என மேடைகளில் சொல்லி வரும் நீங்கள் அனைவரும் ஏன் அதனை இதுவரைச் செயலில் காட்டவில்லை?. உங்களுக்கும் அன்றைய ஐக்கிய தேசிய கட்சி முஸ்லிம் தலைமைகளுக்குமிடையிலான வேறுபாடு அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தார்கள். நீங்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருக்கிறீர்கள் - என்பது மட்டும்தானா?

முல்லாவின்
பார்வையிலே...

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் - சமூக - சமய - கலை கலாசாரம் முதலான அனைத்து கோணங்களுக்கும் நமது "முல்லா" விஜயம் செய்து, கோணங்களில் கோலாட்சி புரியும் கோலங்களை இங்கே துப்பாய்வு செய்து விமர்சிப்பார். சமூக நலனை மட்டுமே அடிநாதமாகக் கொண்டிருக்கும் "முல்லா"வின் விமர்சனப் பார்வை, விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது "முல்லா"வின் பார்வை சிலரை தொடலாம் சிலரை சுடலாம் சிலருக்கு அடியாகக்கூடபடலாம். எனினும் தனிப்பட்ட முறையில் எந்த தனிமனிதரையும் தாக்கவோ காரணமின்றி தூக்கவோ "முல்லா" முன்வரமாட்டார். இதோ... முல்லாவை சந்தியுங்கள் அவரது வரிகள் குறித்து சிந்தியுங்கள். "முல்லா"வின் பார்வை தொடர்பான ஒட்டிய கருத்துக்கள் - வெட்டிய சிந்தனைகள் - விமர்சனங்கள் யாவும் வரவேற்கப்படும்.

எரியும் பிரச்சினைகளில் நம் முஸ்லிம் அறிஞர்கள் என்றும் பார்வையாளர்கள்தானா?

யார் ஆண்டாலென்ன என்ற மனோ நிலையில், எரியும் பிரச்சினைகள் சன்மார்க்க சமுதாயத்தைச் சுற்றிச் சுழன்ற காலங்களிலெல்லாம் நம்நாட்டு முஸ்லிம் அறிஞர்குழாம் மௌன சாம்ராஜ்யத்தின் மாமன்னர்களாக மாறி, வாளாவிருந்து வந்ததுதான் வரலாறாக இருந்திருக்கின்றது.

கடந்த காலத்தை மறந்திடுவோம். போன 'பஸ்ஸுக்கு கைகாட்டி என்ன பிரயோசனம். நிகழ்காலத்தில் - நாம் வாழும் இந்தக்காலப் பிரிவில், நம் சமூகத்தை எவ்வளவு பிரச்சினைகள் விழுங்கப்பார்த்தன? பார்க்கின்றன! இத்தகைய இக்கட்டான சூழலில் நம் சமுதாய அறிஞர்கள், கல்வியாளர்கள் - படிப்பாளிகள் செய்த பங்கு என்ன? பணி என்ன?

ஏதேனும் ஒரு கட்சி, ஏதேனும் ஒரு பிரச்சினை குறித்து ஒரு கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்தால் அல்லது ஏதேனும் ஒரு சமுதாய அமைப்பு ஓர் ஆலோசனைக் கூட்டத்துக்கு வரும்படி அழைப்பு அனுப்பினால் நம் அறிஞர்கள் வருவார்கள் பேசுவார்கள், ஆலோசனை நல்குவார்கள், அத்தோடு விசயம் முடிந்து விடைபெற்றுச் சென்றுவிடுவார்கள் மற்றபடி

சமுதாயத்தின் சங்கடம் கண்டு, தாமே அணிதிரண்டு வந்து, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையேனும் மேற்கொண்டு, சமுதாயத்துக்கு நம் அறிஞர்கள் வழிகாட்டியிருக்கிறார்களா? என சிந்தித்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். "அவர்களெல்லாம் பெரியவர்கள், படித்தவர்கள்" எனச் சொல்பவர்களும் நம்மிடையே உளர். அத்தகையோர் இப்படியான விஷயங்களுக் கெல்லாம் இறங்கிவர மாட்டார்கள். "மேன் மக்கள் என்றும் மேன்மக்களே" என மேலும் விளக்கம் தருவர்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். சுவருக்கே ஆபத்து வரும்போது, சித்திரம் எப்படி வரையமுடியும்? சுவருக்கு சோதனை வருமேயானால் கீழ் மக்கள் மட்டுமல்ல.. மேல் மக்களும் பார்வை யாளராக இருந்து கொண்டிருக்க முடியாது; கூடாது.

சுவர் எனச்சுட்டிக்காட்டப்படும் நம் சமுதாயம், சமகாலத்தில் எதிர்நோக்கிய, எதிர்நோக்கும் எரியும் பிரச்சினைகள் எத்தனை? ஒன்றா? இரண்டா? அரசியலில், கல்வித் துறையில், சமய ரீதியில், பொருளாதாரத்தில் என்று, திரும்பும் திசையெங்கும் பிரச்சினையோ... பிரச்சினை.

நாட்டை நாசமாக்கிவந்த இனப்பிரச்சினைக்கு முடிவுகட்டி சமாதானத்தை ஏற்படுத்தும் நன்னோக்கில், அரசும்-புலிகளும் பேச்சுவார்த்தை மேசையில் நாளுக்கு நாள் நெருங்கிவந்து, தத்தம் எதிர்காலங் குறித்து எண்ணிப்பார்க்கும் தருணத்தில்; முஸ்லிம்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? பேரினவாதக் கரைகளிலும் தனித்துவக் கூடாரத்திலுமாக பிரிந்திருக்கின்றனர். தனித்துவக் கூடாரத்தில் இருப்பவர்களும் கடந்த சில மாதங்களாகப் பிளவுண்டு நீதி மன்றத்துப் படிக்கட்டுக்களை எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

பிரிந்து நிற்கும் சமுதாய உடன்பிறப்புக்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் நம்நாட்டு முஸ்லிம் அறிஞர்கள் ஏதேனும் முன்வந்து செய்தார்களா? இல்லவேயில்லை. இருந்தும் இந்த மௌனம் ஏன் இன்னும் நீடிக்கிறது.

சமய ரீதியிலும் நம் சகோதரர்கள் "அலங்காரம்" சுன்னத் வழிமுறைகளில் பிரிந்து பிணங்கிப்போயுள்ளனர். ஜமாஅத் என்றும், தௌஹீத் என்றும், ஹுபுல் அவ்லியாக்கள் என்றும் வேற்றுமையுற்றுக் கிடக்கும் நம்மவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் உருப்படியான பங்களிப்பை நம் சமுதாய அறிஞர்கள் ஆற்ற முன்வந்தனரா? இஸ்லாத்தை, அதன் நெறிமுறைகளை துறைபோக சுற்றுத்தெரிந்த உலமாக்கள் - மௌலவிகள் என்னும் மார்க்க அறிஞர்களாவது இம்முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டனரா? வாராந்த ஜும்ஆ குத்பாக்கள் உட்பட நாடெங்கும் நம்மவர் வாழும் இடமெங்கும் மார்க்க உபந்நியாச (பயான்) நிகழ்வுகள் நடக்கவே செய்கின்றன. சமய ரீதியில் ஒன்றிணைக்கும் நோக்கில் இந்த பயான்கள் நிகழ்த்தப்பட்டனவா? நாடளாவிய உலமாக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஜம்-இய்யத்துல் உலமா சபை கூட சன்மார்க்க இதயங்களின் சமயப் பிரிவுகளுக்கு மௌன சாட்சியமாகவே இருந்து வருகின்றது? இது ஏன்?

கல்வித்துறையில் நம் முஸ்லிம்கள் இன்னுமே உரிய உச்சத்தைத் தொடவில்லை. சின்னஞ்சிறு முஸ்லிம் பாடசாலைகள் மூடப்படும் நிலை, முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, போதனா மொழிப் பிரச்சினை, கல்வித்தரம் எழும்பாத தாழ் நிலை... இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். நம் சமுதாய கல்வி நிலை மேம்பாட்டுக் காக நம் அறிஞர் குழாம் ஒன்று கூடி - திட்டமிட்டு - நிரல் தயாரித்து ஏதேனும் ஆக்கபூர்வ முயற்சிகளில் இறங்கியதுண்டா? இவ்வாறு எல்லா விடயங்களிலுமே நம் அறிஞர்கள், புத்திஜீவிகள், எம். பி. மார்களும், அமைச்சர்களும் ஏன் அரசும்கூட "சிந்திக்கும் வண்ணம்" களமிறங்கி காரியமாற்றாமல், கண்டும், காணாமலும் இருந்து வருகிறார்களே! இந்தப்போக்கின் பின்னணி யாது? ஏன் இவர்கள் சமுதாய எழுச்சிகாணும் விவகாரங்களில் "பங்காளர்களாக" மாறாமல் "பார்வையாளர்களாகவே" இருந் து வருவது ஏன்? இந்த மௌனத்தின் மறு பக்கம் என்ன?

ஒரு சமுதாயத்தின் பெறுமதிமிக்க சொத்துத்தான் அச்சமுதாயத்தின் அறிஞர்கள், கல்விமான்கள் . இவர்கள் "தாம் படித்தோம், பட்டம் பெற்றோம், பதவியும் கிடைத்தது, வசதியான வாழ்க்கையும் அமைந்துவிட்டது." என்று சமூகத்தின் தொடர்பை துண்டித்துக் கொண்டு ஒதுங்கிப்போய்விடலாமா?

இப்படி ஒதுங்குவதால் சமூகத்துக்கு எவ்வித பயனும் இல்லை. தனக்கும் தன் குடும்பத்துக்கும் தவிர மற்றவர்களுக்கு மருந்துக்கும் பயன்படாமல் இருந்துவிட்டால், கற்ற கல்வியால் ஏது பயன்? பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் எனப்படித்து விட்டால் மட்டும் போதுமா? தன்னைப்போல தன் சமுதாயத்து சகோதரர்களும் படித்துப் பட்டம், பதவி பெற்று நல்வாழ்வு வாழ வேண் டும் என்று எண்ணுவது, எண்ணி யாங்கு வாழ்வது. அதற்கு தன்னால் இயன்றளவு உதவுவது - தன்கல்வியையும், பட்டம் பதவியையும், பயன்படுத்துவதன்றோ கற்றோருக்குச் சிறப்பு.

இத்தகைய விரிவான பார்வையும் மனப் போக்கும் உள்ள அறிஞர்கள் தம் சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் பரி காரம் காண, தாங்களே முன்வந்து தலைமை தாங்கி, தேவையான ஆலோசனை களை வழங்கி தன் சமூக மக்களை வழி நடாத்தினால், அது எவ்வளவு பெரிய சேவை? பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் பிற சமூக மக்களால் நம்மவர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் நம்மவர் களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, நல்லன விளைய துணை நின்றால் அது சமுதாய மட்டத்தில் பாரிய பயனை நல்கும் நற்காரியமாகக் கணிக்கப்படுமே!

"உனக்கு தந்த கல்வியினால் நீ என்ன நன்மை செய்தாய்?" என நாளை மறுமையில் கல்விமான்களிடம் கேள்வி கேட்கப்படும் எனும் நம்பிக்கையை இதயத்தில் ஏந்தியிருக்கும் சன்மார்க்கக் கூட்டத் தைச்சேர்ந்தவர்கள் நாம்! இந்த வினாவுக்கு நம் கல்விமான்கள் விடை தயார் பண்ண வேண்டாமா ?

சன்மார்க்க நெஞ்சங்களே - இன்று நம் சமூகம் பல்வேறு பிரச்சினைகளால் அவதிப்படுவதை நாம் அறிவோம். சமுதாய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் ஆழ, அகலத்தை தெளிவுபடுத்தி பரிகாரத்துக்கான பாதையைக்காட்ட நல்ல ஆலோசனைகள் தேவை. அரசியல் தலைவர் களுக்கும் சமூக விவகாரங்களில் உரிய வழி காட்டல்கள் தேவை. இப்பணியை செய்ய நாலும் கற்ற நல்லறிஞர்களன்றி வேறுயார், தேவை?

இனியும் நம் அறிஞர்கள் ஒதுங்கி வாழ்வதை ஒப்புக்கொள்ள முடியாது. அவர்களும் சமுதாயப்பிரச்சினைகளில் ஒன்று கலக்க வேண்டும். அதாவது சமூக விவ காரங்களில் இலாபமோ நட்டமோ, சாத கமோ, பாதகமோ அறிஞர்களும் பங்காளிகளாக மாறவேண்டும். எந்த சமூகப்பிரச்சினைகளிலும் ஏற்ற ஆலோசனைகளை பகிரங்கமாக வழங்க முன்வரவேண்டும். மொத்தத்தில் குறித்த விவகாரத்தில் விழிப்படையச் செய்யவேண்டும்.

இப்பணியை தனித்தனியே செய்யாமல் கூட்டாகச் செய்வதே பலம்தரும் அதற்கு இலங்கை வாழ் பல்துறை சார் முஸ்லிம் அறிஞர்களும் ஓர் அமைப்பாக ஒன்று கூட வேண்டும். அமைப்பு மட்டத்தில் செயற்படவேண்டும். தன் எதிர்காலத்தை எவ்வழியில் நிர்ணயிப்பது என்பதை உணராமல் தட்டுத்தடுமாறும் இக்காலகட்டத்தில், நம் சமூகத்துக்கு வழிகாட்டி வழிநடாத்த உடனடியாக ஒரு முஸ்லிம் அறிஞர் சபை அவசரத் தேவையாகும். இனியும் தாமதிக்க முடியாது. தாமதமாகும் ஒவ்வொரு நிமிடமும் நம் இலக்கை அடையத்தாமதமாகும் நிமிடம் என்பதை மனதில் கொண்டு இன்றே ஓர் அறிஞர் சபையை அங்குரார்ப்பணம் செய்வோமாக.

நமது பண்பாடு!

மனித சமூகத்தின் பண்பாடு என்று வரையறை செய்யப்படும் ஒரு முக்கிய பகுதியின் அடையாளமாக அதன் தனித்துவமான அடையாளங்கள் அமைகின்றன. இவ்வகைப் பண்பாட்டு வெளிப்படுத்தல் என்பது தனிமனிதச் செயல்பாட்டின் அடிப்படையிலும் மனிதர்களின் கூட்டுச் செயல்பாட்டின் அடிப்படையிலும் நிகழ்கின்றன. மனிதர்கள் தங்கள் வாழ்வின் இருப்பின் அடிப்படைக்காக உருவாக்கிக் கொண்ட இன, நிறுவன கட்டுமாணங்கள் பண்பாட்டு பேணுதலை தம்முடைய செயல்பாடாகவும் அடையாளமாகவும் கொள்கின்றனர். மக்கள் அதன் வழியே அடையாளப்படுத்தப்படுகின்றனர். பண்பாட்டுப் பேணுதலை அவசியமாகவும் கருதுகின்றனர்.

இலங்கை வாழ் முஸ்லிம்களிடையே பண்பாடு தொடர்பான ஆழமான புரிதல்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். பண்பாட்டுப் பேணுகையின் முக்கியத்துவம் உணரப்படாது. ஆனால் அவ் அடையாளங்களை தொடர்ச்சியாகப் பேணும் மக்களாக நமது மக்கள் உள்ளனர். நமது தனித்துவமான அடையாளங்களை அழிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மிகவும் திட்டமிட்டு இலங்கை முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த முயற்சிகள் பற்றி நாம் அனைவரும் ஓரளவாவது புரிந்து கொண்டிருப்போம்.

இன்று இலங்கையைப் பொறுத்தவரையில் பொருளாதார நெருக்கடிகள் கூர்மைப்பட்டு வருகிறது. இனமுரண்பாடுகள் மிக மோசமாக தலை தூக்கத் தொடங்கி உள்ளது. இன முரண்பாடுகள் வழி உருவாகும் அரசியல் முரண்பாடுகளே இலங்கையின் அரசியல் சமூகச் சூழ்நிலையாக உள்ளது.

இந்நிலையில் இன அடையாளங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு நாமும் தள்ளப்பட்டிருக்கிறோம். இன அடையாளத்தின் முக்கிய எடுகோளாக பண்பாடே அமைய இயலும். இந்த வகையில் நமது மக்களின் அன்றாட சமூக வாழ்வு தொடக்கம், நெருக்கடிகள் சார்ந்த போராட்ட வாழ்வு வரை பண்பாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இலங்கை முஸ்லிம்கள் இந்த நாட்டில் 6ம் நூற்றாண்டிலிருந்து வாழ்ந்து வருவதாக சரித்திரச் சான்றுகள் உரைக்கின்றன. இந்த சரித்திரச் சான்றுகளுக்கு நமது பண்பாட்டுச் சான்றுகள் ஆதாரமாக உள்ளன. நமது பண்பாட்டு விழுமியங்களின் பேணுகை அவசியமாகவுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் பண்பாடு தொடர்பான ஆய்வுகள், சேகரிப்புகள் இன்னும் முறையாக செய்யப்படவில்லை. இப்போதும் நமக்குள் தரவுகள் சேகரிப்பு, ஆவணங்கள் சேகரிப்பு நவீன வளர்ச்சிகள் சார்ந்து செய்யப்படவில்லை.

இத்தகைய சூழலில்தான் நமது மக்களிடையே பண்பாட்டு விழிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது அம்மக்கள் மிக முக்கியமான பண்பாட்டு நெருக்கடியினை எதிர்நோக்கினர். எந்த தொடர்புமில்லாத மிகப் புதிதான சூழலில் அம்மக்கள் வாழ வேண்டி வந்தது. அகதி வாழ்வின் சோகமும், இழப்பும், சொந்த மக்களின் துயரம் போன்ற பண்பாட்டு அச்சுறுத்தல் மத்தியில் நாடு முழுவதும் நமது மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் மக்கள் தாம் வாழும் பிரதேசங்கள் யாவற்றிலும் தமது தேசிய இனத் தனித்துவத்தை பண்பாட்டு அம்சங்களில் பேணிப் பாதுகாக்க வெளிப்படுத்துவதே நமக்கான தனித்த அடையாளமாகும். அனைத்து முஸ்லிம் மக்களிடமும் பண்பாடு பற்றிய உணர்வையும் புரிதலையும் ஏற்படுத்துவது நமது இனத் தனித்துவத்திற்கான அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியாக அமைகிறது.

முஸ்லிம் சமூகம் ஒன்றாக நின்று தங்களது சக்திகளை ஒன்று சேர்க்காதவரை தங்களுக்கெதிராக இழைக்கப்படக்கூடிய அநியாயங்களையும் அட்டூழியங்களையும் ஒருகாலமும் நிறுத்தவே முடியாது. பல்துறைகளிலும் தங்களது சக்திகளை ஒன்று திரட்டி ஒன்று சேர்க்கவேண்டும். இவ்வாறு முஸ்லிம் சமூகம் ஒன்று திரண்டால்தான் ஏகாதிபத்திய சக்திகளினதும் அவர்களது உள்நாட்டு அடிவருடிகளினதும் ஆதிக்கத்திலிருந்து அரபு நாடுகளையும் மக்களையும் விடுவிக்கமுடியும். அத்தோடு அவர்களுடைய அநியாயங்களிலிருந்தும் தாக்குதல்களிலிருந்தும் நாம் தப்பித்துக்கொள்ளவும்முடியும்.

இன்று முஸ்லிம் சமூகத்துக்குள் நடைபெறக்கூடிய விடயங்களும் அவர்கள் நடாத்தப்படுகின்ற விதமும் இளைக்கப்படும் அநியாயங்களும் போன்று இதற்கு முன்னுண்டான காலங்களில் (நூற்றாண்டுகளில்) ஒருபோதும் நடைபெறவில்லை. இவ்வாறாக முஸ்லிம் சமுதாயம் இழிவுபடுத்தப்படவுமில்லை தாக்கப்படவும் இல்லை. இன்று ஒவ்வொரு இடங்களிலும் முஸ்லிம்கள் நசுக்கப்படுகிறார்கள், வீட்டு வாசல்களைவிட்டு துரத்தபடுகிறார்கள், நாடு கடத்தப்படுகிறார்கள், கொடூரமான முறையில் கொலை செய்யப்படுகிறார்கள். இழிவுபடுத்தப்படுகிறார்கள். எதுவிதக்காரணமும் இன்றி கைது செய்யப்படுகின்றார்கள். அவர்கள் மீது குண்டுகள் வீசப்படுகின்றன. இதற்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்றுதான், அதுதான் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையின்மை.

அன்று இஸ்லாமிய நாகரீகமும் அதன் வளர்ச்சியும் கொடிகட்டிப்பறந்த காலத்தில் முஸ்லிம்கள் கண்ணியமானவர்களாக வாழ்ந்தார்கள். ஏனெனில் அன்றைய முஸ்லிம்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமையாக இருந்தார்கள். இராணுவ, பொருளாதார, அறிவு ரீதியாக முன்னிலையை வகித்தார்கள். இதன்காரணத்தினால்தான் ஐரோப்பியர்களும் ஏனையவர்களும் முஸ்லிம்களிடம் வந்து கல்விகற்றுக்கொண்டார்கள். ஆனால் இன்று அதற்கு மாறாக நடந்துகொண்டிப்பதை நன்கு அவதானிக்கமுடிகின்றது. ஏனெனில் முஸ்லிம்களின் நடைமுறை வாழ்க்கையைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் இஸ்லாத்தின் அடிப்படைகளையும் அதன் சட்டதிட்டக்கோட்பாடுகளையும் உத்தம நபியின் வழிமுறைகளையும் விட்டுத்தூரமானதுதான் மிகமுக்கிய காரணமாக இருந்து கொண்டிருக்கின்றது.

முஸ்லிம் சமுதாயம் அதன் அசல் வடிவையும் அதன் தலைமைத்துவத்தையும் மீண்டும் பெறவேண்டுமாகவிருந்தால் அவர்கள் குர்ஆனையும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களையும் அவர்களின் தோழர்களான சகாபாக்களின் அடிச்சுவடுகளையும் அணுவணுவாகப் பின்பற்றவேண்டும். அப்போது மாத்திரம்தான் இந்த முஸ்லிம் சமுதாயம் உலகை வழிநடாத்தும் பொறுப்பைப் பெறமுடியும். அந்தநேரத்தில்தான் அப்பொறுப்பை நிறைவேற்றிடும் தகமையைப் பெற்றிட முடியும்.

முஸ்லிம் சமூதாயம் ஒற்றுமையாக வாழவேண்டும். அவர்களுக்குள் இருக்கின்ற பிளவுகளைக்களைந்து அவற்றை முதுகின்பின்னால் தூக்கியெறிந்துவிட்டு சண்டை சச்சரவின்றி வாழவேண்டும். ஒற்றுமையின்றி முஸ்லிம் சமூதாயம் வாழுமேயானால் அவர்களுக்கு எதிராக நடக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் போய்விடும். இவ்வாறாக முஸ்லிம் சமுதாயம் இருக்குமேயானால் முஸ்லீம் சமூகம் பலவீனமாகிவிடும். அத்துடன் இன்னுமொரு முஸ்லிம் சகோதரனுக்கு அல்லது முஸ்லிம் நாடுகளுக்கு எதிராக மற்றவர்களால் போர் தொடுக்கப்படும் போது அவர்களுக்கு சார்பாக குரல் கொடுப்பதற்கு சக்தியற்றவர்களாக முஸ்லிம்கள் ஆகிவிடுவார்கள். ஆகவே முஸ்லிம் சமூதாயம் ஒற்றுமைப்படவேண்டும். மாறாக அவர்கள் பிளவுபட்டுக்கொண்டிருந்தால் இதைப்பார்த்துக்கொண்டிருக்கும் எதிரிகளுக்கு முஸ்லிம் சமூதாயத்தை தாக்குவது மிக எளிதாகிவிடும். இதன் காரணத்தினால்தான் எமது எதிரிகள் இனத்தைச்சேர்ந்தவர்கள் முஸ்லிம்களையும், முஸ்லிம் நாடுகளையும் அச்சுறுத்திக்கொண்டும் நசுக்கிக்கொண்டும் இன்னும் தாக்கிக்கொண்ட வண்ணமுமே இருக்கின்றார்கள்.

எப்போது முஸ்லிம் சமுதாயம் தங்களுக்குள்ளே பொருளாதாரத்தையும் அரசியல் ஸ்திரத்தன்மையையும் நவீன தொழில்நுட்பங்களையும் இன்னும் பல்துறை சார்ந்த துறைகளிலும் தன்னபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்கின்றார்களோ அப்போதுதான் முஸ்லிம் சமூதாயத்தை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க முடியும் இல்லாவிடில் முஸ்லிம் சமுதாயம் பலவீனமானதாகவே இருக்கும். மற்றவர்கள் தாக்கிக்கொண்டே இருப்பார்கள். எனவே முஸ்லிம்கள் எல்லோரும் ஒரே சமுதாயம் (சமூகம்) அத்துடன் அவர்கள் எல்லோரும் சகோதரர்கள் இதைத்தான் அல்குர்ஆனும் வலியுறுத்துகின்றது.

சர்வதேச அரங்கில் முஸ்லிம் சமுதாயத்தின்
அவல நிலை!

பலஸ்தீனத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக இஸ்ரேலிய துருப்புக்களால் நடாத்தப்படும் அட்டூழியங்களையும் அடாவடித்தனங்களையும் 1948 தொடங்கி இன்றுவரை தட்டிக்கேட்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் முஸ்லிம் நாடுகளும் அதன் தலைமைத்துவங்களும் தைரியமாக முன்வரவில்லை. மாறாக கைகட்டி மௌனியாக இருந்துகொண்டு புதினம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கெல்லாம் முக்கிய காரணம் அச்சமூகத்தினிடையிலும் தலைமைத் துவங்களுக்கிடையிலும் ஒற்றுமையின்மையே என்று நன்றாகப் புரிகின்றது.

அதுமட்டுமல்லாமல் 1990 இலிருந்து இன்றுவரைக்கும் ஈராக் நாட்டிற்கு எதிராக நடாத்தப்படுகின்ற தாக்குதல்களையும் அச்சுறுத்தல்களையும் அடாவடித்தனத்தையும் நன்றாகக் கவனித்துப்பாருங்கள். 1990 இலிருந்தே அந்நாட்டின்மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டது. அத்தடையினால் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் குழந்தைகள் உயிரிழந்தனர் அங்கு பஞ்சம் எல்லோரையும் ஆட்கொண்டது. ஏவுகணைகளும் விமானத்தாக்குதல்களும் அம்மக்களின் உயிர்களை இன்றுவரை பதம்பார்த்துக்கொண்டே இருக்கின்றது. அதுமட்டுமா இல்லவேஇல்லை சதாம் ஹுசைனிடத்தில் அணுவாயுதம், இரசாயன ஆயுதம், இருக்கின்றது எனவே இது பக்கத்துநாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்ற பொய்க்காரணத்தை வைத்துக்கொண்டு அந்நாட்டை சர்வதிகாரியான (புஷ்) அமெரிக்காவும் அதன் அடிவருடிகளும் விமானம் மூலமும் ஏவுகணை மூலமும் அம்முஸ்லிம் மக்கள்மீது தாக்குதல் நடத்திக்கொண்டே இருக்கின்றனர். அங்கு சோதனை செய்கின்றோம் என்ற பொய்யான பசப்புவார்த்தையை உலகத்திற்கு எடுத்துக்காட்டி அப்பெயரால் அங்கு நடாத்தப்படும் அடாவடித்தனங்களும் அட்டூழியங்களும் எண்ணிலடங்கமுடியாதவையாக இருக்கிது.

இந்த முஸ்லிம் நாட்டுக்கு நடக்கின்ற அநியாயங்களையும் ஒடுக்குமுறையையும் கண்டித்து ஏனைய முஸ்லிம் நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிராக எதுவித நடவடிக்கையுமே எடுக்கமுடியாமல் ஒற்றுமையின்றி பிரிந்திருப்பதைப்பார்த்தால் மிகவும் கவலையாக இருக்கின்றது.

இதேபோன்றுதான் செச்சினியாவிலும், ஆப்கானிஸ்தானிலும், பிலிப்பைன்சிலும், இலங்கையிலும், இன்னும் பல நாடுகளிலும் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கும் இதுதான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இவ்வனைத்துவிடயங்களையும் முஸ்லிம் சமுதாயம் கைகட்டிப்பார்த்துக்கொண்டு அதற்கெதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் வாய்மூடி மௌனமாக இருக்கின்றது.

இன்று உலகில் முஸ்லிம்களுக்கெதிராக சர்வதிகாரிகளினால் நடைபெறுகின்ற அனைத்து கொடூரங்களையும் அநீதிகளையும் நிறுத்துவதற்கு முஸ்லிம் சமூகம் முன்வருவதற்கு ஒரேஒரு விடயத்தைச் செய்யவேண்டும். அதுதான் எல்லா முஸ்லிம் நாடுகளும் தங்களுக்கிடையில் இருக்கின்ற பிளவுகளைக்களைந்து ஒற்றுமை என்னும் கயிற்றை பலமாகப்பிடித்துக்கொண்டு ஒருமித்தகுரலில் ஏகாதிபத்திய வாதிகளுக்கு சாவுமணி அடிக்கவேண்டும். அப்போதுதான் முஸ்லிம் சமூகம் விடுதலைபெற்று உலகைவழிநடத்தும் பொறுப்பை பெறமுடியும். அப்பொறுப்பை நிறைவேற்றும் தன்மையையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பாரிய அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை ஈராக் கொண்டுள்ளதென்ற போர்வையில் அமெரிக்காவும் அதன் பிரதான நேசநாடான ஐக்கிய இராஜ்ஜியமும் தன்னிச்சையாக மேற்கொண்டுவரும் யுத்த முஸ்தீபுகள் முஸ்லிம் சமூகத்தால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டு அதற்கெதிராக அனைத்து முஸ்லிம் நாடுகளும் ஒன்றிணைந்து ஒருமித்த குரலில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் நல்லதோர் பாடம்புகட்ட வேண்டும்.

நிச்சயமாக ஈராக்மீதான யுத்தம் அனைத்து முஸ்லிம் சமூகத்துக்கும் எதிரான யுத்தமாகும். புஷ்ஷும் அவருடைய நிர்வாகமும் இது பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் என்ற போர்வையில் முஸ்லிம் உலகுக்கும் இஸ்லாமிய அமைப்புக்களுக்கும் எதிராக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளை சீண்டக்கூடியதாக அமைந்துள்ள அதேவேளை, பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்டுள்ள அடாவடித்தனங்களை மேலும் அதிகரித்து உலகெங்கும் பரந்து வாழும் முஸ்லிம்களை பலஸ்தீனர்களைப்போன்றே மோசமான பாதிப்புக்குள்ளாக்கும் பெரியதிட்டமாகும் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

பின் இஸ்மாயில

கொழும்பு முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம் சிந்திக்கப்பட வேண்டிய சில கருத்துக்கள்

"முஸ்லிம் குரல்" முதல் இதழில், அபூரவ்ஷன் என்பவர் "கொழும்பு முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம்" பற்றிய சிந்தனையை தூண்டி விடும் விதமாக, எழுதிய ஆக்கத்தை கண்ணுற்றேன். மிக முக்கியமான - சமுதாயம் - குறிப்பாக, கொழும்பு முஸ்லிம்கள் சிந்தித்தாக வேண்டிய கனதியான விடயமொன்றினை, சமுதாயத்தின் சிந்தனைக்கு அபூரவ்ஷன் தந்திருக்கிக்கிறார்.

"கொழும்பு முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம்" பற்றி, சமூகப் பிரக்ஞையுள்ள அனைவரும் சிந்தித்து - சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய ஒரு காலகட்டம் இதுவாகும். இனி சிந்திப்போமா?

கிழக்கு முஸ்லிம்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்தை அடுத்து, அரசியல் தலைமைத்துவம் என ஒன்று உருவாகி விட்டது.

இதுபோன்று கொழும்பு வாழ் முஸ்லிம்களுக்கென்று ஓர் அரசியல் தலைமைத்துவம் உருவாகி விட்டதா? அல்லது "அந்த"த் தலைமைத்துவத்தை அலங்கரிக்கவல்ல - தகுதியும் - திறமையுமிக்க முஸ்லிம் தலைவர்கள் யாரேனும் கைநீட்டிக் காட்டுமளவுக்கு இருக்கின்றனரா? அது யாராக இருக்கும்?

இப்படியான வினாக்களுக்கு ஏனோ தெரியவில்லை... திருப்திகரமான பதில்கள் கிடைப்பதாய் இல்லை. இதற்கு என்ன காரணம்?

கொழும்பு முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம் பற்றி எண்ணிப் பார்க்கும் போது, கடந்த காலங்களில் வாழ்ந்து மறைந்த - கொழும்புவாழ் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய முஸ்லிம் எம்.பிமார்கள் பற்றி சற்றே திரும்பிப் பார்ப்பது சாலவும் நன்று.

சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து இன்றுவரை கொழும்பு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்த, செய்துவரும் தலைவர்கள் எனப்படுவோர் பலர், நம் கண்முன்னே காட்சி தருகின்றனர். கட்சி அரசியலில் எந்தக் கட்சியைச் சேர்ந்தோராய் இருந்த போதும், அவர்கள் கொழும்பு முஸ்லிம்களை பிரதிநிதித்துவம் செய்வோராகவே கருதப்பட்டனர்.

மறைந்தவர்களான டி.பி.ஜாயா, டாக்டர் எம்.ஸீ.எம்.கலீல், சேர் ராஸிக் பரீத், பஸீல் ஏ.கபூர், ஜாபீர் ஏ.காதர் போன்றோரும், இப்போதும் உயிர் வாழ்கின்றவர்களான ஹலீம் இஸாக், எம்.எச்.முஹம்மத், ஏ.எச்.எம். பௌஸி, எம்.எம்.சுஹைர், மொஹமட் மஹ்ரூப் போன்றோரும் கொழும்பு எம்.பி.க்களாக இருந்துள்ளனர்; ஒரு சிலர் இப்போதும் இருந்து வருகின்றனர்.

இவர்கள் அனைவருமே கொழும்பு முஸ்லிம்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் எம்.பி.க்களாக பணியாற்றி இருக்கின்றனரே தவிர, கொழும்பு முஸ்லிம்களுக்கான அரசியல் தலைமைத்துவம் நோக்கி அடியெடுத்து வைத்துள்ளனரா? சாதாரண எம்.பி. நிலையும் தகுதியும் வேறு, தலைமைத்துவ பண்புகள் வேறு என்பது நம் கவனிப்புக்குரியது.

கொழும்புவாழ் முஸ்லிம்கள் இதுவரை காலமும் தங்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்தவர்களில், மர்ஹூம்களான டி.பி.ஜாயா, டாக்டர் எம்.ஸீ.எம்.கலீல், சேர் ராஸிக் பரீத் ஆகிய மூவரும், கொழும்பு என்ற எல்லையைக் கடந்து தேசிய தலைவர்களாக முழு முஸ்லிம் சமுதாயத்திற்கும் - நாட்டிற்கும் சேவையாற்றியுள்ளனர். அதேவேளை, முழு சமுதாயத்திற்குமான தலைவர்களாகவும் மதிக்கப்பட்டுள்ளனர். இப்போது உயிருடன் இருப்பவர்களில் எம்.எச்.முஹம்மத், ஏ.எச்.எம். பௌஸி ஆகிய இருவரும் முழு சமூகத்திற்கும், நாட்டிற்கும் அரிய சேவையாற்றியிருக்கின்றனர். இவர்கள் அனைவருமே அமைச்சர்களாக பதவி வகித்து பணிபுரிந்தமையே, தேசிய மட்டத்தில் சிந்திக்கத் தூண்டியது.

இன்று மேல் மாகாண ஆளுனராகத் திகழும் அலவி மௌலானா கொழும்பைச் சேர்ந்தவராக இருந்தபோதும், சென்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசியல் அரைமந்திரியாய் - முழு மந்திரியாய் இருந்த போதும், அவர் மேற்கூறிய எல்லைக்குள் அடங்காதவராகவே இருக்கின்றார். இதற்குக் காரணம், அலவி மௌலானா முன்னெப்போதும் கொழும்பிலோ அல்லது கொழும்பு மாவட்டத்திலோ தேர்தலில் போட்டியிட்டு, மக்களால் குறிப்பாக நம் முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல. அரசாளும் கட்சியின் மேலிடத்தால் தெரிவு செய்யப்பட்ட தேசியப் பட்டியல் எம்.பியாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

மர்ஹூம் ஜாபிர் ஏ.காதர் சில காலம் அமைச்சராக இருந்தவிடத்தும், அவ்வளவாக சமூகத்தின் பார்வைக்கு ஆட்படவேயில்லை எனலாம். ஹலீம் இஸாக், எம்பியாக இருந்தனரே தவிர, அமைச்சர்களாக நியமனம் பெற்று, நாடு தழுவிய ரீதியில் விரிவான சேவையாற்றியவர்கள் அல்லர்.

தற்போதைய தேசிய ஐக்கிய முன்னணி அரசில் முஹம்மத் மஹ்ரூப் அமைச்சராக பணியாற்றி வருகின்றார். எம்.எச்.முஹம்மதும் இவ்வரசில் அமைச்சராக பணியாற்றி வந்தாலும், இதற்கு முன்னைய காலங்களிலும் அமைச்சராகவும், சபாநாயகராகவும் பதவி வகித்த மூத்த முஸ்லிம் அரசியல் தலைவரவராவார் என்பது நம் கவனிப்புக்குரியது.

மேற்கண்ட முஸ்லிம் எம்.பிக்களின் அரசியல் மலர்ச்சியில், கொழும்பு முஸ்லிம்களுக்கான ஓர் அரசியல் தலைமைத்துவம் நிலை கொள்ளாதது ஏன்? காலத்திற்கு காலம் ஒவ்வொரு கட்சியின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, எம்.பி.க்களாகப் பணியாற்றிப் போயினரே தவிர, ஒரு முஸ்லிம் தலைமைத்துவத்தை உருவாக்கும் எண்ணப்பாங்கில், திட்டமிட்டு எவருமே காய் நகர்த்தவுமில்லை; காலடி எடுத்து வைக்கவுமில்லை.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்து, தேசிய ரீதியில் முஸ்லிம்களின் அரசியல் சக்தியை ஒன்று திரட்டி சமுதாயத்திற்கு விடியலைக் கொண்டு வந்து விடத் துடித்த அதன் தலைவரான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் முன்வந்து ஒரு நல்ல காரியம் செய்தார். அது என்ன?

ஆரம்ப கால முதலே கொழும்பு முஸ்லிம்களுக்கு என்றொரு அரசியல் தலைமைத்துவம் இல்லாத - உருவாகாத - வெறுமை நிலையில், அக்குறையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்த்து வைக்கும் நோக்கில் "தான் செய்து காட்டுகிறேன்" என்ற உறுதியில் இதுகுறித்து சிந்திக்கலானார். ஐக்கிய தேசிய கட்சி அரசாண்ட காலத்தில் 1988 இல் மாகாண சபைத் தேர்தல் வந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இத்தேர்தலை பகிஷ்கரிக்கும் நோக்கில், போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டது. இந்த 'ஒதுங்கு நிலை' ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு நல்ல வாய்ப்பாக அமையவே, கொழும்பு முஸ்லிம்கள் ஓரணி திரண்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பெருவெற்றி பெறச் செய்தனர்.

இந்த வெற்றி முஸ்லிம் காங்கிரஸை தலை நிமிரச் செய்ததுடன், தலைவராய் இருந்த எம்.எச்.எம்.அஷ்ரஃபை சிந்திக்கவும் செயதது. இந்த சிந்தனையின் விளைவாகவே, கொழும்பு முஸ்லிம்களுக்கென ஒரு அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்க எண்ணினார். அந்தத் தலைமை இதற்கு முன்பிருந்த தலைமைகளைவிட, "படித்த தலைமையாக" இருக்க வேண்டுமென விரும்பினார். அதற்கு பொருத்தமான ஒருவரைத் தேடியதில் தெரிவு செய்யப்பட்டவரே, இன்று ஜனாதிபதி சட்டத்தரணியாகத் திகழும் எம்.எம்சுஹைர் ஆவார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிழலில், மறைந்த அஷ்ரஃப் உருவாக்கிய இந்த தலைமையும், உரிய இலக்கினை அடையாமல் தோல்வி கண்டது. கொழும்பு முஸ்லிம்களின் சோகமாகும். ஆக, சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து கொழும்பு வாழ் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த பேரினவாத இருபெரும் கட்சிகளின் நிழலில் வெற்றி பெற்றவர்களிடையேயும் கொழும்பு முஸ்லிம்களுக்கான அரசியல் தலைமைத்துவம் உருவாகவில்லை. தனித்துவம் பேண' வந்த கட்சி உருவாக்கிய தலைமையும் சோபிக்கவில்லை. இது ஏன்? எங்கே பிழை நிகழ்ந்திருக்கிறது? யாரிடம் கோளாறு ஏற்பட்டுள்ளது? தவறிய இடம்காலம் எது?

மேற்கண்ட வினாக்கள் ஆராயப்பட வேண்டியவை. அரசியல் விற்பன்னர்கள் ஆய்வு செய்து, நோய்க்கு நிவாரணம் காண வேண்டியது அவசியமும் அவசரமுமாகும். இதுகாலம் வரை கொழும்பு முஸ்லிம்களால் தம் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்ட எல்லா முஸ்லிம் எம்.பிக்களும், அதன் பின் அமைச்சர்களான தலைவர்களும் ஆட்சிக்காலம் முடிய, சேவையில் சோர்ந்து போனார்கள். செயல்பட, பங்காளிகளாகவோ, பாத்திரமாக வோ மாறவில்லை. இவ்வாறு செய்ய வேண்டுமென்ற துடிப்பும் உடையவராகவே பணியாற்றினர். அப்படியிருந்தும் ஒரு அரசியல் தலைமைத்துவம் உருவாக்கத் தவறியமை ஏன்?

எஸ்.ஐ. நாகூர்கனி

பீரிஸ் : அரசாங்கமும் புலிகளும் மோதிக் கொண்டு அதிகமான மக்களை இழந்துவிட்டோம். நடுவில் சந்தர்ப்பம் பார்த்து தம்பிலாக்கள் குழம்பப் பார்க்கிறானுகள் இனியாவது நம்மிரு இனங்களும் சமாதான ஒப்பந்தம் செய்துவிட்டு தம்பிலாக்களை வாய் மூட வைக்கவேண்டும்.



பாலா: சோனிக்காக்காமார் இவையளைப் பார்த்துக் கொண்டிருப்பினமோ? சோனிக் காக் காமார்களை நசுக்குவது மிகவும் இலகுவான விடயமல்ல. இவ்விடயத்தை எவ்வாறு கையாள் வதென்று சொல்லுங்க மைடியர் பீரிஸ், உங்களுக்குத்தானே அவர்களைக் கையாண்ட அனுபவம் நிறையவே இருக்கின்றது!

பீரிஸ்: மைடியர் பாலா நீங்கள் மறந்து ட்டீங்களே, முஸ்லிம் தலைமைத்துவத்தையும் அதற்கு விசுவாசமான ஒருவரையும் பிச்சைபோட்டு வாங்கியிருக்கின்றோம். அதற்கு நீங்களும் உடந்தையாகத்தான் இருந்தீர்கள்.

மிஸ்டர் பாலா. எங்களது கைவசம் இருக்கும் தலைமைத் துவம் நாங்கள் சொல்வதற்கெல்லாம் தலையசைக்கும் தலைமைத்துவமாக நாம் அவரை ஆக்கியிருக்கின்றோம். மற்றவரை உங்களது நண்பர் கொம்ரேட் பாலகுமார்தானே இயக்கிக் கொண்டிருக்கின்றார். அவர் ஆரம்ப காலத்திலிருந்து உங்களுடனேதான் இருக்கின்றார். ஆகவே நீங்களும் அவரை வைத்து உங்களது காய்களை நன்றாக நகர்த்துகிறீர்கள் தானே பாலா.

மறுபக்கம்

பாலா: மிஸ்டர் பீரிஸ் நீங்கள் சொல்வது உண்மைதான், அவ்வாறிருந்தாலும் மற்ற சோனிக் காக்காமார் சும்மா இருக்க மாட்டினம். அவர்கள் எமக்குப்பிரச்சனை கொடுக்கினம். என்னசெய்யலாம் என்று சொல்லுங்கள் மிஸ்டர் பீரிஸ்.

பீரிஸ்: மைடியர் பாலா நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படத்தேவையில்லை. எல்லாம் எங்களது கைவசம்தான் இருக்கின்றது. முஸ்லிம் தலைமைத்துவம்கூட நம்மிடம்தானே இருக்கின்றது. எனவே சமாதானப் பேச்சுவார்த்தையில் அவரை எமது அரசு தரப்புப்பிரதிநிதியாகத்தான் எடுத்திருக்கின்றோம். ஆகவே அவர் தம்பிலாக்களின் பிரச்சினைகளைப்பற்றி பேச முற்பட மாட்டார். பேசினாலும் குழப்பக்காரர்களை சமாளிக்கத்தான் இடைக்கிடையே பேசுவார். அதனை உங்களுக்கு வெளிப்படையாகவும் சொல்லித்தானே இருக்கிறார். அவரது நிலை யையும் புரிந்து கொள்ளச் சொல்லி. அவர் ஏதாவது தவறாகக் கூறினாலும் நீங்கள் அதனை சீரியஸாக எடுக்கத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதை பேச்சுவார்தை மேசையில் பேசி எடுக்கவேண்டியதையெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கோ. அதேபோன்று நாங்களும் எங்களுக்கு வேண்டியதை செய்துகொள்வோம். இதுதானே நமது திட்டம்.

பாலா: ஹாஹ்ஹாஹா உங்களது ஐடியாக்கள் மிகவும் பிரமாதமாக இருக்கின்றதே. இதைத்தான் நாங்களும் உங்களிடத்தில் எதிர்பார்த்திருந்தோம். நன்றி மிஸ்டர் பீரிஸ்

அபூஅலி, ஏ.

நீங்களும் எழுதலாம்
விவாதக் களம்

முஸ்லிம் குரல் சுவடு 1இல் "பேச்சுவார்த்தை என்ற பெயரில் வெளிநாடு சென்று ஹோட்டலில் படுத்துக்கிடந்து வருவதென்றால் அது எனக்குத் தேவையில்லை" என்ற தலைப்பிலான எம்.ஐ.எம். முஹையதீன் அவர்களின் பேட்டி "உரையாடல் தொடர்கிறது" எனும் பகுதியில் இடம்பெற்றிருந்தது கண்டேன்.

மேற்படி நேர்காணலை வாசித்த ஆயிரக் கணக்கான வாசகர்களுள் நானும் ஒருவன். அவ்வேளை அப்பேட்டி தொடர்பாக என்மனதில் எழுந்த சில உணர்வுகளை பகிர்ந்து பதிவாக்கி வைக்கலாமென்ற எண்ணத்தின் பிரதிபலிப்புத்தான் இக்குறிப்புக்களின் பின்னணியாகும்.

குறித்ததொரு பிரமுகரைப் பிரபல்யப்படுத்துவதற்கு அல்லது அவர் மக்களுக்கு வெளிப்படுத்த நினைத்திருப்பவற்றைச் சொல்வதற்கு வழி அமைத்து கொடுத்த பேட்டிகளை வாசித்து வந்த நமக்கு, மேற்படி செவ்வி வித்தியாசமானது. அதுமட்டுமன்றி எழுதாத விதி முறையாகப் பேணப்பட்டு வந்த மரபு முறைமைகளும் இங்கு உடைத்தெறியப்பட்டிருக்கின்றது. புதிய பரிமாணத்தைப் பேட்டி எனும் அம்சத்தில் "முஸ்லிம் குரல்" தொடங்கி வைத்திருக்கின்றது.

ஆதலால் நமது அரசியல் தளத்தையும் சமூக நோக்கையும் அச்சொட்டாக எடுத்துக் காட்டும் வகையில் இந்நேர்காணலை நெறிப்படுத்தி நகர்த்தியிருக்கும் பாங்கைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதேநேரம் இன்று நமது சமூகத்தை எவ்வாறு நமது தலைமைகள் எய்த்து, தம்மைப் பலப்படுத்துகின்றனர் என்பதை புலப்படுத்தும் வகையிலும் இந்நேர்காணல் அமைந்திருக்கின்றது.

இன்று அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வருகின்ற பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு எட்டப்படும் என்றிருந்த சிறிய நம்பிக்கைகள்கூட இப்பேட்டியை வாசித்த பின்னர் சிதைவுற்று விட்டதென்றே கூறவேண்டும். ஏனெனில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகத்தின் நலன்கள் புறக்கணிக்கப்படாது. அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கும், அச்சங்களுக்கும் நியாயபூர்வமான தீர்வு காண்பதற்கு வழி செய்து தருவோம் என்ற கூற்றினை முன்மொழிந்தவர்களாகவே நமது தலைமைகள் நம்மை நம்ப வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

அதேநேரம் இப்பேச்சுவார்த்தை அரங்கில் கலந்து கொண்ட ரவூஃப் ஹக்கீமிற்கு ஆலோசகராகச் சென்று, அங்கு என்ன நடைபெறுகின்றன என்பதை நன்கு அவதானித்து வந்த எம்.ஐ.எம். முஹையதீன் வெளிப்படுத்தி இருக்கின்ற கூற்றுக்களை நோக்கும் போது முஸ்லிம் சமூகம் இப்பேச்சுவார்த்தை மேசையில் கணக்கில் கொள்ளப்படாத தரப்பு என்பதை புலப்படுத்தி வைக்கின்றது.

இதன் பின்னரும் நமக்கான தீர்வு நடைபெற்று வருகின்ற பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் என்ற நம்பிக்கையினை நாம் கொண்டிருப்பதானது நம்மையும், நமது எதிர்காலச் சந்ததிகளையும் நிரந்தரமான ஏமாளிகளாகவே ஆக்கி வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதுமட்டுமன்றி, நமக்கான அரசியல் தலைமைத்துவங்கள் மிகவும் பலவீனப்பட்டும், பின்தள்ளப்பட்டும் இருக்கின்றன என்பதையும் கோடிட்டுக் காட்டுவதாகவும் இந்நேர்காணல் அமைந்திருக்கின்றது.

பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்களுடைய பிரச்சினைகளை முறையாகக் கையாள்வதற்கான எந்தவிதமான தரவுகளும் ஆவணங்களாக இல்லை என்று எம்.ஐ.எம். முஹையதீன் கூறி, அவரும் இந்த விடயத்திலிருந்து தப்பித்துக் கொள்ளப்பார்க்கிறார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் இவ்வாறான ஆவணங்கள் இல்லை என்பது நமது மக்கள் நன்கறிந்தவை. ஆனால், சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்களின் இழப்பீடுகள், காப்பீடுகள் எனப்பல நூல்களையும், பல கட்டுரைகளையும் எழுதிக்கொண்டிருக்கும் எம்.ஐ.எம்.முகைய்யதீனின் தேடல்களும் கருத்துக்களும் கூட ஒருமுறையான ஆவணமாகக் கொள்ளும் வகையில் அமைந்திருக்கவில்லை எனும் செய்தியையும் இப்பேட்டி தெளிவுபடுத்தி வைக்கின்றது.

அவ்வாறாயின் இவர் போன்று நம்மத்தியில் ஆய்வாளர்கள், புள்ளிவிபர நிபுணர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டோர்கள் கூட நம்மை ஏமாற்றிக் கொண்டே இருக்கின்றனர் என்பது நன்கு வெளிப்படுகின்றது. குறிப்பாக எம்.ஐ.எம். முஹையதீன் தனது பொருளாதாரத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டு முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையை வெளிப்படுத்தும் வகையில் வெளிக்கொணர்ந்த நூற்கள் கூட ஓர் ஆவண[illegible] தகுதியற்று இருப்பது வேதனைக்குரிய அம்சம். நாம் நமது அரசியல் தலைமைகளை நம்பி ஏமாந்தோம். நாம் நமது புத்திஜீவிகளை நம்பி ஏமாந்தோம். நாம் நமது ஆய்வாளர்களை நம்பி ஏமாந்தோம். என்ற பட்டியல் நீண்டு செல்லத் தொடங்கி இருப்பதானது நமது சமூகத்தின் விடுதலையும், விழிப்புணர்வுகளும் தூரமாகிக் கொண்டிருப்பதையே சுட்டிக்காட்டுகின்றது. இது ஓர் ஆரோக்கியமான மறுமலர்ச்சியை நோக்கிய பயணத்திற்கு உகந்ததல்ல.

கூட்டுமொத்தமாக இப்பேட்டியை வாசித்து முடித்த பின்னர் நம்மனதில் நிலை கொள்ளும் அம்சங்களில் பின்வரும் இரண்டும் மிகவும் பிரதானமானவை:

1. முஸ்லிம் தலைமைகளின் அசமந்தப் போக்குகளும் பதவிகளுக்காக தலையாட்டும் பொம்மைத் தனங்களும் மறு பரிசீலனைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது.

2. அதேநேரம் தன்னையும் சுயவிமர்சனத்திற்குட்படுத்தி தனது வெறுமையையும் ஆவணமாக்காமை என்ற வறுமையையும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருப்பது.

ஆகவே இனியாவது நமது அரசியல் தலைமைகளும், புத்திஜீவிகளும் ஆய்வாளர்களும் உணர்வுத் தெளிவடைந்து ஆக்க பூர்வமான செயற்திட்டங்களின் வழி நின்று நமது சமூகத்தின் பல்வேறு வகையான அவலங்களையும் அகற்றிக் கொள்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையில் இறங்குபவர்களாக மாறாத வரையும், இதனை மக்கள் உணர்ந்து அதற்கான அழுத்தங்களை கொடுக்காதவரையும் நாம் இன்னும் பின்னடைந்த சமூகமாக இருப்பதை இறைவனைத் தவிர யாராலும் மாற்ற முடியாது.

எம்.எச்.எம். ஹலீம்,
மாளிகைக்காடு.

"முஸ்லீம் குரல்" முதலாவது இதழைப்பார்த்தேன். உண்மையில் இப்பத்திரிகை எமக்குத்தேவை! நமது சமூகம் நெருப்பை நோக்கி சுவாசித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இது கொஞ்சம் ஆறுதல் தருகின்றது. அடிக்கொரு கொள்கைகொண்ட நமது அரசியல் வாதிகளின் உயிரில்லாத கருத்துக்களுக்கு களம் கொடாதீர்கள். உண்மையை எழுதுங்கள், படிப்பதற்கு ஆயிரம் ஆயிரம் ஆத்மாக்கள் உள்ளன.

[illegible]
பள்ளி வீதி, கல்முனை.

இழப்பீடுகள் வழங்குவதில் காட்டப்படும் பாரபட்சமும் புறக்கணிப்புகளும்!

கொடூரமான போரினாலும் வன்செயல்களினாலும் நமது மக்கள் மிக மோசமாகப்பாதிக்கப்பட்டு வந்துள்ளனர் - வருகின்றனர் - சொத்து இழப்பு, உயிரிழப்பு, அவயங்கள் இழப்பு என ஆயிரமாயிரம் துயர்கள் நமது மக்கள் முன் நிலைகொண்டுள்ளன. இவ் இழப்புகளுக்கு ஓரளவு நஷ்ட ஈடும் வழங்கப்பட்டு வருகிறது. உண்மையில் இவ் இழப்பீடுகள் பாதிக்கப் பட்டவர்களை போய்ச் சேர்ந்திருக்கின்றதா என்ற கேள்வியும் துயர்தரும் அதிர்ச்சியுடன்கூடிய கதைகளும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் உள்ளன.

தங்களுடைய அரசியல் செல்வாக்கினைப் பிரயோகித்து அரசியல்வாதிகளின் துணையுடன் பாதிக்கப்படாத அல்லது ஓரளவு பாதிக்கப்பட்ட பலர் பல லட்சங்களை "இழப்பீடு பெறல்" என்ற போர்வையில் தங்களது பையில் சுருட்டிக்கொண்டதை கண்டும் கேட்டும் உண்மையாகப் பாதிக்கப்பட்டோர் மிக்கதுயர் கொண்டுள்ளனர். உண்மையில் பாதிக்கப்பட்டவர்களின் இப்படியான துயரம் தரும் கதைகளைக்கேட்கும்போது கடந்த காலத்தில் நடந்த இந்த இழப்பீடு வழங்குவதில் இருந்த ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள், புறக்கணிப்புக்கள் நமது ஏழை மக்களை மிக கடுமையாகப் பாதித்திருக்கின்றன என்பது தெரிகிறது.

இலங்கையின் அரசியலமைப்போ இலங்கை பிரஜைகள் அனைவரும் இனம், மதம், பால் நிலை கடந்து சமமானவர்கள் என்றே வலியுறுத்துகின்றது. ஆனால் இழப்பீடுகள் வழங்கப்படும்போது அவர்களை ஏற்றத் தாழ்வுமிக்கவர்களாக வகைப்படுத்துகிறது. அதன் அடிப்படையிலேயே - இழப்பீடுகள் வழங்குகின்றது. - இதனை மெய்ப்பிக்கும் வகையில் உள்ள அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வமான அட்டவணையைப் பாருங்கள்.

உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறதா? 1200 பொதுமக்களுக்கு 42 மில்லியன் ரூபாவும் 273 VIP க்களுக்கு 30 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. இங்கு அரசாங்கம் VIP கள் என்று வகைப்படுத்துபவர்கள் யார் ?

அரசாங்கப் பணத்தில் சொகுசாக வாழ்ந்து, கோடி கோடியாக பணம் சம்பாதித்து மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் கூட்டத்தைத்தான் VIP என வகைப்படுத்துகின்றது அரசாங்கம். (ஒரு சில கண்ணியவான்களும் உள்ளனர் அவர்கள் எங்களை மன்னித்தருள்க)

இந்த VIP களுக்கும் படித்தரங்கள் உள்ளது.

- அ. அமைச்சர்கள்
- ஆ. பாராளுமன்ற உறுப்பினர்கள்
- இ. சிரேஷ்ட தர அரசாங்க உத்தியோகஸ்த்தர்கள்
- ஈ. மாகாண சபை முதலமைச்சர்கள், மாகாண சபை அமைச்சர்கள்,
- உ. மாகாண சபை உறுப்பினர்கள்
- ஊ. பிரதேச சபை உறுப்பினர்கள்
- எ. பாராளுமன்ற மாகாணசபை உள்ளூராட்சி வேட்பாளர்கள்
- ஏ. அ. உ. வரையானவர்களின் பிள்ளைகள்
- ஐ. அ. உ. வரையானவர்களின் பெற்றோர், சகோதர சகோதரிகள்

இவர்களுக்கு பல இலட்சங்கள் இழப்பீடுகளாக வழங்கப்படும். ஆனால் சாதாரண பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான இழப்பீட்டுத் தொகையைப்பாருங்கள்.

பொதுமக்கள்	தொகை
திருமணமானவர்கள்	50 ஆயிரம் ரூபா
திருமணமாகாதவர்கள்	25 ஆயிரம் ரூபா
18 வயதுக்கு. கீழ் உள்ளோர்	15 ஆயிரம் ரூபா

1994 - 2002 வரையான சம்பவங்கள்
மரணமடைந்தவர்கள் காயப்பட்டவர்கள்

பொது மக்கள் 1200 பேர்	இழப்பீடு வழங்கப்பட்ட தொகை 42 மில்லியன் ரூபா
அரசாங்க ஊழியர்கள் முக்கியமான பிரமுகர்கள் 273 பேர் (VIP)	இழப்பீடு வழங்கப்பட்ட தொகை 30 மில்லியன் ரூபா

சொத்துகளுக்கான இழப்பீடு

பொது மக்கள் 3647 பேர்	தொகை 260 மில்லியன் ரூபா
அரசாங்க ஊழியர்கள் 5210	இழப்பீடு வழங்கப்பட்ட தொகை 521 மில்லியன் ரூபா
முக்கிய பிரமுகர்கள் (VIP) 74	இழப்பீடு வழங்கப்பட்ட தொகை 11.1 மில்லியன் ரூபா

ஆனால் ஒரு VIP மரணமடைந்தால் அல்லது காயப்பட்டால் அவருக்கு ஆகக்கூடிய தொகை 5 லட்சம் ரூபா வழங்கப்படலாம் என்பது அரசாங்கத்தின் நியாயமாம்? யாரிடம் இதுபற்றி நாம் முறையிடலாம்?

1994 - 2000 ம் ஆண்டுவரை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக எம். எச். எம். அஷ்ரப் இருந்தார். அவரின் காலத்திலும் பல்வேறுபட்ட புறக்கணிப்புக்கள், மோசடிகள் - அவரின் கூட இருந்தவர்களால் மேற்கொள்ளப்பட்டது அனைவரும் அறிந்ததே. கடசி அரசியல், கொந்தராத்து அரசியல், கோடினேட்டர் அரசியல் என பல இலட்சங்களைப் பலர் சுருட்டிக் கொண்டனர். பாதிக்கப்பட்ட மக்கள் கணிசமாக புறக்கணிக்கப்பட்டுமிருந்தனர். மிகமோசமாக

> "அரசாங்கப் பணத்தில் சொகுசாக வாழ்ந்து, கோடி கோடியாக பணம் சம்பாதித்து மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் கூட்டத்தைத்தான் VIP என வகைப்படுத்துகின்றது அரசாங்கம். (ஒரு சில கண்ணியவான்களும் உள்ளனர் அவர்கள் எங்களை மன்னித்தருள்க)"

ஏழை மக்களினதும்
பாதிக்கப்பட்ட
மக்களினதும்
கண்ணீர்க் கதை
தொடர்கிறது...

2000 ஆம் ஆண்டுக்குப்பின் சந்திரிகாவின் இரண்டாவது அரசாங்கத்தில் புனர்வாழ்வு அமைச் சராகவிருந்த பேரியலின் காலத்தில் புதிய தேர்தலை எதிர்கொள்வதற்கு புனரமைப்புப்பணம் பலகோடிகள் அள்ளி வீசப்பட்டது. தங்கள் கட்சியின் சார்பில் தேர்தல் வேலை செய்தால் பல ஆயிரம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் மாற்றுக் கட்சி என்றால் ஒரு சதமும் இல்லை "தேர்தல் என்றாலே நஷ்டஈடு என்ற போர்வையில் பல ஆயிரம் பெறலாம்" என்ற நிலை உருவாக்கப்பட்டதை நாம் கண்டோம். ஒவ்வொரு ஊரிலும் பல பெருச்சாளிகள் பல இலட்சங்களை மோசடித்தனமாக 2000 ஆம் ஆண்டு தேர்தலின்போது சுருட்டிக் கொண்டனர். இந்த நிலை மாறவேண்டும். புனர் வாழ்வு என்ற பெயரால் நஷ்டஈடு வழங்கப்படும் போது நாட்டு மக்களிடையே பாரபட்சம் காட்டப்படுவதை அரசாங்கம் மாற்ற முன் வரவேண்டும். இதற்காக வேண்டி மனித உரிமைகள் அமைப்புகள் போராட வேண்டும். அத்துடன் இழப்பீடுகள் வழங்கப்படும் போது அரசியல் செல்வாக்கு, அதிகார துஷ்பிரயோகம், ஊழல், புறக்கணிப்பு என்பன களையப்படுவதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சும், அரசாங்கமும் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சந்திரிகா - ஜே.வி.பி கூட்டு உறுதியாகிவிட்டது!
சவாலை சமாளிப்பதற்கான ஆயத்தத்துடன் அரசாங்கம் உள்ளதா?

சிங்களத் தீவிரவாத அரசியல் சக்திகளுடன் சந்திரிகா கைகோர்த்து செயற்படுவதற்கான இறுதி நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்பட்டு உடன்பாடு காணப்பட்டு விட்டது. எதிர்வரும்

10ஆம் திகதி 10 இலட்சம் மக்களைத் திரட்டி பெரும் பேரணி ஒன்றை கொழும்பில் நடாத்தப்படுவதற்கான ஆயத்தங்கள் இரு கட்சிகளின் ஆதரவாளர்கள் மத்தியிலும் முடுக்கி விடப்பட்டுள்ளது. ஜே.வி.பியுடன் சந்திரிகா கூட்டுச் சேர்வதற்கான எதிர்ப்பினை பொதுஜன முன்னணிக்குள் காட்டி வந்தவர்கள். இப்போது ஒதுக்கப்பட்டும் மௌனமாக்கப்பட்டும் விட்டனர். ஜே.வி.பியினரை ஆரம்பத்திலிருந்து எதிர்த்து வந்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கூட, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கு எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேரத் தயார் என அறிவித்து விட்டார்!

இக்கூட்டு முன்னணி சமகால இலங்கை அரசியலில் பெரும்தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தப் போகிறது என்பதை அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். பெரும் அரசியல் முரண்பாடுகள் நிலவி வந்த இவ்விரு கட்சிகளுக்குமிடையே இன்று ஏற்பட்டுள்ள இப்புதிய உறவானது, ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு பெருத்த சவாலாக் இருக்கப் போவதை ரணில் விக்கிரமசிங்க அவர்களும் உணர்ந்து விட்டார் என்பதை அவரது அண்மைக்கால உரைகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

எந்த நேரத்திலும் பொதுத் தேர்தலைச் சந்திக்க, ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கின்றது என்பதே அவரது வெளிப்படையான தொனியாக இருக்கிறது. சந்திரிகா, ரணில் கூட்டு முன்னணிகளும் தங்களின் அரசியல் நோக்கிற்கேற்ப மக்களை அணி திரட்டும் பணியில் ஏட்டிக்குப் போட்டியாக தென்னிலங்கையில் இறங்கி விட்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. இதனால் தென்னிலங்கை அரசியல் நிலைமை சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள சந்திரிகா, ஜே.வி.பி பேரணியில் இவ்விரு கட்சிகளினதும்

தலைவர்கள், தங்களது செயற்பாடு குறித்து விளக்கங்களை அளிக்கவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இத்தினத்தில் முக்கியமான பல்வேறு அறிவித்தல்கள் வெளியிடப்படலாமென நம்பப்படுகிறது. ஒரு பொதுத் தேர்தல், மிகக் கிட்டிய காலத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பின், சந்திரிகா, ஜே.வி.பிக் கூட்டை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணி கடந்த பொதுத் தேர்தலைவிட பலத்த சவாலை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்பது வெளிப்படையானது.

என் தோட்டத்து ஆயுதம்

எனது,
தோட்டத்து மரம்
பூப்பூத்து எவ்வளவு காலம்!

சூரியனை கண்டும்
நிலாவைப் பார்த்தும்,
அது -
பூப்பதாக இல்லை.

நீட்டிய சொத்தையை
அது இன்னும்
நீட்டிக் கொண்டுதான் இருக்கின்றது.

பனித் துளிகளால்
ஊதியும் பர்த்தேன்,
கடல் தண்ணீரால்
முகத்தில் அடித்தும் பார்த்தேன்,
பூப்பதாக இல்லை.

நாளை மட்டும்
ஒரு முறை பார்ப்பேன்,
பூக்காவிடின் -
மரத்தைக் கொத்தி
அது -
இருந்த இடத்தில்
புதிய சேனை செய்வேன்!

கலிமாவால்
பாத்தி பிடித்து
"கல்பின்"
ஆற்றிலிருந்து
நீர் பாச்சுவேன்!

இனி எதற்கு
மரமும் பூவும்!

விதைத்ததை அறுவடை செய்து
வீரனாய், புறப்படுவோம்.

- முஹம்மட் அபார்

ஆக்கும் சக்தியை உணரச் செய்வோம்

நீங்களும் படிக்கலாம் சில குறிப்புகள்...

ஆரம்பப்பள்ளிகள் நல்ல தலைமுறையினரை உருவாக்குகின்ற ஒரு தளமாக அமைய வேண்டும். மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல மனிதர்களாக, பொறுப்புள்ளவர்களாக, அன்பானவர்களாக, நல்ல சிந்தனை உள்ளவர்களாக வளருவதற்கு இக்காலக் கட்டத்தில் அடித்தளம் போடப்பட வேண்டும்.

பரீட்சையில் மிகச் சிறப்பான தேர்ச்சியைப் பெறவேண்டும். இத்தனை 'ஏ'க்களைப் பெறவேண்டும். சிறந்த பள்ளியாக உருவாக வேண்டும் என்ற கொள்கைகளை மட்டும் குறிக்கோளாக செயல்படுவதில் மட்டும் அக்கறை காட்டுவோமானால் எதிர்காலங்களில் பல விளைவுகள் அதிகரித்துவிடும்.

நல்ல பழக்க வழக்கங்கள் கொண்ட மாணவர்களாக, தன்னம்பிக்கையைக் கொண்டவர்களாக நல்ல உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவர்களாக உண்மையாக நடந்து கொள்பர்களாக, உணர்வு உள்ளவர்களாக, அவர்களுக்குள் திறமைகள் புதைந்திருக்கின்றன என்பனவற்றை தெரிந்து கொள்பவர்களாக வளர்த்து விட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இவர்களிடம் அழிக்கும் சக்தியை விட ஆக்கும் சக்தியே மேலோங்கி இருக்கின்றது என்பதையும் புரிய வைக்க வேண்டும். உணர வைக்க வேண்டும். இதை உணர வைத்தால் அவர்கள் கத்தியையும், கழியையும் தூக்கிக் கொண்டு அலைய மாட்டார்கள்.

இளம் பிராயத்தில் இதை செய்ய தவறியதால்தான் இன்றைய இளைஞர்கள் அழிக்கும் சக்தியே, தங்களுக்கு இருக்கும் பலம் என்று செயல்பட தொடங்கியிருக்கின்றார்கள்.

மாணவர் பருவம் குறிப்பாக சிறார் பருவம் என்பது ஒவ்வொரு குழந்தையின் வாழ் நாளில் மிக முக்கியமான காலகட்டமாகும். மேலும் அந்த காலக்கட்டத்தில் அவர்களுக்குச் சொல்லப்படுகின்ற விஷயங்கள் அவர் [illegible] தீர்மானிக்கும்.

இந்தக் கால கட்டத்தில் அவர்கள் தெரிந்து கொள்கிற விஷயங்கள் அவர்களை நல்ல பண்புள்ள, சிந்தனையுள்ள இளைஞர் யுவதிகளாக, தலைவர்களாக, சமுதாயத்துக்கு பயனுள்ளவர்களாக உருவாக்குவதற்குத் துணைபுரியும்.

ஆக, இந்த இளம் மாணவர்களின் சிந்தனையை, மனதை நன்கு செப்பனிடும் மாபெரும் பணியைதான் நமது ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் கைகளில் ஒப்படைக்கப்படுகின்றது.

இந்தக் காலக்கட்டத்தில் அவர்கள் இளம் சிறார்களுக்கு ஆற்றும் கடமை எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தை உருவாக்கும் வித்தாகிறது.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள், தங்களிடம் ஒப்படைக்கப்படும் இந்தச் சிறார்களுக்குப் பாடம் போதிக்கும் அதே வேளையில், நல்ல பண்புகளையும், எண்ணங்களையும், உணர்வுகளையும் சேர்த்து சொல்லிக் கொடுத்தால் அது அவர்களுக்கு நல்ல எதிர்காலம் அமைவதற்கு வழிவகுக்கும்.

வளரும் பருவத்திலேயே செடிகளுக்குப் போடப்படும் உரம் அச்செடி செழிப்பாக வளருவதற்கு துணை புரிவது போல இளம் மாணவர்களின் ஆரம்பம் சரியானதாக இருந்தால்தான் முடிவும் சிறப்பானதாக இருக்கும்.

ஆரம்பத்தில் கோட்டை விட்டு விட்டால் இடையில் சரிசெய்யப்படாமல் போகும் போது அதன் பிறகு வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்?.

வளர்கின்ற அந்த இளம் பிஞ்சுகளின் மனதில் நஞ்சுகளை ஊட்டாமல் அமிர்தத்தை ஊட்டினால், அந்த இளம் பிஞ்சு செழிப்பாக வளரும். அந்த அமிர்தம் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் கரங்களில்தான் இருக்கின்றது.

பள்ளிக் கூடத்தில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மேற்கொள்கின்ற அதே செயல் முறையை வீட்டில் உள்ள பெற்றோர்களும் மேற்கொள்ள வேண்டும்.

அப்பொழுதுதான் நல்ல ஆரோக்கியமான சமுதாயத்தை வளர்க்க முடியும். அனைவரும் பாடுபடுவோம். பலன் நிச்சயம் கிட்டும்.

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 120/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 240/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 480/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பிவைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் L.Rajeeb, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

தொடர் கதை

யுத்தமும் அதன் இரண்டாம் பாகமும்

-சக்கரவர்த்தி-

கொடுங்காரியத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை எப்படிப் புரியவைப்பேன் சின்னலெவ்வைக் காக்காவுக்கு? காக்கா விறுவிறுவென எங்கோ வேகமாய்ப் போகிறார். இதுகளிடம் பேசி என்ன ஆகப்போகிறது என நினைத்திருப்பாரோ என்னவோ.

"வெள்ளாம போனாப்போகிது உசிரயாவது காப்பத்துவம்" என நினைத்துக் கொண்டாரோ என்னவோ.

"இப்பலாம் நான் அப்படி இல்ல காக்கா" என மனது சொல்லச் சொல்லியது. நான் சொன்னால் காக்கா என்ன நம்பவா போகின்றார். வலது தோளில் இயமன் தொங்குகின்றானே.

தோளில் தொங்குவதைக் கழற்றி இருகைகளாலும் பிடித்து முகத்துக்கு நேராக கொண்டு வந்து பார்க்கிறேன். ஜடம்! பாவம் இதற்கு என்ன தெரியும்

விடியல் சூரியன் கொளுத்த ஆரம்பிக்கும் முன்னதாகவே பிரதேசம் எங்கும் வெகிர் அடித்துக் கொண்டிருந்தது. எத்தனை சூடுகள் எரிந்து சாம்பல் ஆகின என்று கணக்கெடுக்க முடியாதபடி கண் எட்டும் திசையெங்கும் புகைந்து கொண்டு இருந்தது.

எத்தனை தொழிலாளிகளின் உழைப்பு எத்தனை ஆயிரம் வயிறை நிரப்பப் போகும் நெல்மணிகள் எத்தனையோ இலட்சம் மனங்கள் எல்லாமும் ஒரு இரவுக்குள் சாம்பலாகிக்கிடக்கிறது களத்து இருட்டில்.

ஏன்? நெஞ்செரியும் இந்தத் தீ ஏன்?

எந்த சாமியை எந்த பகவானை குளிர்விக்க இந்த கேள்வி?

"இந்த பொட்டணிக்காக்கா எங்க பொயித்தான் ஒரு கிழமையா? வருசகாலமும் அதுவுமா? மூத்தவள் பள்ளிக்கு போட்டுப் போற சட்டைக்கு ரெண்டு யார் வெள்ளைப் பப்பிளின் வாங்கிடலாம். எண்டால் இவனைக் காணல்லயே. எண்ட கைச்சட்டயும் முதுகால பிரிஞ்சி பொயித்து. புளியந்தீவுக்கு போய் சீத்த வாங்கிறது எண்டால் லேசிப்பட்ட வேலையா?" பொட்டணிக் காக்காவை காணாது அம்மா சலித்துக் கொள்வாள்.

முன்னர் எல்லாம் காத்தான்குடியில் இருந்து பொட்டணியில் துணி புடவைகளை கட்டிக் கொண்டு இருபத்தி ஐந்து மைல்கள் சைக்கிளை ஓட்டிக்கொண்டு அவர்கள் வந்தால் தான் ஏழை அம்மாக்களுக்கும் உடுதுணிகள் உடுபுடவைகளுக்காய் அம்மாக்கள் காத்திருக்க எங்கே போனார்கள் இந்த பொட்டணிக் காக்காக்கள்?

துணிகளையும் சைக்கிளையும் கொன்றவர்கள் எடுத்துக்கொள்ள – மூளை சிதறிய காக்கா அரைகுறையாய் கிரான் குளக்காட்டுக்குள் புதைக்கப்பட்டது எப்படித் தெரியும்?

காத்திருந்து விட்டு அம்மா துணிவாங்க புளியந்தீவு போய் இருப்பாள். உம்மா இப்போதும் காத்திருப்பாளே.

மூணு போகம் வெளஞ்ச ஒடன.... ஒண்ட
மூத்த மாமன் கொண்டோடி வருவான்
முன்னூறு சாக்கு நெல்லு
ஆராரோ ஆரிரரோ...
சித்தாண்டி சின்ன மாமன்
ஆண்டி முருகன் தீர்த்தம் கொண்டு
ஓடோடி வருவான்
ஆராரோ ஆரிரரோ....
பாழாப்போன பழுகாமத்தானோட
ஓடிப்போன உன்னோட மாமி
மூத்த மகன உனக்கு கட்டித்தர பாலையடி வட்டைக்க கிடக்க வயலோட
உறுதிய
கொண்டோடி வருவான்
ஆராரோ ஆரிவரோ ...
.....
வட்டானையாரு வயலையெல்லாம் பாப்பாரு
கூத்தாடப் போன உன்னோட
அண்ணனார அண்ணாவியாரு பாப்பாரு
பால நீ குடிச்சித்து படுத்துறங்காயோ
என்னோட சோனகத்து முட்டாசே...

சோனகத்து முட்டாசைத்தவிர என்னை உவமிக்க வேறு பொருள் கிடைக்கவில்லை அம்மாவுக்கு.

முன்னூறு சாக்கு நெல்மூட்டையைக் காட்டிலும்
சித்தாண்டி முருகன் தீர்த்தத்தைக் காட்டிலும் பாலையடி வெட்டை வயலைக் காட்டிலும்
மாமி வீட்டு மகளைக்காட்டிலும்
கவர்ந்தது என்னவோ சோனத்து முட்டாசிதானே...

சோனகரும் நாங்களும் ஸ்நேகமாகத்தானே இருந்தோம். ஒன்றோடு ஒன்றாய் தானே இருந்தோம். ஒரு மொழிதானே பேசினோம். அவர்கள் அரபும் நாங்கள் சமஸ்கிருதமுமா பேசினோம். இல்லையே... ஒரே பள்ளியில்தானே படித்தோம். சரஸ்வதி பூசைக்கு. இக்பால் வேஸ்டி கட்டி... "ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் ஓய உணர்விக்கும் என் அம்மை" என்று நெஞ்சுருகத்தானே பாடுவான்.

என் புறம் கையில் அருவருப்பாய்த் தோன்றிய உண்ணிகள் உதிர்ந்து போக வேண்டி கல்முனைக் கடற்கரைப் பள்ளி வாசலுக்கு உப்பு தருவதாக நேர்த்திக் கடன் வைத்தாளே அம்மா.

நான்கூட றம்ழான் நோன்பின் இறுதி மாலையில் இக்பால் வீட்டு முற்றத்தில் இருக்கும் கடற்கரையில் நின்று தலையில் துணிகட்டி பிறை நிலா பார்த்திருக்கின்றேனே...

என்ன ஆயிற்று எங்களுக்கு?

கண்கள் கலங்கி வழிந்தன...

அடித்த காற்றில் கண்களுக்குள் சாம்பல் அப்பிக்கொள்ள கசக்கி எரிகிறது கண்கள்.

சாம்பலாகிப் போன சூடுகள் புகைந்து கொண்டிருக்க பற்றி எரிகிறது நெஞ்சம்.

யார்... யார்...? யார் இட்ட தீ இது?

இதற்கோர் முற்றுப்புள்ளி வேண்டாமா?

இதுவே கடைசியாக இருக்கட்டுமே. இந்த துவக்கும் வேண்டாம். சித்தாந்திகளின் சித்தாந்தமும் வேண்டாம். சாந்தி வேண்டும். எரியும் தேசத்தில் புற்கள் முளைவிட வேண்டும். பூக்கள் பூத்திட வேண்டும். சாம்பல் மேடெல்லாம் மீண்டும் களத்து மேடாக வேண்டும்.

துவக்கையும் மூன்று மகசினையும் மேசையில் வைத்தேன். அவர்கள் எல்லோரும் விநோதமாய் என்னைப் பார்த்தார்கள். நான் இறுக்கமாய் நின்றிருந்தேன்.

"வாரும்... ஒரு கிழமையாய் எங்கே போன நீர்?"

சுந்தர அம்மானின் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் போல் எனக்குத் தோன்றவில்லை.

"இயக்க கட்டுக்கோப்பை மீறுறதால என்ன விளைவு ஏற்படும் என்று உனக்குத் தெரியும் தானே...?"

சுந்தர அம்மானை வெறுப்பாய்ப் பார்த்தேன். ஒன்றரை வருடம் தான் யாழ்ப்பாணத்தில் இருந்தார். ஒட்டிக்கொண்ட பிறதேச தமிழை அவரால் கழற்ற முடியவில்லை.

"முஸ்லிம் சனத்தின்ர சூட்டுக்கு ஆரு நெருப்பு வச்சது"

கோபமாய்க் கேட்ட என்னை ... விழிகளை மட்டும் உயர்த்தி மேற்பார்வை பார்த்து

இதமாய் ஒருவித வீரக்களிப்பாய் புன்னகைத்தார். பின் உடல் முழுவதும் அசைய தலையை மேலும் கீழுமாய் ஆட்டி உடல்மொழி பேசினார். அவரது உடல்மொழி எனக்குப் புரியவில்லை என நினைத்தாரோ என்னவோ.

"நான்தான்! நேற்று இரவு. மொத்தம் ஐம்பத்திமூணு எல்லாம் சாம்பல். அது சரி ஒரு கிழமையா எங்க போன நீர்?" என்றார் வாய்மொழியாய்.

"....."

சிறு விநாடி இடைவெளிக்குள் மௌனமாகி என்னைப் பார்த்தார். பின்

"எத்தனை தரம் அவையளுக்கு கடிதம் அனுப்பினாங்கள். இந்தப் பக்கம் தொழில் செய்யப் போடாது எண்டு. இனி வரமாட்டாங்கள்."

சொல்லி முடிக்கும் போது நிதானமாகி இருந்தார்.

"அதுக்கு நெல்லுச் சூட்டுக்கா நெருப்பு வைக்கிறது? நமக்கு மாதிரி அவனுகளுக்கும் இதுதான் பாரம்பரிய மண்" என்னில் ஆத்திரம் தணியவில்லை.

"போராட்டம் எண்டு வந்த பிறகு நெல் என்ன சோனி என்ன? நம்மளின்ர பாதைக்க குறுக்க வந்தால்...? அது என்ன ஒரு மாதிரியா கதைக்கிறீர். மேலிடத்தில் இருந்து இரண்டு போ வந்திருக்கினம்... தெரியுமா உமக்கு" சுந்தர அம்மான் சொல்ல நெஞ்சுக்குள் திக்கென்றது.

"எதுக்கு இப்ப. இஞ்ச... மேலிடத்தில இருந்து..."

.... சுருக்கிக் கொண்டேன்.

"நம்மளோட வேகம் காணாமல் இருக்குதாம். வடக்கு மாதிரி கிழக்கில நடவடிக்கை அவ்வளவு திருப்தியா இல்லையாம். சோனிமாரோட நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி சில ஒப்புரேசன் செய்ய வேணுமாம்."

சுந்தர அம்மான் சொல்லச் சொல்ல திகில் பற்றி எரிந்தது இதயத்துக்குள்.

சிங்களவன் : சிறுபான்மையான எம்மை இம்சிக்க – நமக்கு சிறுபான்மையான சோனகரை நாம் இம்சிப்பதா?

சிங்களவன் மோடன் எனில்: நாம் யார்?

யுத்தத்தை நாம் விரும்பவில்லை. யுத்தம் எம்மீது திணிக்கப்படும் போது... நாம் ஆயுதம் ஏந்தி அதற்கு எதிராய் போராடாமல் இருப்போமாயின் அது எம் இனத்துக்கு செய்கின்ற துரோகமாகிவிடும் என நாளை இஸ்லாமியர் குழந்தைகள் கவச அரண்களுக்குள் இருந்து கொண்டு அறிக்கை விட ஆரம்பித்து விட்டால்...? தாங்குமா தாய் மண்? சாம்பலுக்குத் தான் தேசமா?

"முஸ்லிம் சனத்தோட இன்னும் இன்னும் பிரச்சினையை வளர்க்க நான் விரும்பவில்லை.. எண்பத்திமூணுக்கு முதல் ஒழுங்காகத் தானே இருந்தம். இப்ப என்ன வந்திட்டுது நமக்கு?"

"அப்ப நாமள் மடையரா இருந்திட்டம்"

எட்டத்தில் சத்தம் கேட்டது. புதிய குரல் வடதிசையில் இருந்து கிழக்கை துரிதப்படுத்தவும் முஸ்லிம்களுக்கு ஒப்புரேசன் செய்வதற்காகவும் வந்தவர்களில் ஒருவர் போலும்.

சத்தம் கேட்டு – ஒரு மௌன இடைவெளியின் பின் இருவர் வந்து என் முன் நின்றனர். தலையை ஆட்டி கண்களில் குரோதமும் உதட்டில் புன்னகையுமாய் அறிமுகமாக்கிக் கொண்டனர். அதே பாசையில் நானும் அறிமுகத்தை ஏற்றுக் கொண்டேன். பலத்த காற்று அடித்துக் கொண்டிருந்தது. தென்னை தலைவிரித்து ஆடுகின்ற சத்தம் பேயோசையாய்க் கேட்டது. இந்நேரம் எரிந்த சூடுகளின் சாம்பல் திசை கெட்டு பரவிப் பரந்து கொண்டிருக்கும் பிரதேசம் எங்கும்.

"மன்னார் பள்ளிவாசல் ஞாபகம் இருக்குத் தானே..... இவர்தான்!"

சுந்தர அம்மான் ஒருவரை காட்டி பெருமைப்பட்டுக் கொண்டார்.

அந்த ஒருவர்

"நீங்கள்தானாமே அம்பிளாந்துறை சந்தியில வச்சி மக்காவுக்குப் போன மௌலவிமாரை..."

என்றார். நான் தலைகுனிந்து கொண்டேன். வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லை அதைத்தவிர.

"யாழ்ப்பாணத்தில் இருந்து சோனகச் சனத்த துரத்தின நாளான வார வெள்ளிக்கிழமை இஷாத் தொழுகை முடிய கண்டனம் கலந்த அனுதாபக் கூட்டம் நடத்தப் போறாங்களாம். உங்களுக்கு காத்தான்குடியில இருக்கிற மூலை முடுக்கெல்லாம் நல்லாத் தெரியுமாமே?"

அந்த ஒருவர் பேசிக் கொண்டே இருக்க தலை சுற்றுவது போன்றும் இதயம் எகிறிக் குதிப்பது போலும் இருந்தது. நெடுநேரம் மௌனித்திருந்தேன். என் மௌனம் அவர்களை எதுவேனும் செய்திருக்க வேண்டும்.

"ஏன் ஒண்டும் சொல்லாமல் இருக்கிறீர்?"

"முஸ்லிம் சனத்தோட இனியும் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்க எனக்கு விருப்பம் இல்ல. அதுகள் நமக்கு என்ன செய்யுதுகள்?"

அவர் என்னை ஒரு மாதிரியாய்ப் பார்த்தார். என்மேல் வெறுப்பாரோ என்னவோ.

"நீர் விஷயம் எதுவும் தெரியாத ஆளா? அவங்களாலதானே யாழ்ப்பாணத்துக்குள்ள...

தமிழன காட்டிக் குடுக்கிறவன் பாடம் படிக்க வேணும்"

சற்று கோபமாகத்தான் இருந்தார்.

"ஏன், சோனகன் மட்டும்தான் காட்டிக் கொடுத்தானா? யாழ்ப்பாணத்தான் காட்டிக் குடுக்கல்லயா?"

நான் கூட கோபமானேன்.

விழி விரித்தார்... புருவம் உயர்த்தினார்.

"யாழ்ப்பாணத்தான் காட்டிக் குடுக்கிறானா? ஆதாரம் இல்லாமல் கதைக்காதேயும்"

அவர் கேட்க வேறுதிசையில் நான் முகத்தை திருப்பிக் கொண்டேன். அவருக்கு புரையேறியது. கணநேரம் ஆடிப்போய் நிதானமானார்.

"அதுதான் அவங்களயெல்லாம் தட்டியாச்சே"

சமாதானம் ஆனார். ஆனாலும், வியர்த்திருந்தார். சுந்தரத்தாருக்கு என்ன பேசுவது என்றோ எது செய்வது என்றோ எதுவும் தோன்றாது திணறிக் கொண்டிருந்தார். நான் நிதானமாய் சுவாசித்துக் கொண்டிருந்தேன். காலம் நல்லதாய்ப் போயிற்று த.செல்வாவிற்கு. நாங்கள் பிறந்த உடனே அவர் செத்துப்போனார். யார் கண்டது இன்றவர் இருந்திருப்பின் அவர் கூட துரோகியாக இருப்பார்....

"அதுமாதிரி காட்டி குடுக்கிற முஸ்லிம் சனத்த புடிச்சி வச்சி மண்டையில போட வேண்டியது தானே. அத விட்டுப் போட்டு ஊரைவிட்டுத் துரத்தினதும், பள்ளிவாசலுக்குள் பூந்து வெட்டிக் கொல்லுறதும் என்ன வேலை? தமிழனுக்கு ஒரு நியாயம் சோனகருக்கு ஒரு நியாயமா? அல்பிரட் துரையப்பா காட்டிக் கொடுத்தான் எண்டு தானே கொண்டம். எல்லாக் கத்தோலிக்கரையும் ஏன் அப்பவே யாழ்ப்பாணத்த விட்டுத் துரத்தயில்ல? எனக்கு உங்களோடை இந்த யாழ்ப்பாண இசம் என்னண்டு விளங்கயில்லை. எவ்வளவோ அநியாயம் நடந்தும் ஒரு சோனகரும் நாட்ட விட்டு ஓடயில்ல. ஏன் சிங்கள ஊருக்க கூட போகயில்ல. சுத்தி சுத்தி இந்த தமிழ் மண்ணுக்கதான் திரியுதுகள். ஆனா யாழ்ப்பாண ஆக்கள் அப்படியா? அந்தக் காலத்திலேயே எரிச்சுப் போட்டான்கள் என்று சொல்லி சொல்லி யாழ்ப்பாணத்த விட்டு ஓடிப்போய் எத்தனை போ யூரோப்பில பணக்காரர் ஆயிட்டாங்கள். இவ்வளவு பிரச்சினை நடந்தும் இன்னும் ஒரு சோனகனும் நாட்ட விட்டு ஓடயில்ல. நம்மளவிட சோனகச்சனத்துக்குத் தான் தமிழ் மண்ணுல பற்று மாதிரி தெரியிது"

சொல்லி முடிக்கும் போது உடல் எங்கும் எனக்குக் கூட வியர்த்திருந்தது. அவர்கள் நான் சொல்வதை மிக நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நெடு விநாடி மௌனத்தின் பின் கொடுப்புக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

"நீர் வெளிநாட்டில இருக்கிற சனத்த குற்றம் சொல்லாதேயும். அவங்கள் தாற காசில தான் இண்டைக்கு சண்டையே நடக்கிறது..." என்றார்.

பெருவிடயம் ஒன்றை எனக்கு புரியவைத்து விட்டோம் என பெருமிதப்பட்டுக் கொள்கின்றார் என்பது அவர்களில் தெரிந்தது.

எனக்கு பலமாய் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. இருந்தாலும் புன்னகைத்துக் கொண்டேன்.

"வெளிநாட்டில இருக்கிறவன் காசு தரத்தானே வேணும், சண்டை நடத்துறதுக்கு. இலங்கையில சண்டை நடந்தால்தானே வெளிநாட்டில அவங்கள் பிழைப்பு நடத்த முடியும். இங்க சமாதானம் வந்திட்டால் அவயலோட சொகுசு வாழ்க்கை அங்க நாறிடுமே. ஒட்டுமொத்தமாக எல்லாரையும் கப்பல் ஏத்தி விட்டுருவாங்கள் வெள்ளைக்காரனுகள். இலங்கையில சண்டை முடிய வெளிநாட்டுத் தமிழன் விரும்ப மாட்டான். சண்டை நடத்த கட்டாயம் காசு தருவான்கள்தான்."

என்பேச்சு அவங்களை கோபப்படுத்தி விட்டதுபோலும். இதுவரையும் எதுவும் பேசாமல் நின்றிருந்த மற்ற ஒருவர் என்னை விரோதியாவும் விநோதமாயும் பார்த்தார்.

"நீர் என்ன எடுத்ததுக்கெல்லாம் விதண்டாவாதம் பேசிக் கொண்டு. நீர் சத்தியபிரமாணம் எடுத்தது ஞாபகம் இருக்கோ..."

அந்த ஆள் சொல்ல... மண்டை விறைத்தது. மூளை பழையபடி கழுவப்பட்டு நிர்மலமாயிற்று. சத்தியப்பிரமாணம் ஞாபகம் இருக்கிறது. ஞாபகம் இருக்கிறது இருக்கிறது.

என் ஈ....
தேசத்துக்காகவும்....
.... தேசிய
....உயிரையும்....
....விடுதலை வேள்வியில்...
.....என்னை நானே....
....உயிராயுதம்....
....தாகம்...தாயகம்!

விட்டுவிட்டு மண்டைக்குள் ஓங்காரம் ஒலித்தது. பிற சிந்தனைகள் எதுவும் என் மூளைக்குள் புகக்கூடாது. நான் என் தேசத்துக்காகவும் அதன் விடுதலைக்காகவும் படைக்கப்பட்டேன். என் உடல், உயிர் சகலமும் சகலமும் என் தேசத்துக்கே தேசத்துக்கே...

மூளை வியூகம் வகுக்கத் தொடங்கியது...

நன்றி : எக்ஸில் 2000

வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம்

தொடர் 2

எம்.ஐ.எம். முகைதீன்
தமிழில் எம்.எஸ்.ஜாபீர்

	வட மாகாணம்			கிழக்கு மாகாணம்				
உள்நாட்டுள் இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள்	யாழ்ப்பாணம் 4,000 18.51%	வன்னி 14,954 69.19%	தொகை 18,954 87.70%	அம்பாரை 110 0.51%	மட்டக்களப்பு 343 1.59%	திருகோணமலை 2,207 10.20%	தொகை 2,660 12.30%	மொத்தம் 21,614 100%
உள்நாட்டுள் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள்	20,000	69,367	89,367	500	2,000	1,100	13,500	10,2867

தேவைப்படும் தொகை மில்லியன் ரூபாவில 11817 (125 மி. US $)

	யாழ்	வன்னி	தொகை	அம்பா.	மட்ட	திருகோ	தொகை	மொத்தம்
கண்ணி வெடி அகழ்வு	4.50	11.71	16.21	0.12	0.39	2.49	3.0	19.21
வீதிகள்	52.20	135.76	187.98	1.43	4.48	28.82	34.72	222.7
வீடமைப்பு	2119.91	5513.2	7634.1	57.88	187.78	1170.3	1410.0	9044.0
பள்ளிவாயல்கள்	41.86	108.87	150.76	1.14	3.59	23.11	27.84	178.62
பாடசாலைகள்	41.86	108.87	150.76	1.14	3.59	23.11	27.84	178.62
வைத்தியசாலைகள்	20.93	54.44	75.39	0.57	1.80	11.56	13.92	89.31
மின்சாரம்	41.36	108.87	150.76	1.14	3.59	23.11	27.84	178.62
பொதுவசதி	20.93	54.44	75.39	0.57	1.80	11.56	13.92	89.31
காணித்திருத்தம்	8.48	22.06	30.54	0.23	0.73	4.68	5.64	36.18
நீர்பாசனம்	8.48	22.06	30.54	0.23	0.73	4.68	5.64	36.18
மீன்பிடி	1.73	4.51	6.24	0.05	0.15	0.96	1.15	107.40
மந்தைப்பண்ணை	8.48	22.06	30.54	0.23	0.73	4.68	5.64	36.18
நஷ்டஈடு	235.56	664.51	920.07	6.98	21.91	141.05	169.94	1090
ஆலோசனை	111.34	289.56	400.90	3.04	9.55	61.47	74.05	475.00
கணக்களய்வு	22.27	57.91	80.19	0.61	1.91	12.29	14.18	95.00
மொத்த ரூபா	2784	7241.2	1002.5	76.01	238.73	1336.9	1857.5	11877
மொத்தம் US	(29.30)	(76.21)	(105.51)	(0.80)	(2.51)	(16.18)	(19.49)	(125.0)

25.11.2002 இல் ஒஸ்லோவில் நடைபெற்ற நன்கொடை வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கை அரசாங்கத்தினால் உடனடி மனிதாபிமான புனருத்தாரன தேவைக்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் முஸ்லிம்களின் இழப்பு பற்றியோ, முஸ்லிம் பகுதிகளில் புனருத்தாரன புனர்நிர்மான பணிகளுக்கு வேண்டிய நிதி பற்றியோ ஏதும் குறிப்பிடவில்லை. இம்முன்மொழிவுகள் வடக்கு கிழக்கு போராட்டத்தில் தமிழர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தியது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் சட்டபூர்வமற்ற முறையில் வைத்திருக்கும் முஸ்லிம் மக்களின் காணி பற்றிய பதிவேடும் உடனடியாக செய்யப்பட வேண்டிய வேலை பற்றிய திட்டத்தையும், மதிப்பீட்டையும் தயாரிக்கவென அரசாங்க சமாதான செயலகத்தில் பிரதமமந்திரி அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட முஸ்லிம் அலகும் இதுவரையும் செயலாக்கம் பெறவில்லை. வடக்கு கிழக்கில் முஸ்லிம் பிரதேசத்தில் உள்ள புனர்நிர்மானப் பணிகளுக்கு முறையான திட்டம் இல்லையெனில் உலக வங்கி எதுவித நிதியையும் ஒதுக்க மாட்டாது.

LTTE யின் அரசியற் தலைவர் எஸ்.பி. தமிழ் செல்வன் Sihrn கூட்டமைப்பு பற்றி அண்மைக் காலத்தில் வெளியிட்ட கூற்றொன்றில், அது மாவட்ட மட்டத்தில் தொழிற்படுமென்றும் அபிவிருத்தி, நிதி ஒதுக்கீடு போன்ற இன்னோரன்னவைகள் பற்றி தீர்மானிக்கும் எனவும் குறிப்பிட்டிருந்தார். அவரது கருத்துப் பிரகாரம் அக்குழுவின் கூட்டமைவு 2 LTTE அங்கத்தவர்களையும் 2 அரசாங்க அங்கத்தவர்களையும் மாவட்ட செயலாளரையும் கொண்டிருக்கும். முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறித்து எதுவிதப் பேச்சும கிடையாது. மத்திய அமைச்சினதும், வடக்கு கிழக்கு மாகாண புனருத்தாரண அதிகார சபையினதும் தற்போதைய தொழிற்பாடுகள் அனைத்தையும் Sihrn யின் அதிகாரம் உதாசீனம் செய்துவிடும்.

போரினால் நிர்மூலமாக்கப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களை புனர் நிர்மாணிக்க வேண்டிய தேவையும், முஸ்லிம் அகதிகளை புனருத்தாரணம் செய்ய வேண்டிய தேவையும் தமிழ்ப் பிரதேசங்களோடு ஒப்பீட்டளவில் இரண்டாம் பட்சமானதல்ல என்ற காரணத்தினால் இவ்வகையான குழுக்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவமும் சமஅளவில் இடம் பெறவேண்டும்.

முஸ்லிம்கள் சமமான பிரதிநிதித்துவம் பெறாத வரையில் வடக்கு கிழக்கிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட 102867 முஸ்லிம்களை மீள்குடியேற்றம் செய்யவோ விவசாய நிலங்களுக்கு உரிமை கோரவோ, வதிவிட வியாபார இடங்கள் மீது நமது சொத்துரிமையை ஸ்தாபிக்கவோ முடியாது போய் விடும். தமிழர்களின் தலையீடுமின்றி முஸ்லிம்கள் பெருவாரியய் உள்ள நிலப்பரப்பில் நமது கருமங்களை நாமே கவனித்துக் கொள்ள வேண்டிய உரிமையை ஸ்தாபிப்பதற்கு முஸ்லிம்களுக்குள்ள ஒரு சந்தர்ப்பம் இதுவேயாகும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் ஏனைய சர்வதேச சமூகங்களுக்கும் வடக்கு கிழக்கில் பெருவாரியாய் முஸ்லிம்கள் உள்ள நிலத் தொடர்பற்ற பிரதேசங்களை முஸ்லிம்கள் சுதந்திரமாக நிர்வகிக்கலாம் என்ற சாத்தியத்தினை எடுத்துக் கூற இது முஸ்லிம்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கும் என்பதோடு உள்ளக சுயாட்சிக்கான நமது உரிமையையும் ஸ்தாபகம் செய்யும்.

விடுதலைப் புலிகளாலும், இலங்கை அரசாங்கத்தினாலும் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுத்து கொண்டு செல்லப்படும் விதம் குறித்து தாங்கள் திருப்திப்படவில்லையென பொதுஜன ஐக்கிய முன்னணி செயலாளரும், முன்னாள் விவசாய அமைச்சர் டீ.எம். ஜயரத்தின கூறியுள்ளார். ஜனாதிபதி எத்தருணத்திலும் பாராளுமன்றத்தை கலைத்துவிடலாம்.

LTTE யின் பிரதம பேச்சாளர் Dr. அன்ரன் பாலசிங்கம் அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் பேட்டியொன்றில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா அவர்களின் தலைமையின் கீழ் பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரத்திற்கு வருமானால் LTTE மீண்டும் போராடப் போகும் எனக் குறிப்பிட்டார். அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் இறுதி முடிவாகும் வரை LTTE ஆயுதங்களைக் கையளியாது எனவும் கூறினார்.

பிரித்தானியாவின் ஐந்து மாவட்டங்களில் பிரசுரமாகும் ஈழநாடு பத்திரிகையின் ஜனவரி 20ஆம் திகதிய பிரதி LTTE படை அணித்தலைவர்கள் உரையாற்றிய மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டமொன்றின் விபரங்களைத் தாங்கி வந்தது. அவர்கள் ஆற்றிய உரையின் அடித்தொனி நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்றவாறே அமைந்திருந்தது. தமிழர்கள் ஏற்றுக் கொள்ளும் ஒரு தீர்வை அடைய சிங்கள மக்களுக்கு ஆர்வமில்லை என்பதனை உலகத்திற்கு எடுத்துக் காட்டவே இப்பேச்சுவார்த்தை நடைபெறுகிறது எனக் கூறிக் கொண்டார்கள். முரண்பாட்டை தீர்த்துக் கொள்ளும் எந்த ஒரு மாற்று அரசியல் வரை சட்டத்திற்கும் அவர்கள் இணங்கமாட்டார்கள் என்பதனையும், தேவைப்படும் 2/3 பெரும்பான்மையை எந்தவொரு சிங்களக் கட்சியும் பெறாது என்பதனையும், யாப்பினைத் திருத்த மக்கள் தீர்ப்பில் அனுமதி கிடைக்காது என்பதையும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தெளிவாக்குகின்றன.

1990 இல் முஸ்லிம் இனச் சுத்திகரிப்பை தலைமையேற்று நடாத்திய இளம்பாரதி அரசியல் தலைவராகி மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ளார். யாழ்ப்பாணத்திற்கு திரும்பியுள்ள சில முஸ்லிம் மக்களின் அக்கறை அவர்களுடைய பாதுகாப்பையும், அபிவிருத்தி சம்பந்தமான கவனக் குறைவு பற்றியதாகவே உள்ளது.1990இல் யாழ்ப்பாணத்தில் 18000 முஸ்லிம் மக்கள் 3537 வீடுகளிலும் 194 அரச வதிவிடங்களிலும் வாழ்ந்து கொண்டு நான்கு கனிஷ்டபாடசாலைகளுக்கும் இரண்டு இடைநிலைப் பாடசாலைகளுக்கும் தங்கள் சிறார்களை அனுப்பியதோடு, பதினாறு பள்ளிவாசல்களில் தொழுகை நடாத்தினார்கள். அவைகள் எல்லாமே இன்று LTTE யினரால் மாற்றப் பட்டு இன்றைய நிலைமை முற்று முழுதாய் வித்தியாசமானதாகவே உள்ளது. திரும்பி வந்த முஸ்லிம்கள் அங்காடிகளாகவும், தையல் வேலை செய்பவர்களாகவும் இறைச்சிக்கடைக் காரர்களாகவும் துண்டி ரும்பு வியாபாரிகளாகவும் காணப்படுகின்றனர். ஆனால் இன்று LTTE நடுத்தர வருப்பார் வியாபாரத்தை தம் ஆளுகைக்குள் கொண்டு வந்ததோடு, யாழ்ப்பாணத்தில் உயிர் வாழ்வதென்பது பெரும் கஷ்டமுறு செயலாகவே உள்ளது. அரசாங்க அதிபரினால் அதிகாரமளிக்கப்பட்ட தமிழ் மக்களால் தமது வீடுகள் இடங் கொள்ளப்பட்டிருப்பதை திரும்பி வரும் முஸ்லிம்கள் காணுகின்றனர்.

இன்றைய நிலைமையில் வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது. ஆனால், ரவூஃப் ஹக்கீம் அவர்களோ பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தனக்கும் LTTE தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குமிடையே கைச்சாத்தாகியுள்ள கூட்டறிக்கை தரும் உறுதியில் நம்பிக்கை வைத்து மீளச் செல்ல வேண்டுமெனக் கூறியுள்ளார். ஆனால், வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு, உரிமைகள் சம்பந்தமாய் இலங்கை அரசு மௌன நிலையையே கடைப்பிடித்து வருகிறது.

வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் இளைஞர்கள் தங்களுடைய பாதுகாப்பிலும் இன உரிமையிலும் அக்கறை கொண்டுள்ளதால் தங்களையும் தங்கள் சமூக நலன்களையும் பாதுகாக்க ஆயுதபாணிகளாக வேண்டுமென்றும் பேசிக் கொள்கின்றார்கள்.

தாக்கரேயின் ஆசிபெற்ற மணிரத்தினத்தின் பம்பாய்

"மணிரத்தினத்தின் 'பம்பாய்' மிகச் சிறந்த படம். நான் படத்தைப் பார்த்தேன். சில மாற்றங்கள் மட்டும் செய்யச் சொன்னேன். அவ்வளவுதான். பம்பாய் கலவரத்துக்காக நான் வருந்துவது போல ஒரு காட்சி வருகிறது. அது உண்மையல்ல. நான் எதற்காகவும் வருந்தவில்லை. கலவரத்தை சிவசேனை ஆரம்பிக்கவில்லை. நாங்கள் பதிலடிதான் கொடுத்தோம்... (மற்றப்படி) இது மணிரத்தினம் உருவாக்கியுள்ள அற்புதமான படம். படத்தை நான் வெகுவாக ரசித்தேன்"

டைம்ஸ் ஆஃப் இந்தியா (1995 மார்ச் 31) பத்திரிகைக்கு தாக்கரே வழங்கியுள்ள பேட்டி இது.

இந்த மசாலாவை காலத்தால் அழிக்க முடியாத காவியம் என்று வர்ணிக்கின்றன பார்ப்பன பத்திரிகைகள. "மணிரத்தினம் எனும் மாபெரும் கலைஞன்" நினைத் திருந்தால் நன்றாகச் செய்திருக்கலாம் என்று தடவிக் கொடுத்திருக்கிறார்கள் சில படைப்பாளிகள். கூஜாக்கள் உருவாக்கியிருக்கும் அலையை நீந்திக் கடந்தால்தான் பம்பாயின் உண்மை முகத்தைக் காண முடியும்.

காதல் என்னும் சல்லாத்துணி
கலவரம் எனும் இடையூறு!

பம்பாய் கலவரத்தைச் சித்தரிக்க ஒரு கற்பனைத் திரைக்கதைக்கே அவசியமில்லை. எல்லா கற்பனைகளையும் விஞ்சும் குரூரங்கள் பல அங்கு உண்மையில் நடந்திருக்கின்றன.

மணிரத்தினமோ பம்பாயிலிருந்து திருநெல்வேலிக்கு வந்து ஒரு இந்து முஸ்லிம் காதல் கதையை உருவாக்குகிறார். பெற்றோர்களின் இடையூறையும் சமூகத்தின் இடையூறையும் கடந்து பம்பாய் வந்து சேரும் காதலர்களை நிம்மதியாக வாழவொட்டாமல் தோன்றுகிறது இன்னொரு இடையூறு - கலவரம். பம்பாய் கலவரத்திற்கு மணிரத்தினம் வழங்கியிருக்கும் அந்தஸ்து இது தான்.

'why me? என்பதுதான் படம் எழுப்பும் கேள்வி" என்று ஒரு பேட்டியில் கூறியுள்ளார் மணிரத்தினம். "எவனோ அடித்துக் கொள்ள நாங்கள் ஏன் சாகவேண்டும்?" என்பதே இதன் பொருள். சமூக விரோதத் தன்மை கொண்ட, அருவெறுக்கத்தக்க காரியவாதிகளான நடுத்தரவர்க்கத்தின் குரல் இது. பேரூந்து தடைப்பட்டு நிற்பதற்குக் காரணம் ஜெயலலிதாவின் பவனியானாலும் தொழிலாளர் ஊர்வலமானாலும் அவற்றை சமமான வெறுப்புடன் நோக்கும் நடுத்தர வர்க்கத்தின் பார்வை இது.

வேறு வடிவங்களில் எளிதில் அம்பலப்பட்டுப் போகக் கூடிய இந்த சுயமைத்தனம், காதல் என்ற சல்லாத்துணியைப் போர்த்தியவுடன் கௌரவம் பெறுகிறது. அமர வகைப்பட்டதாக இருந்தாலும் காதல் என்பது அதன் தன்மையிலேயே சமூகத்திலிருந்து விலகியதுதான். ஒதுங்கும் போக்கைத் தன் தத்துவமாகக் கொண்டிருக்கும் நடுத்தரவர்க்கம், காதல் வயப்படும் போது கள் குடித்த குரங்காகி விடுகிறது.

கதாநாயகன் முஸ்லிமாக
இருந்திருந்தால்....

"ஒரு முஸ்லிம் பெண்ணை இந்துப் பையன் காதலிப்பதா என்று சில முஸ்லிம் தலைவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். இது சிறுபிள்ளைத்தனமானது" என்று ரொம்பப் பெருந்தன்மையாகப் பேசியிருக்கிறார் தாக்கரே. கதாநாயகன் முஸ்லிமாகவும் கதாநாயகி இந்துவாகவும் இருந்திருந்தால்? தாக்கரேயின் பெருந்தன்மையை அப்போதல்லவா பார்க்க வேண்டும்.

ஆட்சியதிகாரத்திலிருந்த முகலாய மன்னர்கள் இராஜபுத்திரப் பெண்களை மணந்து கொண்டதை 'இந்து பெருமிதத்துக்கு' நேர்ந்த இழுக்காகக் கருதுகிறார்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். தற்போது அரசியல் சமூக அரங்குகளில் இந்து மதவெறியர்களால் நசுக்கப்படும் முஸ்லிம்கள் இவ்வாறு கருதுவதில் வியப்பில்லை.

பெண்கள் மீதான தந்தை வழி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற அதே நேரத்தில், மதம் மீறிய திருமணங்களை ஆதரிக்கின்ற அதே நேரத்தில் பம்பாயின் கதாநாயகன் இந்துவாக இருப்பது, இந்து ஆதிக்கத்தின் வெளிப்பாடே என்பதையும், படத்தின் இந்து மதவெறிச் சார்புடன் இது இணைந்து போவதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். கதாநாயகனை ஒரு முஸ்லிமாக வைத்துக் கற்பனை செய்து பாருங்கள். கலவரத்தின் முதல் காட்சியிலேயே அவன் கொல்லப்பட்டிருப்பான். இடைவேளையுடன் படமே முடிந்திருக்கும். (உருது பத்திரிகையாசிரியர்களும் முஸ்லிம் பத்திரிகையாளர்களும் கலவரத்தில் சந்தித்த நிலைமை இதுதான்)

ஏன் என்ற கேள்விக்கு
என்ன விடை?

"அயோத்தியில் கோயில் கட்ட காசு கொடு" என்று வீட்டுக்கு வந்து கேட்கிறார்கள் இந்துமத வெறியர்கள். அதிர்ந்து பின்வாங்குகிறாள் கதாநாயகி. கதாநாயகன் உடனே அவர்களை வெளியே தள்ளிக் கொண்டு போகிறான். தள்ளிக் கொண்டு போய் மனைவி கண்ணில் படாமல் காசு கொடுத்தாரா? மசூதியை இடிப்பது அநீதி என்று வாதாடினாரா? தெரியாது. உடனே வேறு காட்சிக்கு மாறுகிறார் மணிரத்தினம்.

நடுவீதியில் நின்று ஊருக்கு உபதேசம் செய்யும் கதாநாயகனை, அந்தக் காட்சியில் மணிரத்தினம் ஊமையாக்கியது ஏன்? மசூதியை இடிப்பது குற்றம் என்ற ஒரு வார்த்தையைக் கூட வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் வேறு எதைப் பிடுங்குவதற்கு இந்தப் படம்?

தன் பெற்றோரை இழிவு படுத்தும் மாமனாரின் கடிதத்தைக் கண்டு சீறும் கதாநாயகி, தன் மதத்தினர் புழு பூச்சிகளைப் போலக் கொல்லப்படுவது ஏன் என்று ஒரு கேள்வியை மட்டும் கணவனிடம் கேட்கவில்லை.

வீடு எரிகிறது; பெற்றோர்கள் எரிகிறார்கள்; பிள்ளைகள் காணாமல் போகிறார்கள்; ஊரே எரிகிறது. ஆனால், அந்த உத்தம பத்தினியோ (கதாநாயகி) "ஏன் இந்தக் கலவரம்?" என்ற ஒரு கேள்வியை மட்டும் தன் காதல் கணவனிடம் கேட்கவேயில்லை. ஒரு வேளை அவ்வாறு கேட்பது இந்தக் கலைக் காவியத்தின் யதார்த்தச் சித்தரிப்பைக் குலைத்து பிரச்சார நெடியேற்றியிருக்குமோ?

அமைதியான ரதயாத்திரை
கலவரம் செய்யும் முஸ்லிம்கள்!

நூற்றுக்கணக்காக முஸ்லிம் உயிர்களைக் காவு கொண்ட ரதயாத்திரை திரையில் அமைதியாகப் போகிறது. அப்போது தெருவில் நிற்கும் கதாநாயகியின் முகத்தில் 'அநாவசியமாக' கலவரம் படர்ந்தாலும், ஊர்வலத்தில் போகின்ற 'எழுச்சி பெற்ற ஆர்.எஸ்.எஸ்காரர்கள்' அவளை லேசாக சீண்டிக் கூடப் பார்க்காமல் ஆர்.எஸ்.எஸ்ஸூக்கே உரிய 'கட்டுப்பாட்டுடன்' செல்கின்றனர் எனில், அத்வா னியின் டோயோட்டோ ரதச் சக்கரங்களில் நசுங்கியவை முஸ்லிம் தலைகளா. எலுமிச்சங்காய்களா?

"பாபர் மசூதி இடிப்பு" என்ற மிருகத்தனமான கொலைவெறியாட்டமோ உணர்ச்சியற்ற தலைப்புச் செய்திகளாக ஓடுகிறது. "யா அல்லாஹ்" என்ற பெருங் கூச்சலுடன் திரை உயிர்பெறுகிறது. வெறி கொண்ட முஸ்லிம்கள் கடைகளைத் தாக்குகின்றனர்; பொலிசைத் தாக்குகின்றனர்; கலவரக்காட்சி முதன் முதலாக திரையில் துவங்கும் போது இப்படித்தான் துவங்குகின்றது.

பம்பாய் உள்ளிட்டு நாடு முழுவதும் நடந்த முஸ்லிம் எதிர்ப்புக் கலவரங்களின் மூலகாரணமான பாபர் மசூதி விவகாரத்தை, 'குழந்தையாயிருந்த கதாநாயகன் வாலிபனாகிவிட்டான் என்று சக்கரத்தைச் சுழற்றிவிட்டுக் காட்டுவது போல் ஓடவிடுவதன் மூலம் டிசம்பர் 6க்கு முன்னால் இந்து மதவெறியர்கள் திட்டமிட்டு நடத்திய காலித்தனங்களையெல்லாம் தனது கத்தரிக்கோலால் எடிட் செய்து விடுகிறார் மணிரத்தினம்.

காட்சிகளைத் தொகுத்துத் தருகின்ற முறையில் கலவரத்தைத் துவங்கிய குற்றம் முஸ்லிம்களின் மீது சுமத்தப்படுகிறது. கலவரத்தைச் சித்தரிப்பதில் கூட, திரும்பத் திரும்ப வருகின்ற 'கும்பல்கள் மோதும்' காட்சிகளில் தான் இந்து மதவெறியர்களின் தாக்குதல் காட்டப்படுகிறது.

ஆனால், மனதில் பதியத்தக்க குறிப்பான வன்முறை நடவடிக்கைகளிலும், நெருக்கமான குளோசப் காட்சிகளிலும் முஸ்லிம்கள் நடத்தும் தாக்குதல் காட்டப்படுகிறது. மனதில் பதியக் கூடிய கலவரம் பற்றிய காட்சிப் படிமங்களை ஒப்பீடு செய்து பார்த்தால் அவற்றில் 80 சதவீதம் முஸ்லிம்களையே குற்றவாளிகளாக்குகின்றன.

முஸ்லிம் கொள்ளி வைக்கிறான்
எரிகிறது இந்துவின் வீடு

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பெராம் பாடா என்ற குடிசைப்பகுதியைச் சுற்றியுள்ள அடுக்குமாடிக் கட்டிடங்களின் மேலிருந்து தீப்பந்தங்களையும் பெட்ரோல் குண்டுகளையும் எறிந்து அந்தச் சேரியையே சாம்பலாக்கினர் சிவசேனா குண்டர்கள்.

மசூதிக்குள் நுழைந்து மௌலவியைக் கொன்றனர், முஸ்லிம் ராணுவச் 'சிப்பாய் ஒருவரின் வீட்டுக்கூரையைப் பிரித்து கொள்ளையடித்து தீவைத்தனர். உயிருடன் எரிக்கப்பட்ட 17 முஸ்லிம்களின் படத்தை தனது பத்திரிகையில் வெளியிட்டு மகிழ்ந்தார் தாக்கரே.

ஆனால், மணிரத்தினமோ ஜோகேஸ்வரி என்ற பகுதியில் ஒரு இந்துவின் வீடு கொளுத்தப்பட்ட விதிவிலக்கான சம்பவத்தைத் தேடிப்பிடிக்கிறார். இந்து வீடென்று தெரியாமல் போய்விடுமோ என்பதற்காக கதவில் "ஸ்வஸ் திக்"சின்னம் வரையப்பட்டிருக்கிறது. காமெரா அதை நெருக்கமாகக் காண்பிக்கிறது. பிறகு முஸ்லிம்கள் அதை வெளிப்புறமாகத் தாளிடுவதையும் வீட்டுக்குத் தீ வைப்பதையும் நிதானமாகப் படம் பிடிக்கிறது. இச்செய லின் குரூரத்தை உணர்த்த இதுவும் போதாது என்று கருதும் மணிரத்தினம். தீப்பிடித்த வீட்டிற்குள் அகப்பட்டுக் கொண்ட ஒரு ஊனமுற்ற சிறுமியின் தவிப்பையும் காட்டி 'இந்து' ரசிகர்களின் கோபத்தை விசிறிவிடுகிறார்.

கதாநாயகனின் குழந்தைகளை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்த முயலும் கும்பல் "சொல் நீ இந்துவா முஸ்லிமா" என்று திரும்பத் திரும்பக் கேட்கிறது. ஆனால், 'நான் இந்து' என்று சொன்னவுடன் யாரையும் விட்டுவிடவில்லை சிவசேனா குண்டர்கள். உள்ளாடையைக் களைந்து சுன்னத் செய்திருக்கிறானா என்று பார்த்துப் கொன்றார்கள். அநாதை இல்லத்தில் இருக் கும் குழந்தைகளையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை.

ஆனால், மணிரத்தினம் அந்தக் கொலைகாரர்களின் மத அடையாளம் தெரியாமல் பார்த்துக் கொள்கிறார்.

யா அல்லா...
கோயபல்ஸ் தோற்றான்!

கோயபல்ஸ் வேலையின் சிகரமாக வருகிறது கடைசிக் காட்சி. இந்து வெறியர்களை இந்துக்களும், முஸ்லிம் வெறியர்களை முஸ்லிம்களுமே எதிர்த்துவிரட்டுகிறார்கள். இந்து மதவெறித் தலைவரின் (தாக்கரே) கார் வருகிறது. பிணக்காடாகக் காட்சியளிக்கும் தெருவைப் பார்த்து மேல்துண்டால் மூக்கைப் பொத்துகிறார். லேசானதுயரம் அவர் முகத்தில் தோன்றி மறைகிறது.

அடுத்து அழுகுரல் ஒலிக்கும் ஒரு தெருவிற்குள் முஸ்லிம் மதவெறித் தலைவர் இறங்கி நடக்கிறார். காயம் பட்டுக் கிடக்கும் ஒரு பிஞ்சுக் குழந்தையைப் பார்த்தவுடன் 'யா அல்லா' என்று கதறுகிறார். உடனே 'போதும் போதும்' (பஸ் பஸ்) என்று தன் கையை உயர்த்துகிறார்.

முதல் காட்சியில் 'யா அல்லா...' என்ற கோபக்குரலுடன் முஸ்லிம்கள் கலவரத்தைத் துவக்குகிறார்கள். இறுதிக் காட்சியில் 'யா அல்லா' என்ற வருத்தம் தோய்ந்த குரலுடன் கலவரத்தை நிறுத்திக் கொள்ளுமாறு தன் ஆட்களுக்கு ஆணையிடுகிறார் முஸ்லிம் மதவெறித் தலைவர்.

கலவரத்துக்குக் காரணமானவர்களே தவறை உணர்ந்து கலவரத்தை முடித்துக் கொள்கிறார்களாம். இது தான் மணிரத்தினம் காட்டும் பம்பாய்.

ரகுமானின் இசை
ஜாடிக்கேற்ற மூடி

படத்தில் இசையமைப்பைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 'திகிலூட்டும் இசை' என்று விகடனும், 'கிளர்ச்சியூட்டும் இசை' என்று 'இந்து'வும் ரகுமானின் இசையைப் புகழ்ந்துள்ளன. இரண்டுமே உண்மை.

கொடூரத்தைத் திகிலாகவும், இன்பத்தைக் கிளர்ச்சியாகவும் மாற்றுகின்ற அமெரிக்க மரபை அப்படியே பின்பற்றியிருக்கிறார் ரகுமான். ஆனால், கதாநாயகி பிரசவ வேதனையில் துடிக்கும் போது பின்னணியில் ஒலிக்கும் 'திகிலூட்டும் இசை'க்குத்தான் பொருள் புரியவில்லை. பிறக்கப் போவது பிசாசோ, சைத்தானோ என்ற அச்சத்தை உருவாக்குகிறது. காதல் காட்சிகளில் அதே கூண்டுவண்டி, அதே கும்பல் நடனம், அதே இசை.

காதலின் இனிமையில் குறுக்கிட்டு மிதிக்கும் திம்திம் என்ற வலிமையான தாளமும் 'ஹோ' என்ற ஆண்குரலின் ஓலமும் கலவரத்தைச் சுட்டுவதற்கோ? மதவெறியைச் சித்தரிக்க ஓவியர் மதன் வரைகின்ற மத அடையாளம் இல்லாத சிம்பன்சி குரங்கைத்தான் ரகுமானின் 'கலவர இசை' நினைவுபடுத்துகிறது. முஸ்லிம் மக்களின் ஈரல் குலையை அறுப்பது போன்ற குரூரத்துடன் நாடெங்கும் ஒலித்த 'ஜெய் சியாராம்' என்ற கோஷமும் கொலைக்கருவிகளாக மாறிய பஜனை வார்த்தியக் கருவிகளும அல்லவா இந்த மதவெறிப் பயங்கரத்தின் இசைக் குறியீடுகள்.

● முஸ்லிம் எதிர்ப்புக் கலவரம் என்று உலகமே கூறிய பம்பாய்க் கலவரத்தை, தனது படத்தின் மூலம் இந்து - முஸ்லிம் கலவரமாக மாற்றிவிட்டார் மணிரத்தினம்.

கலவரத்தின் பின்னணியை அறிந்தவர்களும், அதன் கொடுமையை அனுபவித்தவர்களும் இதைக் கண்டு ஆத்திரப்படுவார்கள். படத்தின் மூலம் கலவரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளும் பெரும்பான்மை மக்களின் மனதிலோ, எழுதாத காகிதத்தில் எழுதப்பட்ட எழுத்தாக மணிரத்தினத்தின் பொய் ஆழப்பதிந்து விடும்.

ஹாலிவூட்டிலிருந்து ராம்போ; பாலிவுட்டிலிருந்து 'பம்பாய்' அந்த வகையில் மணிரத்தினத்திற்கு ஹாலிவூட் செல்லும் தகுதி வந்துவிட்டது.

● கலவரத்தின் முக்கியக் குற்றவாளியான தாக்கரேயை சந்தித்து சமாதானப்படுத்தியிருக்கிறார் அந்தப் பாத்திரத்தில் நடித்த டினு ஆனந்த் என்ற நடிகர். "தாக்க ரேயைச் சித்தரிப்பது எங்கள் நோக்கம் அல்ல" என்று அறிவித்துள்ளார் படத்தின் தயாரிப்பாளர் ஸ்ரீராம்.

தணிக்கைக் குழுவின் ஒப்புதலைப் பெறுவதைவிட, கலவரத்தின் முக்கியக் குற்றவாளிகளான தாக்கரேயிடமும், சிவசேனாவின் அடியாட்களாகச் செயல்பட்ட காவல்துறை அதிகாரிகளிடமும் ஒப்புதல் பெறுவதற்குத்தான் தீவிரமாக முயன்றிருக்கிறார் மணிரத்தினம். கொலையைக் கண்டித்து எடுக்கும் படத்திற்குக் கொலைகாரனிடமே சான்றிதழ் பெறுவது என்ன ஒழுக்க நெறி?

மணிரத்தினமோ 'பம்பாய்யை' விற்று இதுவரை 4 கோடி ரூபாய் சம்பாதித்து விட்டார் என்கின்றனர் திரையுலகத்தினர். கலவரத்தில் விழுந்த பிணங்களிலிருந்து சிவசேனா சம்பாதித்தது முதல்வர் பதவி; மணிரத்தினம் சம்பாதித்தது 4 கோடி. கூடுதலாக சமூகப் பொறுப்புள்ள இயக்குனர் என்ற பாராட்டு வேறு.

பாசமலர் போன்ற கற்பனைக் கதைகளைப் பார்த்து விட்டு மூக்கை உறிஞ்சிக் கொண்டு வெளியே வரும் ரசிகர்கள் 'பம்பாய்' எனும் கொலைக்களத்தைப் பார்த்து விட்டு வெளியே வரும் போது 'அரபிக் கடலோரம்' என்று பாடிக் கொண்டு வருவதற்கு யார் பொறுப்பு?

ஈராக் மீதான அமெரிக்காவின் யுத்தத்தை நேரடியாக ஒளிபரப்பிய சி.என்.என் தொலைக்காட்சி, அதைப் பார்ப்பவர்களிடம் 'சண்டைப்படம்' பார்க்கும் மனநிலையைத் தோற்றுவித்து, நமது கண்முன்னே நடந்த பிணவாடை வீசும் கோரமான மனிதப் படுகொலையையே 'கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக' மாற்றித் தந்திருக்கிறார் மணிரத்தினம்.

● பம்பாய் திரைப்படம் சித்தரிக்கும் கலவரத்தில் சிவசேனாவால் தாக்கப்பட்டவர்களும், ஊரைவிட்டு விரட்டப்பட்டவர்களும் முஸ்லிம்கள் மட்டுமல்ல; தமிழ் நாட்டு 'இந்து'க்களும் தான். பெட்டி படுக்கையோடு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வந்திறங்கிய தமிழ் அகதிகளின் புகைப்படங்களும், கொல்லப்பட்ட தமிழர்களின் கண்ணீர்க் கதைகளும் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. அன்றும் தமிழகம் அமைதியாகவே இருந் தது.

அந்த கண்ணீர்க் கதையைத் திரித்துக் காசாக்கும் மணிரத்தினத்தின் "பம்பாய்" தமிழகமெங்கும் திரையிடப் பட்டிருந்தது. இன்றும் தமிழகம் அமைதியாகவே இருக்கிறது.

ஸ்ரீ சங்கராச்சாரியைப் போன்ற கரடு முரடான பேச்சுக்கள் காஞ்சியில் கிடையாது. மசூதியை இடிப்போம் என்று பகிரங்கமாக அறிவிப்பதில்லை. இடித்ததைக் கண்டனம் செய்து விட்டு பிறகு 'இடிக்கப்பட்ட கட்டிடம்' என்று எழுதுவதுதான் தமிழ் பார்ப்பன ஏடுகளின் உத்தி. முரளி மனோகர் ஜோஷி ரம்பம் என்றால் மணிரத்தினம் அறுவை சிகிச்சைக் கத்தரிக்கோல். என்றாலும் உண்மைகளை வெட்டுவதில் கத்தரிக்கோல் கச்சிதமாகவே செயல்பட்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் பார்ப்பன தேசியத்தின் இறக்குமதியைத் தமிழகம் எதிர்த்தது. இப்போது தமிழகத்திலிருந்து வட இந்தியாவுக்கு ஏற்றுமதியாகிறது பார்ப்பன தேசியம். நேற்று 'ரோஜா' இன்று 'பம்பாய்' அடுத்த பொதுத் தேர்தலுக்கான பாரதிய ஜனதாவின் பிரச்சார வீடியோ தயாரிப்பை அத்வானி, மணிரத்தினத்திடம் ஒப்படைக்கக் கூடும்.

சாப்பியடித்தால் மூளை வளருமா...?

மாணவர்களே! ஆசிரியர் கொடுத்த பாடத்தைச் செய்யத் தெரியாமல் விழிக்கிறீர்களா? பாடத்தை முடிக்காவிட்டால் அடி விழுமே! அப்படியானால் என்ன செய்வது?

உங்களில் சிலர் பாடத்தைச் செய்யத் தெரியாத காரணத்தால் மற்ற மாணவர்கள் செய்த பாடத்தை அப்படியே காப்பியடித்து ஆசிரியரிடம் கொடுத்து விடுவீர்கள்.

இது மிகவும் தவறான வழியாகும். நீங்கள் இப்படிச் செய்வதன் மூலம் பாடம் செய்யத் தெரியாத ஒவ்வொரு முறையும் நீங்கள் காப்பி அடிப்பதையே வழியாகக் கொள்வீர்கள்.

காப்பி அடிப்பதால் உங்களுக்கு விளங்காத அல்லது தெரியாத பாடத்தை தெரிந்து கொள்வதற்கு வழி இல்லை.

ஆகையால் தெரியாத பாடத்தைத் தெரிந்து கொள்வதற்கு சிறந்த வழி ஆசிரியரிடம் விளக்கம் கேட்பதே. அதுவும் முடியாத பட்சத்தில் பாடத்தைச் செய்யத் தெரிந்த சக மாணவர்களிடம் சொல்லித்தருமாறு கேட்கலாம். அவர்கள் உங்களுக்கு நிச்சயமாக உதவி செய்வார்கள்.

அதைவிடுத்து நாற்தோறும் காப்பி அடித்துக் கொண்டே இருப்பதன் மூலம் நம்முடைய மூளை வளர்ச்சியை நாமே தடுத்துக் கொள்கிறோம்.

புள்ளிகளை இணையுங்கள்!
ஒளிந்திருக்கும் பறவையைக் காணுங்கள்!



மாணவ, மாணவிகளே! மேலே உள்ள புள்ளிகளை இணைத்து ஒழிந்திருக்கும் பறவையை இனங்கண்டு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். 12 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களே இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். கீழ் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 14.03.2003 ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரின் உறுதியுடன் பாடசாலை இலச்சினையும் பொறிக்கப்படல் வேண்டும். புள்ளிகளை இணைத்தவருக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

பெயர்: ------------------------------------
வயது:. ------------------------------------
வகுப்பு: ------------------------------------
பாடசாலை முகவரி: ----------------------

அதிபர் / ஆசிரியர் கையொப்பம்:

பாடசாலை முத்திரை:

உங்கள் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு எப்படி உதவலாம்?

குழந்தைகள் தொலைக்காட்சி இல்லாமல் இருக்க முடியாதா? நிச்சயமாக முடியும். தொலைக்காட்சி இல்லாமல் வளரும் குழந்தைகளின் மூளை வளர்ச்சி இன்னும் நன்றாகவே இருக்கும் என்று கூறுகிறார் "தொலைக் காட்சியும் குழந்தைகளின் மனநலமும்" என்ற புத்தகத்தை எழுதிய சூசன் ஆர். ஜோன்சன்.

அவர் கூறும் ஆலோசனைகள் வருமாறு.

1. உங்கள் வீட்டுத் தொலைக்காட்சியை முடிந்த வரை திறந்து வைக்காதீர்கள். இன்னும் குழந்தைகளுக்கு 12 வயது ஆகும் வரையில் தொலைக்காட்சியின் பக்கத்திற்கு அவர்களுடைய பார்வையைத் திருப்பவே வேண்டாம். படம் பார்ப்பதற்கு முன்பதாக புத்தகத்தைப் படிக்க ஆர்வம் ஊட்டுங்கள்.

நம்முடைய குழந்தைகளுக்கு நாம்தான் நல்ல வாழ்க்கை உதாரணங்கள். நாம் மட்டும் விடிய விடிய சினிமாக்களைப் பார்த்துக் கொண்டு, குழந்தைகளைப் பார்க்க வேண்டாம் என்று கண்டிப்பது முறையாகாது. இதனால் அவர்கள் எதிர்காலத்தில் திருட்டுத்தனமாகவோ அல்லது உங்களை எதிர்த்தோ தொலைக்காட்சியைப் பார்க்கலாம்.

தொலைக்காட்சி பார்த்துதான் ஆகவேண்டுமா? அப்படியானால் என்ன பார்க்கிறீர்கள் என்பதைத் தேர்வு செய்யுங்கள். கொலை, கொள்ளை, ஆபாசக் காட்சிகள், பாலியல் வல்லுறவு கொண்ட சினிமாப் படங்கள் அறவே வேண்டாம். அதுவும் குழந்தைகளுக்கு முன்பு அவற்றைப் போட்டு விட்டு வளரும் பிஞ்சுகளுக்கு நீங்களே நஞ்சை விதைத்து விடாதீர்கள்.

குழந்தைகளுக்குப் பொருத்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுங்கள். அவர்களோடு நீங்களும் உட்கார்ந்து பாருங்கள். பார்க்கும் விஷயத்தைக் குழந்தைகளுக்கு விளக்குங்கள். தொலைக் காட்சியிலிருந்து குறைந்தது 4 அடிதூரமாவது தள்ளி உட்காருங்கள்.

தொலைக்காட்சி பார்க்கும் பொழுது உங்களுடைய வீட்டு விளக்குகளை அணைத்து விடாதீர்கள். விளக்குள் எப்பொழுதும் போல் எரிந்து கொண்டிருக்கட்டும்.

2. உங்கள் குழந்தைகளுக்கு நிறைய புத்தகங்களைப் படித்துக் காட்டுங்கள். (புத்தகங்களில் நிறைய வர்ணப்படங்கள் இருக்க வேண்டும்.)அவர்களுக்கு நிறைய கதை சொல்லுங்கள். குழந்தைகளுக்குக் கதை சொல்லும் பொழுது அவர்களுடைய கற்பனை வளத்தை நாம் அதிகப்படுத்துகிறோம். நீங்கள் சொல்லும் கதைக்கு ஏற்றவாறு காட்சிகளை அவர்கள் உருவகப் படுத்திக் கொள்வார்கள். இது அவர்களுடைய சிந்தனைத் திறனை வளர்க்கும்.

3. இயற்கை ஒரு நல்ல ஆசிரியர். இயற்கையின் வாணங்கள் ரசிக்கத்தக்கவை. சிந்தனையைத் தட்டி எழுப்புபவை. தொலைக்காட்சியின் வர்ணக் காட்சிகளுக்கே அடிமையாகி சிந்தனை மழுங்கிப் போன குழந்தைகளை வெளியே கொண்டு செல்லும் பொழுது அவர்களுக்கும் விரைவில் அலுத்துப் போகும்.

இயற்கை கற்பிக்கிறது. ஒரு விஷயத்திற்கு காரணம் என்ன என்று சொந்தமாகவே ஆராயும் தன்மையை இயற்கை குழந்தைகளுக்குக் கொடுக்கிறது. ஆனால் தொலைக்காட்சிக்கு முன் சதா அமர்ந்திருக்கும் குழந்தைக்கு இந்த ஆராயும் தன்மை, சிந்திக்கும் தன்மை குறைவாகவே இருக்கும்.

4. உங்களின் மற்றும் உங்கள் குழந்தையின் உணர்வுகளின் பக்கம் உங்கள் கவனத்தைத் திருப்புங்கள். ஒரு குழந்தை தன்னுடைய சுற்றுச் சூழலில் கேட்பவை, தொடுவது, முகர்வது போன்றவை அதனுடைய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமாகும்.

அதனால், குழந்தைக்கு முன் நல்ல வார்த்தைகளையே உபயோகியுங்கள். உங்கள் செய்கைகள் நல்லவைகளாக இருக்கட்டும். உண்மையே பேசுங்கள். உங்கள் குழந்தையின் கெட்ட செய்கைகளுக்கும் கெட்டவார் த்தைகளுக்கும் நீங்கள்தான் காரணகர்த்தா என்பதை மறந்துவிடாதீர்கள்.

5. குழந்தைகளின் கை, கால்கள் மற்றும் முழு உடம்பையும் பயன்படுத்துமாறு உள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். ஓடுவது, குதிப்பது, ஏறுவது போன்ற நடவடிக்கைகள் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு முக்கியமானவை. வரைவது, வர்ணம் பூசுவது, விரல்களைப் உபயோகிக்கும் போட்டி வகைகள் உங்கள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு வித்திடும்.

இப்படித்தானா?

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம்களின் எவ்வித அடிப்படைத் தேவைகளும் உரிமைகளும் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் உரிய முறையில் வழங்கப்படாததை ஆட்சேபித்து இன்று முதல் நாடாளுமன்றத்தில் சுயேற்சையாக செயற்படத் தீர்மானித்திருக்கிறேன்.

ரிசாட் பதியுதீன்.
28 பெப்ரவரி சுடரொளியில்.

நண்பர் ரிசாட் பதியுதீன் அவர்களுக்கு: நீங்களுமா நம்பிக்கை இழந்து விட்டீர்கள்? வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளுக்கென கிளிநொச்சியில் திறக்கப்பட்டிருக்கும் காரியாலயத்தில் எத்தனையோ கூட்டங்களில் வடக்கு முஸ்லிம்களின் சாரபில் நீங்கள் கலந்து கொண்டிருக்கிறீர்கள். இடம் பெயர்ந்த நமது மக்களின் வாழ்வில் பொன்னான காலம் பிறக்கப் போகிறது என்ற தோரணையில் அறிக்கைகளை பத்திரிகைகளுக்கு விட்டிருந்தீர்கள். இப்போதாவது உண்மை விளங்கி வெளிப்படையாகச் சொன்னதற்கு காரணம் வடக்கு முஸ்லிம் மக்களிடமிருந்து உங்கள் தலையை காப்பாற்றிக் கொள்வதற்குத்தான் என்பது தெரிந்தவர்களுக்குத் தெரிந்த விடயமாகும்.

அதுசரி, பாராளுமன்றத்தில் நீங்கள் சுயேட்சையாக இயங்கினால் நமது மக்களுக்கு எல்லாம் சரிவந்து விடுமா? இக்கதைகளையும் இப்பத்திரிகை அறிக்கைகளையும் விட்டு விட்டு உருப்படியான காரியத்தை இனிமேலாவது செய்யப்பாருங்கள்!

பொதுஜன முன்னணிக்குள் யார் எதிர்த்தாலும் ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்வதை யாராலும் தடுக்க முடியாது.

சரத் அமுனுகம.

ஜே.வி.பி.யுடன் இப்போது நீங்கள் கூட்டுச் சேர்ந்து இயங்கவில்லை என்றா சொல்கிறீர்கள்? இப்போதும் கூட்டுடன்தானே எல்லாம் நடக்கிறது. ஆட்சியை மாற்றினால் எல்லாம் சரிவந்து விடுமென்றா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தேசிய இனப்பிரச் சினைத்தீர்வில் ஜே.வி.பி.யினதும் உங்களினதும் நிலைப்பாடு ஒன்றுதானா? அப்படியானால் இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் கதி என்ன? அம்மக்களுக்கு என்ன சொல்கிறீர்கள்? மலைபோல் உயர்ந்துவிட்ட வாழ்க்கை செலவுப் பிரச்சினையை ஜே.வி.பி. யுடனான உங்கள் கூட்டு, மந்திரத்தால் மாற்றி விடுமா என்ன?

பொலிஸ் உயரதிகாரிகள் சிலரும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் சிலரும் பாதாள உலகக் கோஷ்டிகளின் பணத்திற்கு அடிமையாக இருக்கின்றனர்.

பொலிஸ்துறை மந்திரி,
ஜோன் அமரதுங்க.

நீங்களே சொல்லி விட்டீர்கள் தானே! இதைத்தான் மக்களும் நீண்டகாலமாய் சொல்லி வருகின்றனர். இப்போது நீங்கள் சொல்லிவிட்டு சும்மா இருந்தால் சரியா? உரிய மறுசீரமைப்பை எப்போது செய்யப் போகிறீர்கள்? இன்னும் நூறு வருடங்களுக்குப் பிறகாவது இச்சீரமைப்பு நடக்குமா மந்திரியாரே!

கரிகாலன் வன்னிக்கு அழைக்கப்பட்டதில் எவ்வித தனிப்பட்ட காரணமும் கிடையாது! அவர் முன்னரைவிட பொறுப்புமிக்க பணியில் அமர்த்தப் பட்டுள்ளார். எமது அமைப்பைப் பொறுத்தவரை நிர்வாகக் கட்டமைப்பு அவ்வப்போது மாறும். அந்த வகையிலேயே இந்த மாற்றமும் நிகழ்ந்துள்ளது.

"போரின் பேச்சுவார்த்தையின் பின்
நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில்
புலிகளின் கிழக்குத் தளபதி கருணா"
24 பெப்ரவரி, வீரகேசரி.

இப்போதாவது உண்மையை வாய் திறந்து சொல்லிவிட்டீர்கள்! முஸ்லிம்கள் விடயத்தில் கரிகாலன் தவறாக நடந்து கொண்டார் என்பதற்காக அவரைத் தண்டிக்கும் நோக்கிலே அரசியல் பொறுப்புத்துறையை கரிகாலனிடமிருந்து பிரபாகரன் அவர்கள் பறித்து, பதவியிறக்கம் செய்துள்ளதாக எமது தலைவர்கள் பொய் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இப்போது எமது தலைவர்களின் பொய்ப் பிரச்சாரத்தை நீங்கள் முறியடித்து விட்டீர்கள். இனி நமது தலைவர்கள் இந்த விடயத்தில் என்ன சொல்லப் போகிறார்கள்.

ஹக்கீம் ஹிஸ்புல்லா ஊடலும் கூடலும்!

காத்தான்குடியில் நடைபெற்ற முஸ்லிம் ஊடகவியலாளர் மாநாடு பலத்த எதிர்பார்ப்பை உருவாக்கி இருந்தது. ஹக்கீமும் ஹிஸ்புல்லாவும் காத்தான்குடியில் ஒரே மேடையில் சந்திக்க இருப்பதே இவ் எதிர்பார்ப்பிற்கு பிரதான காரணமாகவிருந்தது. ஹக்கீமுக்கு காத்தான்குடி சென்று ஹிஸ்புல்லாஹ்வின் ஆதரவாளர்கள் மத்தியில் தோன்றுவது முன்பு சவால் நிறைந்ததாக இருந்தாலும் அண்மைக் காலத்தில் ஹிஸ்புல்லாவுக்கும் அவருக்குமிடையில் ஏற்பட்டு வரும் உறவுகளின் காரணமாக "சவாலை சமாளிக்க வேண்டிய தேவை ஹக்கீமுக்கு இருக்கவில்லை." கடந்த பொதுத் தேர்தலின் போது முஸ்லிம் காங்கிரஸின் பிரச்சாரக் கூட்டங்களைக் கூட காத்தான்குடியில் நடாத்துவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினருக்கு ஹிஸ்புல்லா அனுமதிக்கவில்லை. ஹக்கீம் கலந்து கொண்ட இறுதி தேர்தல் கூட்டமும், கல்வீச்சு, கூக்குரல் என அல்லோலகல்லோலப்பட்டு இரவிரவாக மட்டக்களப்பு நோக்கி ஹக்கீமை பயணிக்க வைத்திருந்ததை அனைவரும் அறிவர்.

இன்று நிலைமை அப்படி இல்லை. இது ஒரு தேர்தல் காலமும் அல்ல; ஆனாலும் எதிர்காலத்தில் பொதுத் தேர்தல் ஒன்றிற்கான சூழல் தோன்றிவிட்ட நிலையில் ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொள்வாரா என்ற எதிர்பார்ப்பு காத்தான்குடி மக்கள் மத்தியில், குறிப்பாக ஹிஸ்புல்லாஹ்வின் ஆதரவாளர்கள் மத்தியில் உருவாகி வருகிறது. இதற்கான சமிக்ஞையை இருதரப்பாரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் காட்டியே வருகின்றனர்.

இதனை மெய்ப்பிக்கும் வகையிலேயே காத்தான்குடியில் நடைபெற்ற முஸ்லிம் ஊடகவியலாளர் மாநாட்டில் ஆற்றப்பட்ட ஹிஸ்புல்லாவின் தொடக்கவுரை இருந்தது. "உங்கள் தலைமைக்கு நான் சவாலாக இருக்க மாட்டேன்" என்ற வாக்குறுதியுடன்தான் அவர் தனது பேச்சைத் தொடங்கினார். வந்து இருந்த ஊடகவியலாளர்கள் முன்பும், தமது ஆதரவாளர்கள் முன்பும் ஊடகவியலாளர் மாநாடு தொடங்குவதற்கு முன்பே இருவரும் தனித்தனியே சந்தித்து ஹிஸ்புல்லாவின் காரியாலயத்தில் உரையாடியும் இருந்தனர். அந்நியோன்னியமான நட்பு இருவரிடையே ஏற்பட்டிருப்பது கண்டு காத்தான்குடி மக்களுக்கு மகிழ்ச்சி; ஹிஸ்புல்லாவுக்குத் தேவை அடுத்த முறையும் எம்.பியாக வந்துவிட வேண்டும். ஹக்கீமுக்குத் தேவை தலைமைத்துவத்திற்கு சவால் இல்லாத ஹிஸ்புல்லாஹ். ஊடகவியலாளர் மாநாட்டில் ஹிஸ்புல்லா அதனை மக்கள் முன் வைத்து ஹக்கீமிடம் சொன்னதன் பின்பும் - ஹிஸ்புல்லாவை இணைத்துக் கொள்வதில் ஹக்கீம் ஏன் தயக்கம் என்கின்றனர் காத்தான்குடி மக்கள்.

கூட்டத்தில் பேசிய ஒரு கட்டத்தில், சற்று உணர்ச்சிவசப்பட்டு தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஹக்கீம் தலைமைவிட்ட தவறை ஹிஸ்புல்லா சுட்டிக் காட்டினார். அதன் பின்பு பேசிய ஹக்கீம் அதற்கு சற்று சூடாக மறுப்புக் கொடுத்தார். பார்த்துக் கொண்டிருந்த ஆதரவாளர்களுக்கு "வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்துவிடுமோ" என்ற பயம் பீடிக்கத் தொடங்கியது. மனசு படபடத்தது. எங்கே பழையபடி இருவரும் எதிரும், புதிருமாக மாறிவிடுவார்களோ என்ற பதட்டம் காணப்பட்டது. கூட்டம் முடியும் வரை ஆதரவாளர்கள் பலருக்கு இருப்புக் கொள்ளவில்லை. கொழும்பில் தொடர்ந்த அந்தரங்க உறவை "மீடியா போரம்காரர்கள்" காத்தான்குடியில் கலைத்து விடுவார்களோ என்ற எண்ணத்தில் கூட்ட ஏற்பாட்டாளர்களை மனதுக்குள் திட்டித் தீர்க்கவும் தவறவில்லை.

எதிர்பார்த்தது போல் விபரீதம் எதுவும் நடந்துவிடவில்லை. கூட்டம் முடிந்து இருவரும் மிக அந்நியோன்யமாக உரையாடி ஹிஸ்புல்லா அளித்த விருந்தில் இருந்ததைக் கண்டுதான் மனசுக்கு நிம்மதி பிறந்தது. மீடியா போரம்காரர்களுக்கும் மனதுக்குள் ஒரு சபாஷ் போடவும் அவர்கள் தவறவில்லை.

ஆனால் என்னதான் இருந்தாலும் தொடர்ந்தும் நெருப்பின் மேல் நின்று கொண்டிருக்கலாமா? ஒன்று ஹக்கீம் வாய் திறந்து சொல்ல வேண்டும் ஹிஸ்புல்லாவை நாம் முஸ்லிம் காங்கிரஸில் சேர்த்துக் கொண்டோமென்று. அல்லது ஹிஸ்புல்லா சொல்ல வேண்டும் நான் முஸ்லிம் காங்கிரஸில் சேர்ந்து விட்டேன் என்று.

தொடர்ந்தும் இருவரும் ஏன் எங்களை டென்சனாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? என்பதே ஹிஸ்புல்லா ஆதரவாளர்களின் கேள்வியாகும்!

நீங்களும் எழுதலாம் விவாதக் களம்

பேரினவாதங்களின் நசுக்குதல்களும், முஸ்லிம்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப்பறித்து ஏப்ப மீறும் சூழல்களும் மலிந்து காணப்படும் நிலையில் மக்களுக்கான அரசியல் நடாத்துவதில் மிகுந்த அவதானம் தேவைப் படுகின்றது. மக்களுடைய பிரச்சினைகளை இனங்கண்டு ஒன்று திரட்டி அவற்றிற்காகப் போராடுவதற்கு தயாராக இருப்பதிலிருந்தே மக்களுக்கான அரசியல் நடத்துவது ஆரம்பமாகின்றது. இதற்கு நமது நாட்டில் நல்லதொரு உதாரணமாகத் திகழ்பவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளாவர்.

ஒரு நாட்டின் இராணுவத்துடன் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டும், எதிரிகள் பற்றிய விழிப்புணர்விலிருந்து விடுபட்டுக் கொள்ளாமலும் அதேநேரம் மக்களுடைய பிரச்சினைகளை ஆவணப்படுத்தியும் அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சரியான திட்டத்துடன் விடுதலைப் புலிகள் இருந்திருக்கின்றனர். இது ஒரு சாதாரண காரியமல்ல. ஆயுதப்போராட்டத்திற்கு மத்தியிலும், மறைந்து வாழும் சூழலிலும் தமது மக்களின் பிரச்சினைகளை அதுவும் ஓர் உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தை மேசையில் ஆதாரச்சான்றாகக் கொள்ளத் தக்கதாக ஆவணப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதும் அடுத்தவர்கள் படிப்பினை பெறக்கூடியதுமாகும்.

பேச்சுவார்த்தை மேசையில் எப்படிக் கலந்து கொள்ள வேண்டும். எவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும். போன்ற அனைத்து விடயங்களிலும் முன்மாதிரியாக விடுதலைப் புலிகள் தம்மைக் கட்டமைப்புப்படுத்தியிருக்கின்றனர் என்பதை நடைமுறை ரீதியாகக்காணும் போது நாம் ஆச்சரியப்படாது இருக்க முடியாது.

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் எவ்வாறு பீறிடும் என்பதையும், நமது போராட்டங்களை எவ்வாறு சர்வதேச ரீதியாக நியாயப்படுத்துவதென்பதையும், அங்கீகரிக்கத்தக்க ஆவணங்களை எப்படி ஒன்று திரட்ட வேண்டும் என்பதையும் விடுதலைப்புலிகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள நிறையவே உள்ளது.

இரு வேறுபட்ட அடக்குமுறைகளுக்குள் ஒடுக்கப்பட்டவர்களாக முஸ்லிம் சமூகம் இலங்கையில் பேரினவாதங் களின் அழுத்தங்களுக்குள் பலியாகிக் கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்வு பூர்வமாக உணர்ந்து கொண்டோம் என் பதை மெய்ப்படுத்த, செம்மையான முடிவு களை நோக்கிப் பயணிப்பதற்கான தயார் நிலைகளை எம்மிடையே ஏற்படுத்தத் தவறி வந்திருக்கின்றோம் என்பதுவே இன்றைய சமகால அரசியலில் நமது நிலையாக இருக்கின்றது.

நமது இன்றைய நிலைக்கு கூட்டு மொத்தமாக நமது தலைமைகளின் பல வீனங்கள்தான் காரணமென்க் கூறிவிட்டு தப்பித்துக் கொள்வது அல்லது நழுவிச செல்வது நமக்கு எந்த ஆரோக்கியமான முடிவுகளையும் தந்துவிடப்போவதில்லை.

மக்கள் எழுச்சி அல்லது மக்களின் உந்துசக்திகள் என்பன நமது தலைமைத் துவத்தை நோக்கி விரிக்கப்பட்டிருக்கின்றது. இதற்குச் சான்று பகரும் பல தடயங்களிலிருந்தும் நாம் உதாரணங்களுடன் விளங்கிக்கொள்வதற்கு பின்வருபவை போதுமானவை. நமது விடுதலைப் பயணத்திற்கு மிக இன்றியமையாத தேவை "நம்மை நாமே ஆளும் நிர்வாகம்" ஒன்றென்று கூறியபோது அதனை அங்கீகரிக்கும் வகையில் அக்கொள்கையை முன்மொழிந்தவர்களை தமது பாராளுமன்ற பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து உறுதிப்படுத்தினர் நமது மக்கள்.

அண்மையில் கூட நமது மாணவர் சமூகம் மக்கள் திரட்சியை ஒன்று கூட்டி, நமது பிரச்சினைகளுக்கான தீர்வினை முன்னெடுக்க வலியுறுத்திய சூழலும் நமது மக்களின் பங்களிப்பையும், ஆதரவையும் ஒன்று கூடலின் மூலம் நிரூபித்துக் கொண்டே இருக்கின்றனர். இவைகளெல்லாம் நமது போராட்ட உணர்வுகள் இன்னும் அதிகரித்த நிலையிலும் பல் பரிமாணங்களைக் கொண்டதாகவுமே இருக்கின்றன.

ஆகவே நமது தலைமைகள் நமது மக்களின் தலையில் அனைத்தையும் போட்டுவிட்டு தம்மை அதிலிருந்து விடுவித்துக் கொள்ளும் தப்பியோடல் வழிகள் இல்லாத நிலையில்தான் இப்போது இருப்புக் கொண்டிருக்கின்றனர். சுயநலம் மிகுந்த அரசியல் செய்வதில்தான் நமது தலைமைகள் ஆர்வத்தினையும் ஈர்ப்பினையும் கொண்டிருக்கின்றதென்பது தெட்டத் தெளிவாகக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமன்றி, இனப்பிரச்சினையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களாக நாமிருந்தும் நமது பிரச்சினைகளை இனங்காண்பதிலும், அதனை முறையாக முன்னெடுக்கும் வகையிலான ஆவணங்களை ஒன்று திரட்டுவதிலும், நமது நியாயத்தின் பாலான சர்வதேசப் பார்வையைத் திருப்புவதிலும் சரியான முயற்சிகளை நமது தலைமைகள் இதுவரை மேற்கொள்ளவில்லை.

நம்மிடம் இருக்கின்ற பலவீனங்களை அடுத்தவர்களுக்கு எடுத்துக்காட்டும் அளவில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். இதற்கு முக்கிய காரணம் தமது பதவி நலனிலிருந்து அரசியலிருந்து இன்னும் விடுபடாத அரசியலை செய்து கொண்டிருப்பதுதான் என்பது மிக வெளிப்படையானது. இந்நிலையிலிருந்து நமது தலைமைத்துவங்கள் தம்மை விடுவித்துக்கொண்டு, மக்கள் நலன்களைப் பேணும் அரசியலை நடாத்தும் நிலைக்கு சமகாலத்திலும் எதிர்காலத்திலும் வர வேண்டும்.

எம்.கே. அப்துல் ரகுமான்
மீராவோடை

வாழைச்சேனையில் முஸ்லிம் வர்த்தகரின் கடை எரிப்பு

கடந்த 01ம் திகதி இரவு வாழைச்சேனை நகரில் அமைந்திருந்த முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான "ஹார்ட்வெயார்" கடையொன்று, திட்டமிட்டு கொள்ளையடிக்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக நமது வாழைச்சேனை செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

அல்ஹாஜ் அகமட் லெப்பை என்ற வர்த்தகருக்குச் சொந்த மான இக்கடை எரிப்பினால் 10 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மீளவும் அவ்விடத்தில் தொழில் செய்ய முடியாத பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகவும் சம்பந்தப் பட்ட கடை உரிமையாளர் கூறுகிறார்.

கடந்த ஜூன் மாதம் வாழைச்சேனை நகரில் அமைந்திருந்த முஸ்லிம்களின் பொருளாதார நிலைகளைத் திட்டமிட்டுத் தாக்கி பல கோடி ரூபாய் இழப்பினை ஏற்படுத்திய சம்பவத்திற்குப் பின், வாழைச்சேனை நகரில் எரிக்கப்பட்ட கடைகளில் இது இரண்டாவதாக உள்ளது. கடந்த மாதம் நௌசாட் என்பவருக்குச் சொந்தமான கால்நடை விற்பனை நிலைய மொன்று திட்டமிட்டு கொள்ளையடிக்கப்பட்டதன் பின் தீ வைத்து எரிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. இக் கடை எரிப்பின் பின்னால், வாழைச்சேனை நகரில் உள்ள முஸ்லிம்களின் வியாபார ஸ்தலங்களை அகற்றுவதற்கான பெரும் திட்டமொன்று உள்ளது வெளிப்படுகிறது.

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு அனுசரணையாளர்களாக விளம்பரம் செய்யுங்கள்

*முஸ்லிம் குரலில்
செய்தியாளராக விரும்புகிறீர்களா?
முஸ்லிம் குரலின் வளர்ச்சியில்
பங்குதாரராக பங்களிக்கத் தயாரா?
நீங்கள் செய்ய வேண்டியது.....
உங்கள் எழுத்தாற்றலை நிரூபிக்கும்
வகையில் உங்கள் பிரதேச செய்திகளை,
அரசியல் அவதானங்களை, தெளிவுடன்
எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் முழு விபரத்துடன்!*

*ஆதாரத்துடன்
செய்திகள் எழுதப்படுவதோடு
நீதிமன்ற, பொலிஸ்,
அடக்குமுறை செயற்பாடுகளை
எதிர் கொள்வதற்கும் நெஞ்சுரத்துடன்
இருப்பதே சிறந்த தகுதி!*

*நமது பத்திரிகையின் பங்குதாரராக
விரும்புவர்கள் நமது பத்திரிகையின்
பிரதிகளை மக்கள் மத்தியில் விநியோகம்
செய்து நமது மக்களுக்கும்
பத்திரிகைக்குமான
உறவினை பலப்படுத்த வேண்டும்.
சமூகப் பங்களிப்புக்கு தயாரானவர்கள்
முன்வரலாம் - முன் மாதிரியாகவும்
செயற்படலாம்!
அதிக ஆவலுடன் உள்ளோம்!*

சுவடு - 03
முஸ்லிம் குரல்
Muslim Kural
මුස්ලිම් කුරල්
07 மார்ச் 2003 03 - முஹர்ரம் - 1424
Chief Editor, 143, Muhandhiram Road, Colombo - 03.
Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk

முஸ்லிம்களின் அரசியல் வாழ்வு தமிழ்-சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல!

தமிழ், சிங்கள மக்களுடன் நமது மக்களின் சார்பில் நாம் பேச விரும்புகிறோம்! நீண்டகாலமாய் அடக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டு வந்த முஸ்லிம்களாகிய நாம், நமது மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கும் நம்பிக்கை தரும் எதிர்காலத்திற்குமாக எமது மக்களின் பிரச்சினைகளை பேசுவதும் அதற்காகப் போராடுவதும் அதற்கான அரசியல் சூழலை முன்கொண்டு செல்வதும் தமிழ், சிங்கள மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒரு போதும் எதிரானது அல்ல.

இலங்கையின் அரசியல் வரலாற்றை நாம் அனைவரும் அறிவோம். பிரிட்டிசாரின் காலனித்துவ சிந்தனையின் வடிவமாக உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியல் சாசனம், இலங்கையின் தேசிய இனங்கள் அனைத்தையும் மிக மோசமாக நசுக்கியும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு இரத்தம் சிந்தி அழிவுகளைத் தரும் "அரசியல் மேலாதிக்க" சிந்தனையையும் விதைத்துவிட்டுச் சென்றதை நாம் இதுவரை அனுபவித்து வருகிறோம்.

பிரிட்டிசார் கப்பலேறிய பின்னும் அவர்கள் விதைத்த விச விதை விருட்ஷமாகி அழகிய இலங்கையின் இதயத்தையே சின்னாபின்னப்படுத்திவிட்டது. கையில் கிடைத்த அரசியல் அதிகாரத்தைக் கொண்டு பெருந்தேசிய இனமாகிய சிங்கள மக்களின் அதிகாரத்தரப்பு, நாட்டின் சொந்த மக்களான ஏனைய தேசிய இனங்களை மிக மோசமாக அரசியல், சமூக, பொருளாதார, கலாசார தளங்களில் நசுக்கியும் புறக்கணித்தும் வந்தது.

தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை உதாசீனம் செய்து அதிகார மமதையில் சக தேசிய இனங்களினை இரும்புக்கரம் கொண்டு அடக்கி ஒடுக்கியது. ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் இவ்வொடுக்குமுறைக்கு எதிரான குரல்கள், செயற்பாடுகள், மக்கள் அணிதிரட்டல்கள், போராட்டம் என வரலாற்று வழியில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களினது அரசியல் முன்னெடுப்புகள் நிகழ்ந்து வந்திருக்கின்றன.

தமிழ் மக்களின் நியாயமான தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாத நிலையில் - சாத்வீக வழியில் போராடிய தமிழர் தேசிய இனம் ஆயுதப்போராட்டத்தில் இறங்கியது. முஸ்லிம்களும் மலையகத்தமிழர்களும் பாராளுமன்ற ஜனநாயக வழியில் தங்களது [illegible] முஸ்லிம், மலையக தமிழ் தேசிய இனங்களின் அரசியல் போராட்டங்களாக அந்தந்த தேசிய இனங்களின் மத்தியிலிருந்து அரசியல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக முஸ்லிம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பாக தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் மிகத்தவறான புரிதல்களை ஏற்படுத்துவதற்கு ஆதிக்க ஊடகங்களும், அரசியல் நிறுவனங்களும் மிகத்தீவிரமாகச் செயற்பட்டுவருகின்றன. மிக நீண்ட காலமாய் சிங்கள ஊடகங்கள் தென்னிலங்கை முஸ்லிம்களுக்கெதிராக திட்டமிட்டு செயற்பட்டு வந்ததை, வருவதை நாமறிவோம். அண்மைக்காலத்தில் மிகக்குறிப்பாக விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு "முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளுக்கு" காயடிக்கும் வகையில் முஸ்லிம்கள் மீதான தப்பெண்ணங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகின்றது. இதன் பின்னணியில் தமிழ் ஆதிக்க அடக்குமுறை சக்திகளின் கரங்கள் பலமாக உள்ளதை மக்களாகிய நாம் அறிவோம்.

இந்நிலையில் தமிழ் மக்களாகிய நீங்கள், குறிப்பாக அடக்கப்பட்ட மக்களாகிய நீங்கள் - அடக்கப்பட்டுவரும் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பாக ஒரு நியாயமான பார்வைக்கு திரும்பவேண்டிய அவசிய த்தை உணர்தல் வேண்டும். எங்களின் நியாயமான அரசியல் வாழ்விற்கான குரலுக்கு, உங்களின் ஆதரவு என்றென்றும் வேண் டும்.! ஏனெனில் உங்களின் நியாயமான அரசியல் போராட்டத்தை எமது மக்கள் என்றென்றும் ஆதரித்து நின்றவர்கள், நிற்பவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இது பற்றி அடுத்த இதழில் விரிவாகப் பேச எண்ணியுள்ளோம்.!

அன்புடன்
பிரதம ஆசிரியர்

இப்பத்திரிகை 143, மு[illegible] நிறுவனத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.